



# உன் உள்ளம் நானறிவேன்

மேற்கு நோக்கி சூரியகாந்திப் பூக்கள் முகம் காட்டிக்
கொண்டிருந்தன. ஒரு வரிசை முழுக்க கிட்டத்தட்ட ஐம்
பது தொட்டிகளில் சூரியகாந்தி செடிகள்தான்! கையக
லத்துக்கு கொத்துக் கொத்தாய் பளீரென்ற மஞ்சள் நிறத்
தில் பூத்திருக்கும் அழகே தனிதான்! அவைகளைப் பார்க்
கும்போதெல்லாம் சுகந்திக்கு நந்தனாவின் நினைவு
நெஞ்சைக் கவ்வும்.

சிறுவயது முதலே தோட்டக்கலையில் ஈடுபாடுக்
கொண்டிருந்த சுகந்தி படித்ததும் பி.எஸ்சி. அக்ரிகல்ச
சர்தான். தன் தணியாத தாகத்தை நர்சரி வைத்து ஓரளவு
தணித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு ஏக்கர் பரப்புள்ள
இடத்தை வாடகைக்கு எடுத்து, இரண்டு பேரை
வேலைக்கமர்த்தி நடத்திக் கொண்டிருக்கிறாள். கிட்டத்
தட்ட எல்லா வகை பூச்செடிகளும், காய்கறி, குரோட்
டன்ஸ் செடிகளும் அங்கு கிடைக்கும்.

மும்பை பாந்த்ரா பகுதியில்தான் அவள் குடியி
ருப்பு! கையை திருப்பி மணிக்கட்டைப் பார்த்தாள்.

பிற்பகல் மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. நர்
சரி சாவியை ஒரு வேலையாளிடம் கொடுத்துவிட்டு தன்
ஸ்கூட்டி பெப்ட்-ஐ கிளப்பி பள்ளிக்குச் சென்றாள்.

அவளுடைய ஏழு வயது மகள் விஷ்ணுப்ரியாவை
அழைத்துக் கொண்டு வரவேண்டும்.

''மம்மி... இந்த டிரஸ் போட்டுக்கட்
டுமா?'' விஷ்ணுப்ரியா பீரோவிலிருந்த
துணிகளை களைத்து, காக்ரா சோளியை



எடுத்து
வந்து காட்டி
னாள்.

உருளைக் கி
ழங்கு போண்டாவை
சமைத்துக் கொண்டிருந்த
சுகந்தி அலுத்துக் கொண்டாள்.

''என்ன அவசரம்
உனக்கு... வேலைய முடிச்சிட்டு
வந்து எடுத்து தர மாட்டேனா?''

''டைமாகுதே... நான் என் வேலைய
பார்த்துக்கறேன்... சொல்லு இதைப் போட்
டுக்கட்டுமா?''

''சினிமாவுக்குதானே போறோம்? இவ்வளவு
கிராண்டா வேண்டாம்... ஜீன்ஸும், டாப்ஸும் போட்
டுக்க. வா... சூடா இதை சாப்பிட்டுக்க.''

''வேணாம் மம்மி... பசிக்கலே!''

''சொல்றதைக் கேள்டா... அப்புறம் படம் முடிஞ்சு ஹோட்

**ஆர். மணிமாலா**

டலுக்கு போய் சாப்பிட ரொம்ப லேட்டாயிடும். பசிக்கும்... சாப்பிட்டுக்க...''

''ம்ம்...'' சிணுங்கியபடி வந்தமர்ந்தாள். ''டைமாகுதே... நீ எப்பமா டிரஸ் பண்ணுவே?''

''இதோ முடிச்சாச்சு. குளிச்சிட்டு பண்ண வேண்டியதுதான்.''

மகளுக்கு பரிமாறிவிட்டு, தானும் தயாரானாள்.

ஞாபகமாய் ரிசர்வ் செய்திருந்த டிக்கெட்டுகளை தன் பேகில் வைத்துக் கொண்டாள்.

கணவன் வந்ததும் டிபன் சாப்பிட்டுவிட்டு கிளம்ப வேண்டியதுதான். டீ குடிக்க வேண்டும் போல் இருந்த ஆவலை அடக்கிக் கொண்டாள்.

'அவர் வந்ததும் ஒரேயடியாக போட்டு குடித்துக் கொள்ளலாம்' எண்ணிக் கொண்டே பின்பக்க கதவை ஜாக்கிரதையாய் இழுத்துப் பூட்டினாள்.

''மம்மி... எப்ப மம்மி சினிமாவுக்கு போகலாம்?'' பொறுமையிழந்திருந்தாள் விஷ்ணுப்ரியா.

''இதோ... டாடி வந்ததும் கிளம்பிடலாம்.''

''டாடி எப்ப வருவார்?''

''வந்துடுவார்ம்மா'' என்றபடி பால்கனியில் போய் நின்றாள்.

சந்தடி மிகுந்த அந்த தெருவில் கண்ணுக்குத் தெரிந்தவரை கவுதமின் மாருதி தென்படவில்லை.

'நேரமாகிவிட்டதே... அஞ்சு மணிக்கெல்லாம் வந்துடறேன்னு சொன்னாரே... இன்னும் ஏன் வரவில்லை?'

யோசனையுடன் கணவனின் செல்லுக்கு முயன்றாள். அது சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

கவுதம் வசீகரமான அழகுக்கு சொந்தக்காரன். முப்பத்திரண்டு வயது. பன்னாட்டு நிறுவனத்தில் வேலை. கைநிறைய சம்பளம்.

நேரம் ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

அவன் போனுக்கு முயற்சி செய்து... செய்து ஓய்ந்துப் போனாள். அலுவலக போனிலும் பிடிக்க முடியவில்லை. மீட்டிங் நடந்துக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். அவனைத் தொடர்பு கொள்ளவே முடியவில்லை.

கேட்டு, கேட்டு அலுத்துப் போன விஷ்ணுப்ரியா சோபாவில் அமர்ந்தபடியே உறங்கி விட்டாள்.

பொறுமையிழந்துப் போன சுகந்தி நேரத்தைப் பார்த்தாள்.

ஏழரை என்றது.

சுர்ரென கோபம் ஏற டிக்கெட்டுகளை எடுத்து கிழித்துப் போட்டாள்.

சரியாய் எட்டு மணிக்கு கவுதமின் கார் வந்து நிற்கும் ஓசைக் கேட்டது.

அவன் படியேறி மேலே வருமுன் கதவைத் திறந்துவிட்டு வந்தமர்ந்துக் கொண்டாள்.

உள்ளே வந்த கவுதம் கீழே இறைந்துக் கிடந்த டிக்கெட் துண்டுகளைப் பார்த்து தோள்களை குலுக்கிக் கொண்டான்.

''நியாயம்தான்! உன்னிடத்தில் நானிருந்தால், நானும் இதைதான் செய்திருப்பேன். நீ டிக்கெட்டை கிழிச்சுப் போட்டதற்காக வருத்தப்பட மாட்டேன் கண்மணி... ரொம்ப டயர்டாயிருக்கேன். உன் கையால மசாலா டீயை போட்டுத் தாயேன் சுகந்தி... ப்ளீஸ்...!'' சாக்ஸை கழற்றியபடி கெஞ்சினான்.

அவள் அசையவில்லை.

பக்கத்தில் அமர்ந்து தோளில் கைப்போட்டான்.

அவனை காட்டமாய் முறைத்துவிட்டு கையைத் தட்டி விட்டாள்.

''ரொம்ப கோபமோ? நியாயம்தான். நானாவது போன் பண்ணி சொல்லியிருக்கணும். ஆனா, ஒரு சஸ்பென்சோட வந்திருக்கேன். சினிமாவை விட முக்கியமான விஷயம்.''

''...?!''

''எதுக்குமே அசர மாட்டியா சுகி? ஆனாப் பாரேன்... எனக்கு உன்கிட்ட ரொம்ப, ரொம்ப பிடிச்சதே இந்த கோபம்தான். அந்த கோபத்தோட என் நெஞ்சுல குத்தி... குத்தி அப்படியே சாய்ஞ்சு விசும்புவியே... அதுக்காகவே போன் பண்ணலே...''

''...?!''

''பாவம்... ப்ரியா குட்டி என்னை எதிர் பார்த்து, பார்த்து தூங்கிட்டாளா?''

''...?!''

''டீ போட்டு தரமாட்டே... நானே போட்டுக்கறேன். உனக்கும் போடவா? பதில் சொல்ல மாட்டியா?'' அவளையே குறும்புடன் பார்த்தபடி கிச்சனுக்குள் சென்றான்.

சுகந்திக்கு எரிச்சலாய் இருந்தது.

'மனுஷன் ஜாலியாய் இருக்காரே... ஃபீல் பண்ணவே மாட்டாரா?'

பாலில் டீத்தூளை கொட்டி ஸ்டவ்வில் சிம்மில் வைத்துவிட்டு, பாத்ரூம் சென்று முகம் கழுவிக் கொண்டான். வேறொரு பேண்ட் ஷர்ட்டை அணிந்துக் கொண்டான்.

அவனையே வியப்புடன் பார்த்தாள் சுகந்தி.

'மறுபடி எங்கே கிளம்புகிறார்? என்னவோ சஸ்பென்ஸ் என்றாரே... என்னவாயிருக்கும்?'

"இந்தா... ஜாலி மூடில் போட்ட டீ... சூப்பராயிருக்கும்... குடிச்சுப் பார்!"

"ஏன் லேட்டு... அதைச் சொல்லுங்க!" என்றாள் அவனைப் பார்க்காமலே... கோபத்துடன்.

"அப்பாடா... என் ராஜாத்தி ஒரு வழியாய் பேசியாச்சு. டீ குடி, ப்ரியாவை எழுப்பு... ஹோட்டல்ல போய் சாப்பிட்டு ஜுஹூ பீச்சுக்கு போய்ட்டு வரலாம்."

"இன்னும் பதிலே வரலே..."

"மொதல்ல... டீயை குடிச்சிட்டு... எப்படியிருக்குன்னு சொல்லு... அப்புறம் நான் சொல்றேன்..."

"நீங்க மொதல்ல சொல்லுங்க..."

"இல்லே... எனக்காக நீ வெயிட் பண்ணி எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டேன்னு தெரியும். குடி சொல்றேன்."

கோபம் குறையாமல் குடித்தாள்.

"எப்படியிருக்கு?"

"ம்"

"ம்ன்னா? எப்படியிருந்துச்சுன்னு வாயத் திறந்து சொல்லேன்!"

"டீக்கடை வைக்கிற அளவுக்கு... போதுமா? இப்பவாவது சொல்லுங்களேன்!"

"ஜோக்கு? ம்... நேரம்! ஒரு நிமிஷம் பொறு... ஆறிப் போயிடறதுக்குள்ளே நான் குடிச்சிடறேன்." குடித்துவிட்டு தன் தோளை தானே தட்டிக் கொடுத்தான்.

"பரவாயில்லேடா கவுதம்... சும்மா சொல்லக்கூடாது. உன் பொண்டாட்டிய விடவும் பிரமாதமாவே டீ போடறே!"

"ஸ்ஸ்... கடவுளே!" பொறுமையிழந்தாள் சுகந்தி.

"ஒக்கே... ஒக்கே... சொல்லிடறேன்... நீ மட்டுமல்ல, நானும் ரொம்ப நாளா.. ம்ஹூம், ரொம்ப வருஷமா எதிர்பார்த்த ஒரு விஷயம் நிறைவேறிடுச்சு."

"என்ன விஷயம்?"

"மும்பைக்கு வந்ததும் நீ என்ன சொன்னே?"

"என்ன சொன்னேன்? லாங்வேஜ் ப்ராப்ளம்... கஷ்டமாயிருக்குன்னேன்!"

"அது மட்டுமா? சீக்கிரம் வேற நல்ல ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் கிடைச்சா நல்லாயிருக்கும்னு சொன்னியே"

"ஆமாம்!"

"கிடைச்சாச்சு!"

"என்ன?" சுகந்தி நம்ப முடியாமல் பார்த்தாள்.

"ஆமாம் சுகி! ட்ரான்ஸ்ஃபர் கிடைச்சாச்சு. இன்னும் பத்து நாள்ல மும்பைக்கு குட்பை சொல்லிட்டு போகப் போகிறோம். அதுக்கான ஆர்டர் வாங்கிட்டு வரத்தான் லேட்டாயிடுச்சு."

சுகந்தி பரவசமானாள். நிம்மதியுணர்வுடன் சிரித்தாள்.

"ப்பா... சந்தோஷமாயிருக்குங்க. இதை அப்பவே சொல்லியிருக்கலாமே!"

"ஒரு நல்ல டீயை நான் குடிக்காமப் போயிருப்பேனே!"

"போதும்ங்க விளையாட்டு. உருளைக்கிழங்கு போண்டா செய்திருக்கேன்... கொண்டு வர்றேன்."

"ட்ரான்ஸ்ஃபர் எந்த ஊருக்குன்னு கேக்கவே இல்லையே!"

"அதானே! எந்த ஊருக்கு?"

"கேட்டா சந்தோஷத்துல துள்ளி குதிப்பே! சென்னைக்கு தான்!"

ஆனால், சுகந்தியோ அதிர்ந்துப் போனாள்.

'சென்னைக்கா?!'

## 2

"என்ன சுகந்தி?" ஆச்சர்யமாய் பார்த்தான் கவுதம்.

"ம்.... என்னங்க?"

"என்ன ரியாக்ஷன் இது? நான் பயங்கரமா கற்பனை பண்ணி வச்சிருந்தேன். எக்கச்சக்க சந்தோஷத்துல... சீலிங் இடிக்க... துள்ளி குதிப்பேன்னுல்லே நினைச்சேன்? அதுவும் சென்னைக்குன்னு சொன்னப்பிறகும்?"

"சந்தோஷம்தான்... அதுக்காக நீங்க ஏகப்பட்ட கற்பனை பண்ணியிருந்தா நான் என்ன பண்ண முடியும்? குழந்தை ரொம்ப எதிர்பார்த்து உங்களுக்காக காத்திருந்து தூங்கியேப் போய்ட்டா. அதனால அப்செட் ஆகிட்டேன்" சமாளித்தாள்.

"ஏதோ ஒரு மிஸ்ஸிங் உன்கிட்டே. சரி விடு. ப்ரியா குட்டியை எப்படி சமாதானம் பண்றதுன்னு எனக்குத் தெரியும். கிளம்பு ஹோட்டலுக்கு போகலாம். ப்ரியா... மை டியர் செல்லம்... எந்திரி..."

மகளை எழுப்பினான் கவுதம்.

நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தது.

இன்னும் நான்கு நாட்களில் சென்னையில் இருந்தாக வேண்டும். அதை நினைக்கும்போதே உடலும், மனசும் துவண்டுப் போனாள்.

'மறுபடி சென்னைக்கா? கடவுளே... நான் பட்ட, படற அவஸ்தை போதாதா?'

''சுகந்தி!'' அவள் தோளில் கைவைத்து உலுக்கினான் கவுதம்.

''ம்... எ.... என்னங்க?''

''என்னாச்சு உனக்கு... எத்தனை முறை கூப்பிடறேன்... எங்கோ யோசனையிலே இருக்கிறே? என்ன பிரச்சினை உனக்கு?''

''சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க!''

''ம்ஹூம்.... உன் முகமே சரியில்லே... எதுவாயிருந்தாலும் என்கிட்டே சொல்லு சுகி...''

''அது... அது வந்து பிடிக்காத ஊர்ன்னாலும் ஏழு வருஷமா இங்கே இருந்துட்டோம். அக்கம்பக்கம்னு பழகிட்டோம். திடீர்னு அவங்களை எல்லாம் விட்டுப் பிரியப் போறோம்னு நினைக்கறப்ப மனசுக்கு கஷ்டமா இருக்குங்க''

''அவ்வளோதானே? நான் என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேன். ஃபீல் பண்ணாதே சுகி! மொழி வேறன்னாலும், மனிதாபிமானத்திலேயும், அன்பைக் காட்டறதிலேயும் எல்லா மனுஷங்களும் ஒண்ணுதான்! இவங்களை எல்லாம் பிரியப் போறதென்னவோ கஷ்டமான விஷயம்தான். ஆனா, ஆறு வருஷத்துக்கு முன்னாடி சென்னையிலே பிரிஞ்சு வந்த நண்பர்களை மறுபடி பார்க்கப் போகிறோமே... அதை நினைச்சு சந்தோஷப்படு. சென்னைக்குப் பக்கத்திலேயே செங்கல்பட்டு. உங்கம்மாவையும், அப்பாவையும் இனி அங்கே போய் அடிக்கடி பார்த்துட்டு வரலாமில்லே.''

விட்டால் பேச்சு அப்படியே திசைதிரும்பி எங்கெங்கோ ஓடும் எனப் புரிந்தது. பேச்சை மாற்றினாள்.

''ரெண்டு லாரியை புக் பண்ண சொன்னேனே... பண்ணிட்டீங்களா?''

''எதுக்கு? முக்கியமான சில திங்க்ஸ் மட்டும்தானே எடுத்துட்டுப் போகிறோம். அங்கே போய் புதுசா வாங்கிக்கலாம். டி.வி., ஃப்ரிட்ஜ், கிச்சன்வேர்ஸ் இதையெல்லாம் உன் நர்சரியில் வேலை பார்த்தவங்களுக்கு கொடுத்துடலாம்னு தானே டிஸைட் பண்ணினோம்? இப்ப என்ன?''

''அந்த முடிவுல எந்த மாற்றமும் இல்லை. நான் கேட்டது... செடிகளை எடுத்துட்டுப் போறதுக்கு. அங்கே நர்சரி வைக்கறதுக்கு.''

''ஏன் சுகி பிடிவாதமா இருக்கிறே? நான் எவ்வளவு சொல்லியும் கேட்க மாட்டேங்கிறே? அங்கே போய் வேற செடிகளை வாங்கிக்கிட்டா போச்சு? இங்கே உள்ள செடிகளை யாருக்காவது கொடுத்துடு. அந்த செடிகளோட விலையை விட ரெண்டு மடங்கு லாரி வாடகைக்கு ஆகும் செலவு. ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே?''

''உங்களுக்கு சொன்னாப் புரியாது. ப்ரியா எப்படியோ... அதே மாதிரி அந்த செடிகளும் என் குழந்தைகள்தான்!''

''அப்ப நீயே வச்சுக்க வேண்டியதுதானே? ஏன் விக்கறே?''

''பேச்சை வளர்க்காதீங்க... செடிகளை எடுத்துட்டுப் போறோம். அதிலே எந்த மாற்றமும் இல்லே''

''அதுக்கேன் கடுமையாப் பேசறே சுகி? சும்மா சொன்னேன். உனக்குப் பிடிக்காததை வற்புறுத்துவேனா? எவ்வளவு மென்மையான மனசு உனக்குன்னு அறியாதவனா நான்?''

அந்த வார்த்தைகள் அவள் மனதை தைத்தது.

'மென்மையான மனசா எனக்கு? நான் செய்த காரியத்தை அறிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? ச்சீ... நீயெல்லாம் ஒரு




தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் மருத்துவரை நாடிச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்பார்கள். இது உண்மைதான். பழவகைகளிலேயே மிகவும் உயர்ந்ததாக கருதப்படும் ஆப்பிள் இதயத்துக்கு பலத்தையும், மனமகிழ்ச்சியையும், மன தைரியத்தையும் அளித்து ஆரோக்கிய வாழ்வுக்கு வழி வகுக்கிறது.

உண்ணும் உணவை ஆப்பிள் நன்றாக ஜீரணிக்கச் செய்வதுடன் மலச்சிக்கலையும் போக்கும். ஆனால் வைட்டமின் ஏ நிறைந்து உள்ள பழங்களால் ஏற்படும் நன்மைகளை ஆப்பிள் பழத்தில் எதிர்பார்க்க முடியாது.

பெண்ணா என்று காறித் துப்ப மாட்டார்?'

''ஹேய்... என்ன அடிக்கடி எங்கோப் போய் டறே?'' தோளில் கைவைத்து அழுத்தினான்.

''ஒ.... ஒண்ணு மில்லே... நாம அங்கே தங் கறதுக்கு ஏற்பாடு பண்ணிட் டீங்களா?''

''எவ்ளோ முக்கிய மான விஷயம்.... பண் ணாம இருப்பேனா? அரு மையான ஃப்ளாட் ஒண்ணு ஏற்பாடு செய்திருக்கிறான் கபிலன். கபிலனை தெரியு மில்லே?''

''அவ்ளோ மறதியா எனக்கு? உங்களோட கொலீக்''

''அவனேதான்! மறு படி ஒரே ஆபீசுல வேலை செய்யப் போறோம்னு பயங்கர சந்தோஷம் அவ னுக்கு. இன்னொன்னு சொன்னா ஆச்சர்யப்ப டுவே... கற்பகம் ஸ்டூடியோ பக்கத்திலேயே உன் நர்சரிக்கு இடம் பார்த்து வச்சுட்டான். ஷூட்டிங் சமயத்துல அவசியப்பட்டா... செடிகளையும் வாடகைக்கு விடலாமே...''

''நிஜமாவா சொல்றீங்க? அப்புறம் ஏன் செடிகளை எடுத்துட்டு வரவேணாம்னு சொன் னீங்க?'' என்றாள் வியப்புடன்.

''அது என் கருத்து. பட், உன் மனசு எனக் குத் தெரியுமே... அதனாலதான் முன்னேற்பாடா சொல்லி வச்சேன்.''

''உங்களைப் புரிஞ்சுக்கவே முடியலே...''

''ஆனா, என் சுகிய, அவளோட குழந்தை மனசை நான் நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கேன்.''

கணவன் தனக்காக எதையும் செய்வான் என்பதே மனதிற்கு பெரும் ஆறுதலாய் இருந்தது.

''நாளைக்கு மிட்டாலால் வீட்டிற்கு போய் வந்துடலாம் சுகி. இந்த ட்ரான்ஸ்ஃபர் விஷயம் இன்னும் அவருக்குத் தெரியாது. தெரிஞ்சா வருத் தப்படுவார்.''

''ஆமாங்க... அந்த வீட்டம்மா என்னை தன் மகள் போல பாசமா பார்ப்பாங்க. ப்ரியாவை பிரியவே மனசு வராது அவங்களுக்கு. கண்டிப்பா போகணும்''

''சென்னையிலே தனம்மான்னா... இங்கே மிட்டாலால் வொய்ஃப்! எங்கே போனாலும் உனக்கொரு அம்மா கிடைச்சிடறாங்க... இல்லே...?''

தனம்மா என்ற பெயரைக் கேட்டதும் மயிர்க்கால்கள் குத் திட்டு நின்றன. அந் தம்மா கதறிய கதறல் காதுக்குள் இன்னமும் அவஸ்தையைத் தந்தது.

''ப்ரியாவோட டி.சி. வாங்கணும்னு சொல்லிட்டிருந்தீங் களே...''

''நல்லவேளை... ஞாபகப்படுத்தினே... போய்ட்டு வந்துட றேன்... லஞ்ச்சுக்கு எக் கட்லட் போட்டு வை சுகி! சாப்பிடணும் போலிருக்கு''

''சரி'' என்றாள் புன்னகையுடன்.

அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் டி.சி.யுடன் வந்தான் கவுதம்.

''எக்ஸாமுக்கு இன்னும் மூணு மாசமி ருக்கே. இந்த சமயத்திலே ப்ரியாவுக்கு ஸ்கூல் அட்மிஷன் கிடைக்குமா?''

''அந்த கவலை உனக்கெதுக்கு சுகி? முக் கியமான விஷயமாச்சே... மறப்பேனா? கபில னோட மாமா மினிஸ்டரோட ஃப்ரண்ட்! அவ ரோட இன்ஃப்ளுயன்ஸ்ல பிரபலமான ஸ்கூல்ல அட்மிஷன் வாங்கியாச்சு... போதுமா?''

''ம்....!''

''என்ன சுகி... எல்லாத்துக்கும் ரொம்ப சாதாரணமா, இன்ட்ரஸ்ட் இல்லாம, ஆச்சர்யப் படாம 'ம்'னு ஒரு வார்த்தையிலே பதில் கொடுத் துடறே?''

''இதிலே ஆச்சர்யப்பட என்ன இருக்கு? உங்களால முடியாததுன்னு எதுவுமில் லையே....''

''இந்த ஐஸ் எல்லாம் வேணாம். உன் மன சுல என்னவோ டிஸ்டர்பன்ஸ். எதுவாயிருந்தா லும் சொல்லு!''

''சொல்லவா?''

''ஸோ... விஷயமிருக்கு... சொல்லு!''

''எ... எனக்கு.... இந்த ட்ரான்ஸ்ஃபர் பிடிக் கலே''

''வாட்? நீதானேம்மா... இந்த ஊர் எனக்



**வைட்டமின் மற்றும் உப்புச் சத்துக் கொண்ட சீத்தாப்பழம் உடல் உஷ்ணத்தை போக்கும். உடல் வலி மற்றும் குடல் புண்ணை குணப்படுத் தும். வயிற்றுவலிக்கு முக்கிய மருந் தாகவும் சீத்தாப்பழம் பயன்படுத்தப் படுகிறது.**

குப் பிடிக்கலே... சீக்கிரம் வேற ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிடுங்கன்னு நச்சரிச்சே?'' என்றான் கண்கள் சுருங்க.

''வேற ஊருக்குன்னுதான் சொன்னேன். சென்னைக்குன்னா சொன்னேன்?''

''ஏன்... சென்னைக்கு என்ன?''

''இங்கேயே வேணும்னாலும் இருந்துடலாமே... சென்னைக்கு வேண்டாம்... ப்ளீஸ்!''

''நிஜமாகவே பேசறது நீயான்னு ஆச்சர்யமாயிருக்கு சுகி! எனக்கே எப்படா சென்னைக்கு போவோம்னு ஆவலாயிருக்கு. தனம்மா, பாலன் சார், நந்தனா இவங்களை எல்லாம் பார்க்கப் போகிறோம்னு ஆவல் இல்லையா? அவங்களை எல்லாம் பார்த்து எத்தனை வருஷமாயிடுச்சு? நந்தனாவுக்கு இப்ப கல்யாணமாகியிருக்குமில்லையா? குழந்தைங்க கூட இருக்கும். சென்னைக்கு போக பிடிக்கலேங்கறியே!''

''ஏதாவது மலைப் பிரதேசத்துக்கு போடு வாங்கன்னு நினைச்சேன்''

''அஞ்சு வருஷத்துக்குப் பிறகுதான்... அடுத்த ட்ரான்ஸ்ஃபர் பத்தி யோசிக்கணும். அது வரை அட்ஜஸ்ட் பண்ணிக்க. ஏன் நந்தனாவை பார்க்கப் போகிறோம்ங்கற மகிழ்ச்சி இல்லையா உனக்கு?''

''ஏங்க... பெத்தவங்களை விட்டே பிரிஞ்சிருக்கேன். அவ என்ன அவ்வளவு முக்கியமா எனக்கு?'' கோபத்துடன் தடித்து வந்தன வார்த்தை.

'நீயா இப்படிப் பேசறே?' என்பது போல் பார்த்தான் சுகந்தியை.

## 3

ஒரு வழியாய் மும்பை எக்ஸ்பிரஸ் அவர்கள் மூவரையும் சென்னையில் தள்ளி விட்டு சென்றது.

விடிந்து வெகுநேரமாகியும் விலக மனமின்றி பனி சென்னையை அணைத்துக் கொண்டிருந்ததைப் போல்... அந்த ஊரில் காலடி வைத்ததும் விலகியிருந்த பயம் மறுபடி சுகந்தியை கவ்விக் கொண்டது.

நந்தனா தொப்பென தன் முன்வந்து குதிப்பாளோ என்ற சந்தேகத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''சுகி... ப்ரியாவின் கையை கெட்டியா பிடிச்சுக்க'' என்ற கவுதம் ஒரு பையை தோளில் மாட்டிக் கொண்டு இரண்டு கைகளிலும் சூட்கேஸ்களை எடுத்துக் கொண்டு நடந்தான்.

''எங்கிட்டே ஒண்ணுக் கொடுங்க. பாவம் ரொம்ப வெய்ட்டாயில்லே?''

''உன்னையே தூக்கும்போது... இதெல்லாம் எம்மாத்திரம்?'' குறும்புடன் காதில் கிசுகிசுத்தான்.

''சீ... விவஸ்தையே இல்லையா உங்களுக்கு?'' வெட்கத்துடன் அக்கம் பக்கம் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறே?''

''புதுமாப்பிள்ளைன்னு நினைப்பு. சீக்கிரம் நடங்க வாத்யாரே!''

''மேடம் நல்ல மூடுல இருக்காப்போல தெரியுது. இருபத்தெட்டு வயசாகுதுனு சொன்னா யாராவது நம்புவாங்களா? உன்னைப் பார்க்கறப்பவே என் வயசும் குறைஞ்சுப் போகுது டார்லிங். இந்த வருஷம் விஷ்ணுப்ரியாவுக்கு பர்த்டே ப்ரெசென்டேஷனா ஒரு தம்பிப் பாப்பாவை குடுக்கலாம்னு இருக்கேன். நீ என்ன நினைக்கிறே?''

''ப்ளீஸ்... யார் காதிலாவது விழுந்துடப் போகுது'' ஹஸ்கி வாய்ஸில் முணுமுணுத்து, கண்களால் கெஞ்சினாள்.

மந்தகாசமாய் சிரித்தபடி விரைந்து நடந்தான் கவுதம்.

### புது ஃப்ளாட்!

ஒரு வழியாய் கொண்டு வந்த துணிமணிகளையும், புதிதாய் வாங்கிய பாத்திர பண்டங்களையும் வீட்டில் அடுக்கியாயிற்று. அந்தந்த இடத்தில் கச்சிதமாய் அமர்ந்திருந்தன.

''ஒரு வேலைக்காரிக்கு ஏற்பாடுப் பண்ணணும்ங்க!''

''அதெல்லாம் நீயேப் பார்த்து ஏற்பாடு பண்ணிக்க... என்னை விட்ரு!'' ஃப்ரிட்ஜின் ஸ்டெபிலைசரை சரி பார்த்தபடி சொன்னான் கவுதம்.

''ஏன் அப்படி சொல்றீங்க?''

''நான் இளைய சமுதாயத்தை ஊக்குவிக்கிற ஆள்! நல்ல வயசுப் பொண்ணாப் பார்த்துதான் ஏற்பாடுப் பண்ணுவேன். நீ சம்மதிப்பியா?''

''குப்பை... மனசு முழுக்க குப்பை!'' அரிசி புடைக்கும் முறத்தால் அவன் முதுகில் செல்லமாய் அடித்தாள்.

''மறத் தமிழச்சின்னு நிரூபிக்கிறியா?''

''பூனையெல்லாம்... தன்னை புலின்னு நினைச்சு அலட்டிக்கக் கூடாது.''

''ஏய்...'' சட்டென அவளை எலும்புகள்

நொறுங்க இறுக்கி அணைத்தான்.

"விடுங்க... ஐயோ விடுங்க... ப்ரியா பார்த்துடப் போறா... வலிக்குது...ப்பா!"

விட்டான்.

"நான் பூனையா?"

"இல்லே சாமி... யானை!"

கலகலப்பாய் நேரம் கடந்தது.

அக்கம்பக்கம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, காய்ச்சிய பால் பாயசத்தை தந்தனர்.

"உங்கம்மா வர்றேன்னாங்களே... வரலியா சுகி?"

"ஷுகர் அதிகமா இருக்காம். தலை சுத்தலாம். ரெண்டுநாள் கழிச்சி வர்றேன்னாங்க. செங்கல்பட்டுலேர்ந்து வரணுமே... அதனால நானும் வற்புறுத்தலே!"

"தனம்மாவை கூப்பிட்டிருக்கலாம் இல்லே?"

"....?!"

"உன்னைதான் சுகி"

"என்னங்க?"

"இந்த ஊர்ல நம்ம மேலே ரொம்ப பாசமா இருந்தவங்க தனம்மா. பால் காய்ச்சும்போது அவங்களை கூப்பிட்டிருக்கலாம்னு தோணுது."

"ஆமாம்... கூப்பிட்டிருக்கலாம்" என்றாள் கலவரமாய்.

"நாம மறுபடி சென்னை வந்தது தெரிஞ்சா ரொம்ப சந்தோஷப்படுவாங்க. திடீர்னு நாம அவங்க முன்னாடிப் போய் நின்னா ரொம்ப ஷாக்காய்டுவாங்க இல்லே?"

"ஆ... ஆமாம்!"

"அடுத்த வாரம் கண்டிப்பா நாம தனம்மா வீட்டுக்குப் போகிறோம்.... சரியா?"

".....?!!"

"என்ன பதிலே காணோம்?"

"ச... சரிங்க"

புதிய இடத்தில் நர்சரி அமைத்தல், மண் வளத்தை பதப்படுத்துதல், புதிய ஆட்களை நியமித்தல் என்று பத்து நாட்கள் ஓய்வின்றி ஓடியது. கவுதமும் அலுவலகம், ப்ரியா அட்மிஷன் என்று பிஸியாக இருந்தான்.

அன்று!

"நாளைக்கு சன்டேதானே சுகி? ப்ரியாவுக்கும் லீவு. போய்ட்டு வந்துடலாம்."

"எங்கே?"

"அதுக்குள்ளே மறந்துட்டியா? தனம்மா வீட்டுக்கு!"

"இப்பவே போய்டணுமா? இன்னும் கொஞ்சம் நாள் கழிச்சுப் போகலாமே!"

"இல்லேம்மா... இதுவே லேட்டு. தனம்மா கோவிச்சுக்குவாங்க. முக்கியமா நந்தனாவை எனக்கு உடனே பார்க்கணும் போலிருக்கு. உள்ளூர்ல இருக்காளோ, வெளியூர்ல இருக்காளோ? உள்ளூர்னா அடுத்த வாரமே அவளையும் போய் பார்த்துட்டு வந்துடலாம்."

'நந்தனாவையா? இவரிடம் என்னைப் பற்றி எல்லா உண்மையையும் சொல்லி விட்டால்?'

"ஸ்டவ்ல பால் வச்சுட்டு வந்தேன்.... பொங்கிடப் போறது." சட்டென அந்த சூழலிலிருந்து தன்னைப் பிய்த்துக் கொண்டு நகர்ந்தாள் சுகந்தி பதற்றமுடன்.

கார் பெரவள்ளூர் நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. ஜவஹர் நகரில் மேயர் தெருவில் நுழைந்ததும் சுகந்தியின் நெஞ்சம் படபடத்தது.

'கடவுளே... நந்தனா இந்த ஊரிலேயே இருக்கக் கூடாது. வெளியூரில் இருக்க வேண்டும்.' உள்ளூர வேண்டிக் கொண்டாள்.

ஆனால்...?

கார் அந்த இரண்டடுக்கு மாடி வீட்டின் முன் நின்றது. ஸ்வீட், பழங்கள், மல்லிகைப்பூ அடங்கிய வலை கூடையை எடுத்து மனைவி கையில் கொடுத்து விட்டு, ப்ரியாவுடன் இறங்கினான்.

நிமிர்ந்து... அண்ணாந்துப் பார்த்தான்... தன் வசந்த மாளிகையை! ஆம்... அந்த வீட்டில் குடியிருந்தவரை ஒவ்வொரு நாளும் வசந்த காலமல்லவா?

கதவு சார்த்தியிருக்க... அழைப்பு மணிக்கான பொத்தானை அழுத்தினான்.

கதவு திறக்க... ஆர்வமுடன் காத்திருந்தான்.

'ஏழு வருஷத்தில் தனம்மா கொஞ்சம் சதைப்போட்டு, முடி வெளுக்க ஆரம்பித்து இருக்குமோ? எங்களைப் பார்த்ததும் கண்கள் விரிய... ஆச்சர்யமாய்....'

கதவு திறந்தது.

முற்றிலும் புதுமுகம்! வயதானப் பெண்மணி நாலணா சைஸுக்கு குங்குமம் வைத்த நெற்றியை சுருக்கி... "யார் வேணும்?" என்றாள்.

எதிர்பார்க்காத கவுதம், சுகந்தியை ஒரு பார்வை பார்த்து விட்டு, "இந்த வீட்டு சொந்தக்காரம்மா..."

"நான்தான்... வீடு பார்க்க வந்தீங்களா? மாடியிலதான் வீடு. ஒரு பெட்ரூம், பூஜை ரூம், ஹால், பாத்ரூம் எல்லாம் இருக்கு. வாடகை




நல்ல சுவை, 75 சதவீதம் தண்ணீர், தாது உப்புக்கள், வைட்டமின்கள் நிறைந்த ஆரஞ்சுப்பழம் பல்வேறு நோய்களை குணப்படுத்துவதால் நாள்தோறும் சாப்பிடலாம். குறிப்பாக குழந்தைகளுக்கு காலை, மாலை கொடுக்க வேண்டும்.

ஆரஞ்சுப் பழச்சாறு புற்றுநோயை குணப்படுத்தும் என்று கண்டறியப்பட்டு உள்ளது. கோடை காலத்தில் ஆரஞ்சுப்பழம் அதிக அளவு சாப்பிட்டால் உடல் உஷ்ணம் குறையும் என்பதுடன் எந்த நோயும் எட்டிப் பார்க்காது.

ரெண்டாயிரம். இருபதாயிரம் அட்வான்ஸ். கரண்டுக்கு ஒரு யூனிட் நாலு ரூபாய். தண்ணிக்கு தனியா நூறு ரூபாய். சரளா... மாடி வீட்டு சாவிய எடுத்துட்டு வா!'' என்றாள் உள்ளேப் பார்த்து.

''இல்லேம்மா... நாங்க வீடு பார்க்க வரலே''

''பின்னே?''

''இங்கே தனம்மான்னு இருந்தாங்களே... அவங்க ஹஸ்பண்ட் பேர் ருக்பாலன்.''

''ஓ... அவங்களை சொல்றீங்களா? அந்தம்மா என்கிட்டே இந்த வீட்டை வித்து ஆறு வருஷமாகுது!''

''என்னது?''

''நீங்க யாரு... அவங்களுக்கு உறவா?''

''ஆமாங்க... மும்பையிலே ஏழு வருஷம் இருந்துட்டு இப்பதான் சென்னைக்கு வந்தோம்.''

''அப்ப.... அந்தம்மா வீட்டுக்காரர் இறந்ததுக் கூட தெரியாது.''

''என்னது... ருக்பாலன் சார் இறந்துட்டாரா?'' அவன் மட்டுமல்ல... சுகந்தியும் கூட அந்த செய்தி கேட்டு அதிர்ந்து விட்டாள்.

''ஆமாம்... அவங்கப் பொண்ணு பைத்தியமாயிருந்துச்சுல்ல... அந்த வேதனையிலேயே ஹார்ட் அட்டாக் வந்து செத்துப் போயிட்டார்னு கேள்விப்பட்டேன்.''

''மைகாட்... இப்ப அவங்க எங்கே இருக்காங்கன்னு தெரியுமா?''

''தெரியாதுங்க... சைதாப்பேட்டையிலே இருக்கிறதா எதிர்வீட்டு சுகுணா சொன்னாங்க. அவங்க அங்கே பார்த்தாங்களாம்.''

''தகவலுக்கு நன்றிம்மா!'' என்று மறுபடி காரை நோக்கிப்போன கவுதமின் கண்கள் கலங்க முற்பட்டன.

''இங்கேயே இரு சுகந்தி... வந்துடறேன்'' என்றவன் எதிர்வீட்டை நோக்கிப் போனான்.

மூன்றாவது நிமிடம் மறுபடி காரருகே வந்தான்.

''என்னங்க?'' என்றாள் மனதை அழுத்திய கவலையோடு.

''அந்தம்மா... ஏதோ உறவுக்காரங்க வீட்டு கல்யாணம்னு குண்டூர் போயிருக்காங்களாம். வர ஒரு வாரம் ஆகுமாம்''

சில கணங்கள் அப்படியே நின்றிருந்தவன், பெருமூச்சுடன் காரில் ஏறி அமர்ந்தான்.

சென்ட்ரல் ரெயில் நிலையம்!

ஒரு நண்பரை வழியனுப்புவதற்காக வந்திருந்த கவுதமின் தோள்மீது ஒரு கை விழுந்தது.

திரும்பியவன் வியந்தான்.

''ரவீந்திரன்... நீயா..? இங்கே எப்படி?''

''நான் கேக்கணும். மும்பையிலே இருந்தவன் இங்கே எப்படி? மழைக்கு பயந்து ஓடி வந்துட்டியா?'' என்று கேட்டவன் அவன் கல்லூரித் தோழன்.

''இங்கே மட்டும் என்ன வாழுதாம்? ரோட்ல பஸ்சுக்கு பதிலா படகில்லே போச்சு? மறுபடி இங்கேயே மாற்றல் போட்டுட்டாங்க. உன்னைப் பார்த்து ஒன்பது வருஷம் ஆய்டுச்சு இல்லே? இப்பவும் ஸ்கூல் வச்சு நடத்திக்கிட்டுதான் இருக்கியா?''

''பின்னே வியாபாரத்துக்காகவா நடத்தறேன்? ஆத்ம திருப்திக்காக! அக்ரிகல்ட்சுரல் ஆபீஸரா ப்ரமோஷன் போட்டுட்டாங்க. முன்னே மாதிரி டைம் கிடைக்கறதில்லே. ஸ்கூலை கவனிச்சுக்க நல்லா படிச்ச.... உனக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருந்தா சொல்லு. பிரின்ஸிபாலா நியமிச்சு, கை நிறைய சம்பளமும் தர்றேன்.''

''என் பொண்டாட்டியோட சமையலை சாப்பிட்டு தாங்கலே... அவளையே அனுப்பி வச்சிடறேன்'' என்றான் கிண்டலாக.

''பேச நேரமில்லே... ட்ரெய்ன் மூவ் ஆயிடுச்சு. இந்தா என் கார்ட்... காண்டாக்ட் பண்ணு. பை...ஸீ யூ லேட்டர்!'' ஓடிப்போய் ஏறிக்கொண்டான் ரவீந்திரன்.

## 4

''அத்தையும், மாமாவும் எங்கே?'' பேண்ட்டிலிருந்து லுங்கிக்கு மாறிய கவுதம் காபியை நீட்டிய சுகந்தியிடம் கேட்டான்.

''அவங்க நாலு மணிக்கே கிளம்பிப் போய்ட்டாங்க.''

''ஏன் சுகி? இன்னும் ரெண்டுநாள் இருந்திருக்கலாமில்லே?''

''சொல்லிப் பார்த்தேன்.... கேக்கலே. அண்ணன் பசங்க ரெண்டுபேரும் தாத்தா பாட்டியில்லாம சாப்பிட அடம்பிடிக்கிறாங்களாம். அவ்வளவு செல்லம். நம்ம ப்ரியாவுக்குதான் அந்த கொடுப்பினை இல்லே!''

சட்டென முகம் வாடியது கவுதமிற்கு.

நாக்கை கடித்துக் கொண்ட சுகந்தி வருத்தத்துடன் அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

''ஸாரிங்க!''

''ஏய்... இதுக்கெல்லாமா ஸாரி? அப்பா, அம்மா முகம் தெரியாம, நாலஞ்சு உறவுக்காரங்க வீட்ல பந்தாடப்பட்டு வளர்ந்து எப்படியோ நிரந்தர உறவா நீ எனக்கு கிடைச்சே! உன்னோட அப்பா அம்மாவை நானும் என் அப்பா, அம்மாவாதான் நினைக்கிறேன். சரி இந்த பேச்சை விடு! உனக்கு எப்பவெல்லாம் அவங்களைப் பார்க்கணும்னு தோணுதோ, தாராளமா செங்கல்பட்டுக்கு போய்ட்டு வா... ஒக்கேயா?''

''தாங்க்ஸ்ங்க!''

''நாளைக்கு ஈவ்னிங் வீட்டுக்கு வர கொஞ்சம் லேட்டாகும்.''

''ஏங்க?''

''அந்த சுகுணாம்மாவை போய் பார்க்கணும்!''

''சுகுணாம்மாவா? யாரது?''

''தனம்மா வீட்டு எதிரே இருப்பவங்க...''

''ஓ... அவங்களா?'' என்று யோசித்தவள் சில கணங்கள் கழித்து, ''அவசியம் பார்க்கணுமா?'' என்றாள்.

''பின்னே? எப்படி தனம்மாவோட அட்ரஸ் வாங்கறதாம்?''

''அதைதான் கேக்கறேன் தனம்மாவை பார்த்தே ஆகணுமான்னு?''

''சுகி... நீயா பேசறே? ஏன் இப்படி சொல்றே?'' நெற்றி சுருங்கியது.

''இ... இல்லே... மங்களகரமா, சந்தோஷமா அவங்களை பார்த்துட்டு, இப்ப... மனக் கஷ்டத்திலே இருக்கிறவங்களை...''

''படிச்சவ மாதிரி பேசு! இப்பதான் அவசியம் பார்த்தே ஆகணும்.'' என்றான் அழுத்தமாய்.

திணறிப் போனாள் சுகந்தி.



### நாள்தோறும் எலுமிச்சை!

கோடைகாலம் நீங்கலாக மற்ற காலங்களில் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் எலுமிச்சம் பழத்தில் வைட்டமின் சி உள்பட பல்வேறு சத்துக்களும், மருத்துவ குணங்களும் நிறைந்து உள்ளன. ரத்த உறைவு [ஹோமோபிலியா], உஷ்ண வியாதிகள், கட்டிகள், பித்த வியாதி, கல்லீரல் வியாதி, மண்ணீரல் வீக்கம், பயோரியா வியாதி போன்றவற்றுக்கு எலுமிச்சை நல்ல மருந்து ஆகும். எலுமிச்சம் பழத்தை சாறு பிழிந்து தண்ணீரில் ஊற்றி தேன் கலந்து குடித்தால் மிகவும் நல்லது. பல்வேறு நோய்கள் குணமாகும்.

''நான் தனத்தைப் பார்த்தே அஞ்சு வருஷமிருக்குமே! இப்பவும் அதே வீட்லதான் இருக்காங்களான்னு தெரியலே. என் நாத்தனார் வீடு சைதாப்பேட்டையிலேதான். அவங்களைப் பார்க்க போனப்பதான் எதேச்சையா தனத்தை வழியிலேப் பார்த்தேன். வீட்டுக்கு வரச்சொல்லி கூப்பிட்டா. நேரமில்லேன்னு போகலே. அட்ரஸ் மட்டும் வாங்கிட்டு வந்துட்டேன். அதுக்கப்புறம் நான் அந்தப் பக்கம் போகவே இல்லே. நீ நல்லாருக்கியாப்பா? ஊரை விட்டுப் போறப்ப கைக்குழந்தையோடப் போன... பெருசா வளர்ந்திருப்

பாளே? சுகந்தி எப்படி இருக்கா?'' என்றாள் தலை நரைத்திருந்த சுகுணா.

''எல்லோரும் நல்லாயிருக்கோம்மா! அந்த அட்ரஸ்?''

''இருப்பா... எடுத்துட்டு வர்றேன்.''

உள்ளேச் சென்றவள் மடிப்பு கிழிந்து, அழுக்கேறியிருந்த சின்ன காகிதத்தை நீட்டினாள்.

பத்திரப்படுத்திக் கொண்டான்.

''ரொம்ப நன்றிம்மா... வர்றேன்.''

''சரிப்பா... தனத்தைப் பார்த்தா நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு!''

''கண்டிப்பாம்மா!'' என்றான் கவுதம்.

மிக சிரமப்பட்டே ஓடு வேய்ந்த அந்த சிறிய வீட்டை கண்டுபிடித்தான்.

மனக்கலக்கத்துடன் பார்த்தபடி காரை விட்டு இறங்கினான்.

'இந்த வீட்டிலா இருக்கிறார்கள்?'

அருகே சென்றவன் வீடு பூட்டியிருந்ததைப் பார்த்து திகைத்தான்.

கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு பக்கத்து வீட்டிலிருந்து எட்டிப் பார்த்தாள் நாற்பதைக் கடந்த பெண்மணி.

''யாருங்க வேணும்?''

''இந்த வீட்லே தனம்னு ஒரு அம்மா...''

''தனமா?''

''ஆமாங்க. அவங்கப் பொண்ணு பேரு நந்தனா!''

''ஓ! இப்ப தேடிட்டு வந்திருக்கீங்க... யாரு நீங்க?''

''வேண்டியவங்கதான்... வெளியிலே போயிருக்காங்களா?''

அவனை ஏற இறங்கப் பார்த்தவள் பெருமூச்சு விட்டாள்.

''ஒரேயடியா போய்ட்டாங்க...''

''புரியலே...''

''நான் இந்த வீட்டு சொந்தக்காரிதான். இங்கே குடிவந்து ஆறு மாசத்துல அந்தம்மா காய்ச்சல்னு படுத்தவங்க ஆறே நாள்ல இறந்துட்டாங்க.''

''எ...ன்...ன?'' பலத்த அதிர்ச்சியில் தாக்குண்டான்.

''ஆமாங்க. பக்கத்திலேயே அந்தப் பொண்ணு, அம்மா செத்துப் போனதுக்கூட உணராம வெறிச்சுப் பார்த்துட்டு உட்கார்ந்து இருந்தது. கொடுமைங்க. அழறதுக்குக்கூட ஆள் இல்லாம போய் சேர்ந்துட்டாங்க. இந்த தெருவுல... எல்லாரும் சேர்ந்துதான் பாடிய எடுத்தோம்.''

''மைகாட்!'' கண்ணீர்ப் பொங்கியது.

''அவங்க வீட்ல இருந்த பொருட்களை எல்லாம் ஸ்டோர் ரூம்ல போட்டுப் பூட்டியிருக்கேன். எடுத்துட்டுப் போறீங்களா?''

''அதிருக்கட்டும்... நந்தனா இப்ப எங்கே?''

''அது கொடுமையிலும் கொடுமைங்க.''

''ஏன்?''

''அந்தம்மா செத்துப்போன மறுநாள் விடியற்காலையிலே அந்தப் பொண்ணு எங்கேயோ கால்போனப் போக்குல போய்ட்டிருக்கு. எங்கேத் தேடியும் கிடைக்கலே!''

''வாட்?''

''ஏன்... சாப்பாடு வேண்டாம்னுட்டீங்க? உங்களுக்குப் பிடிச்ச ஆலு பரோட்டாவை தான் பண்ணியிருக்கேன். ரெண்டே ரெண்டாவது சாப்பிடுங்களேன்.''

ஜன்னல் வழியே கரியவானில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டின.

படுத்திருந்த கவுதம் திரும்பிப் பார்த்தான்.

''கம்ப்பல் பண்ணாதே... வேண்டாம்னா விட்டுடேன் சுகந்தி?'' எரிச்சல் பட்டான்.

''என்னாச்சு உங்களுக்கு? ஏன் என் மேலே எரிஞ்சு விழறீங்க?''

''என்னைக் கொஞ்சம் தனியா விடு ப்ளீஸ்.''

''இன்னைக்கு ஏன் லேட்டு?'' சுகந்தி விடுவதாயில்லை.

''சொல்லிட்டுதானே போனேன்?''

''ம்... மறந்துட்டேன். அந்த சுகுணாம்மா வீட்டுக்குப் போறேன்னீங்கல்ல? பார்த்தீங்களா? அட்ரஸ் குடுத்தாங்களா? தனம்மாவைப் போய் பார்த்தீங்களா?''

''ஆச்சர்யமாயிருக்கு!''

''எதுக்கு?''

''அவங்களைப் பத்தி அக்கறையா விசாரிக்கறியே...''

''ஏன் அப்படி சொல்றீங்க?'' முகம் மாறியது.

''ஏன்னு தெரியலே... இப்பல்லாம் அவங்களைப் பத்தி பேசினாலே பிடிக்கறதில்லே உனக்கு.''

''நீங்கதான் தப்பாப் புரிஞ்சுக்கறீங்க. நல்லா அமோகமா வாழ்ந்தவங்களை கஷ்ட ஜீவனத்துலப் பார்க்க எனக்கு தெம்பில்லே... அதுக்காகதான் அப்படி சொன்னேன். இப்பவாவது சொல்லுங்க, அவங்களைப் பார்த்தீங்களா? நந்தனா எப்

படியிருக்கா? ஏதாவ்து பேசினாளா?''

''....?!''

''ஏன் அமைதியா இருக்கீங்க?'' திகில் பரவியது.

''அவங்க இல்லே...''

''வெளியே போய்ட்டாங்களா?''

''இல்லே சுகந்தி... ஒரேயடியா போய் சேர்ந்துட்டாங்க.'' என்றான் உற்பத்தியான கண்ணீர் முத்துக்களை துடைத்தபடி.

''எ... என்ன சொல்றீங்க?''

''நந்தனா பத்திய கவலையிலேயே தனம்மா உடம்புக்கு முடியாம இறந்துட்டாங்களாம். ருக்பாலனும் மகளுக்கு இப்படியாய்டுச்சே... நாமதானே இதுக்குக் காரணம்னு குமைந்து, ஹார்ட் அட்டாக் வந்து, சர்ஜரி பண்ண வேண்டிய கட்டாயத்தால பழைய வீட்டை வித்து வைத்தியம் பார்த்தும் அவரை காப்பாத்த முடியலே. பணமில்லாதக் கொடுமை நந்தனாவுக்கும் ட்ரீட்மெண்ட் தர முடியலே. எல்லாக் கவலையும் சேர்ந்து தனம்மாவை கண்மூட வச்சிடுச்சு.''

''....?''

''அம்மா இறந்த மறுநாளே புத்திபேதலிச்சுப் போன நிலையிலிருந்த நந்தனாவை காணோமாம்.''

''அய்யோ... எங்கேப் போய்ட்டாளாம்?''

''தெரியலே... எங்கேத் தேடியும் கிடைக்கலையாம். இதுவரைக்கும் கண்ணில் படலே. அஞ்சு வருஷமாகிடுச்சு. இதுநாள் வரைக்கும் நந்தனா உயிரோட இருக்க வாய்ப்பில்லேன்னு சொல்றாங்க.''

சட்டென பிரவாகமெடுத்த கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் கேவலாய் வெளிப்பட்டது அழுகை சுகந்தியிடமிருந்து.

''ஏய்... சுகி... என்ன... ஏன் அழறே?''

''முடியலேங்க... தாங்கிக்க முடியலே... அய்யோ... நந்தனா... கடவுளே!''

கவுதமிற்கு அவள் அழுகை வியப்பைத்தந்தாலும் நிம்மதியாய் இருந்தது.

'என் சுகி அவர்களை வெறுக்கவில்லை.'

வெகுநேரம் கழித்து நார்மலுக்கு வந்தாலும் சுகந்தியும் அன்றிரவு சாப்பிடவில்லை.

கவுதம் தூங்கியப் பிறகும் அவளால் தூங்க முடியவில்லை.

குற்ற உணர்வு மனதை அரித்தது.

'இதற்கெல்லாம் நானா காரணம்? மூன்று உயிர்கள். விலைமதிக்க முடியாத உயிர்கள்... இன்று இவ்வுலகில் இல்லை. எல்லாவற்றிற்கும் நான்தானே காரணம்?

என் கணவர், ருக்பாலனால்தான் எல்லாம் நடந்தது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால், நான்தான் காரணம் என்றறிந்தால்?

என் சுயரூபம் அறிந்து விட்டால்?

என்னை வெறுத்து விட மாட்டாரா?

கடவுளே... அந்த உண்மை கடைசி வரை என் கணவருக்கு தெரியக்கூடாது.

நந்தனா... என்னை மன்னிச்சிடும்மா... மன்னிச்சிடு!'

## 5

கடின உழைப்பும், ஆர்வமும் இருந்தால்... வெற்றி வெகு தொலைவில் இருப்பதில்லை.

சுகந்தியின் மனதில் பாரம் கூடியிருப்பதால் தன் கவனத்தை திசை திருப்ப முழு மூச்சாய் தோட்டக்கலையில் இறங்கி விட்டாள்.

'இனி, தான் செய்த துரோகத்தை சொல்ல நந்தனா உயிரோடு திரும்பி வரப்போவதில்லை. என்றாலும் ஒரு வகையில் நான் கொலைகாரி தானே?' சற்று ஓய்வுக் கிடைத்தாலும் சுகந்தியை புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தது மனசாட்சி.

சென்னை நகரின் பிரத்யேக இடத்தில், அதுவும் கனவுலகத் தொழிற்சாலையின் அருகிலேயே நர்சரி இருந்ததால்... வியாபாரம் சூடு பிடித்துவிட்டது. சில சமயங்களில் நர்சரியில் சீரியல் ஷூட்டிங்கும் நடைபெறுவதுண்டு.

நந்தனாவுக்கு சூரியகாந்தி செடிகள் என்றால் கொள்ளை ஆசை! அவள் ஆத்மா சாந்தியடைய ஏதாவது செய்ய வேண்டும்போல் இருந்தது. ஏதாவது தொண்டு நிறுவனத்துக்கு அவள் நினைவாக நூறு சூரியகாந்தி செடிகளை அன்பளிப்பாக தரவேண்டும் என்று நினைத்திருந்த நேரத்தில்தான்... அன்பு இல்லத்திலிருந்து ஆள் வந்தது.

காய்கறி செடிகளும், பூச்செடிகளும் வேண்டும் என்று.

விசாரித்தபோது முதியவர்களும், குழந்தைகளும், ஆதரவற்ற பெண்களுமாய் கிட்டத்தட்ட முந்நூறு பேர்களை கருணை உள்ளம் கொண்ட கொடையாளர்களின் உதவியோடு பாதுகாத்து வருகிறார்கள் என்பதை அறிந்துக் கொண்டாள்.

வந்திருந்த மேலாளரிடம் தன் எண்ணத்தையும் சொன்னபோது அகமகிழ்ந்துப் போனார்.

மறுநாள்!

பாலவாக்கத்தில் இயங்கிக் கொண்டிருந்த அன்பு இல்லத்திற்கு அவர்கள் கேட்டிருந்த செடிகளோடு, சூரியகாந்தி செடிகளையும் எடுத்துக்

கொண்டு போனாள் சுகந்தி.

"வாங்க மேடம்" என்று வரவேற்ற ரெஜி னாமேரிக்கு அறுபத்தைந்து வயது. அவர்தான் அன்பு இல்லத்தை நடத்தி வருபவர்.

"வணக்கம்மா!" என்று பொதுவாய் சில விஷயங்களை பேசிவிட்டு, "என்னதான் பல நல்ல மனிதர்கள் உதவினாலும் இங்குள்ள ஆதர வற்றோரின் எண்ணிக்கைக்கு பணம் போத வில்லை என்றாலும், தோட்டம் அமைக்க வென்று பணம் செலவழிப்பது ஆச்சர்யமாய் இருக்கிறது."

"இது அவசியம் என்று தோன்றியதம்மா! இதை பராமரித்து ஒன்றை நூறாக்கப்போகிறவர் கள் இங்குள்ளவர்கள்தான். சும்மாயிராமல், பழை யதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக் காமல் கவனத்தை தோட்டப் பராமரிப்பில் செலுத்தட்டுமே என்றுதான்! தவிர இவர்களுக்கு மட்டுமின்றி, மனநிலை பாதிக்கப்பட்ட சிலரும் இங்குண்டு. அவர்களுக்கு பசுமையான சூழ் நிலை அவசியம் என்று மருத்துவ குறிப்புகள் கூறு வதுண்டு. உங்கள் கையாலேயே தோட்டத்தை அழகுபடுத்தி விட்டு செல்ல முடியுமா?"

"கண்டிப்பாக..." என்றபடி பூந்தொட்டி களை இடம் பார்த்து அடுக்கி வைத்தாள். காய் கறி செடிகளை ஆட்களின் உதவியுடன் மண்ணில் நட்டு வைத்தாள். ஒன்றரைமணி நேரத்தில் அந்த இடமே மாறிவிட்டது. கண்களுக்கு குளிர்ச்சியாய், பசுமையாய் நந்தவனமாய் இருந்தது. மற்ற பூச்செ டிகளுக்கு நடுவில் சூரியகாந்தி செடிகள் வட்ட மாய் கைகோர்த்து நின்ற அழகு காண கண்கோடி வேண்டும்.

கைகளில் மண் அப்பியிருக்க பெருமி







மாய் அவைகளை நோட்டமிட்டாள் சுகந்தி.

''அதோ... அங்கே குழாய் இருக்கிற தம்மா... கைகளை சுத்தம் செய்து கொள்ளுங் கள்'' என்றாள் ரெஜினாமேரி.

''எப்படியிருக்கிறது?''

''வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது... எங்கள் அன்பு இல்லம் பூங்காவனமாக மாறி விட்டது.''

''ஒருநாள் நிதானமாக இங்குள்ளவர்களு டன் பொழுதை கழிக்கலாம் என்றிருக்கிறேன்.''

''எப்போது வேண்டுமானாலும் நீங்கள் வர லாம். இங்குள்ளவர்களுக்கு ஆறுதலாய் இருக் கும்.''

சுவற்றோரம் பதிக்கப்பட்டிருந்த குழாயை திருகி கைகளை கழுவிய சுகந்தி நிமிர்ந்தாள்.

காற்றோட்டமாய் ஒரு ஜன்னல். அந் அறையினுள் நான்கைந்து பேர் இருந்தனர். வ தான ஒரு பெரியவரும், இரண்டு பெண்மணி யும், இரண்டு இளம் பெண்களும்! பார்த்தது புரிந்தது... அவர்கள் மனநிலை பாதிக்கப்பட் வர்கள் என்று. அவர்களில் ஒருத்தியாய்....

சுகந்தியின் கண்கள் தெறித்து விடும்போல் அகன்றது.

''ந...ந்...த...னா!''

மறுநாள்!

கவுதமும், சுகந்தியும் பரிதவிப்புடன் அமர்ந்திருக்க... அவர்கள் சொல்வதை நம்பு வதா, வேண்டாமா என்கிற சங்கடத்துடன் பார்த் துக் கொண்டிருந்தார் ரெஜினாமேரி.

கவுதம் தன் ஃப்ரீப்கேஸை எடுத்தான்.

''புரியுது மேடம்... உங்கள் சந்தேகம் நியா யமானதுதான். இதோ.... இந்த ஆல்பத்தைப் பாருங்கள். என் மனைவியின் வளைகாப்பின் போது எடுத்தது. இதோ... இவங்கதான் நந்தனா வின் அம்மா, பக்கத்தில் அப்பா. சுகந்தியின் தோள்மீது கை வைத்தபடி சிரித்துக் கொண்டிருப் பவள்தான் நந்தனா.''

ரெஜினாமேரி கண்ணாடியைக் கழற்றி துடைத்தபடி சிரித்தார்.

''ஆமாம்... நந்தனா தான். அழகான பெயர்... இன்று தான் அவள் பெயரே தெரியும்.''

''அப்படியா?''

''ஆமாம்.... இது நாள்வரை அவள் ஒரு வார்த்தைக் கூட பேசியதே இல்லை.''

''அவள் எப்படி இங்கே?''

''அஞ்சு வருஷம் முன்னாடி ஒரு பெண் மணி அழைத்து வந்து விட்டு விட்டுப் போனார். ரோட்டில் தனியே அமர்ந்திருந்த அவளிடம் சில ஆண்கள் தவறாக நடக்க முயல, சிலரின் உதவி யோடு காப்பாற்றி இங்கே அழைத்து வந்திருந் தார்''

''கடவுளே'' என்றபடி சற்று நேரம் கண் மூடினான். 'மை டியர் ஃப்ரண்ட் உனக்கா இப்ப டியொரு நிலைமை?'

''மேடம்... நந்தனா எங்கள் வீட்டுப் பெண். அவளைதான் தேடிக் கொண்டிருந்தோம். எங்களுடன் அனுப்பி வையுங்கள். அவளை குணப்படுத்தி ஒரு எதிர்காலத்தை உருவாக்கியாக வேண்டும்.''

தயங்கினார்.

''ப்ளீஸ்... இது என் விசிட்டிங் கார்டு. பன் னாட்டு நிறுவனத்தில் பணிபுரிகிறேன். எத்தனை கையெழுத்து வேண்டுமானாலும் போடுகி றேன். அனுப்பி விடுங்கள்.'' குரலில் கெஞ்சலும், ஆவலும் இருந்தது.

''நீங்கள் அவளுக்கு குடும்ப நண்பர்.... அவ்வளவுதான். நான் எப்படி...?''

''அவள் என் தங்கை மேடம்! நம்பி அனுப் புங்கள். என் மகள் போல் கண்ணுக்குள் வைத் துப் பார்த்துக் கொள்கிறேன். மறுத்து விடாதீர்கள். இறந்துபோன இரண்டு ஆத்மாக்களை நான்.... நாங்கள் சாந்திப்படுத்தியாக வேண்டும். அனுப் புங்கள்'' பேசிக் கொண்டே சட்டென குரல் உடைந்து அழ ஆரம்பித்து விட்டாள் சுகந்தி.

கவுதம் அவளை ஆச்சர்யத்துடன் பார்த் தான்.

அதற்குமேல் பிடிவாதம் பிடிக்கவில்லை ரெஜினாமேரி.

அடுத்த ஐந்தாவது நிமிடம் நந்தனா அவர் கள் முன் நிறுத்தப்பட்டாள்.

அவளைப் பார்த்ததும் கவுதம் உள்ளுக்குள் பொல பொலவென உதிர்ந்துப் போனான்.

நிலைகுத்திய விழிகளோடு, நிறம் மங்கி, மெலிந்து அடையாளம் தொலைத்திருந்தாலும், அமைதியான அழகு மட்டும் பிடிவாதமாய் ஒட் டியிருந்தது.

ஒட்டடைப் படிந்த அறைக்குள் அழுது வடிந்த சோகையான பல்புப் போல் இருந்தாள்.

அந்தம்மாவை நோக்கி கையெடுத்து கும் பிட்டுவிட்டு, நந்தனாவை அழைத்துச் சென்ற னர்.

மனநல மருத்துவர் ருத்ரைய்யன் நந்த னாவை பரிசோதித்து விட்டு அவர்களிடம் திரும் பினார்.

''ஆரம்பத்திலேயே கவனித்திருந்தால் எப் போதே குணமாகி இருப்பார்களே!''

''....?!''

''இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலே. அன்பான கவனிப்பும், வேளாவேளைக்கு மருந் தும் கொடுப்பதோடு வாரம் ஒருமுறை இங்கே அழைச்சிட்டு வரணும். தவிர, அவங்ககிட்டே எதையாவது பேசிக்கிட்டே இருங்க. பழைய சம் பவங்களை நினைவுப்படுத்துங்க. அவங்களுக்கு தெரிஞ்சவங்களோட பேர்களை எல்லாம் காதில் அடிக்கடி சொல்லுங்கள். நான் சொன்னதை விடாம ஃபாலோ பண்ணினா, ஒரு வருஷத்துக் குள் இல்லே ரெண்டு வருஷத்துக்குள் இம்ப்ரூவ் மெண்ட் தெரியும்!''

கவுதமும், சுகந்தியும் ஒருவரையொருவர் நம்பிக்கையுடன் பார்த்துக் கொண்டனர்.

அதன்பின் சுகந்தியின் செயல்கள் கவு தமை வெகுவாய் ஆச்சர்யப்படுத்தியது. சொந்த தங்கையாய் இருந்தால் கூட இப்படி சிரத்தையு டன் கவனித்திருப்பாளா என்பது சந்தேகம் தான்!

நந்தனாவை தினசரி குளிப்பாட்டி, உடை

புடுத்தி, உணவூட்டி, மருந்து மாத்திரைகளை புகட்டி சிறு குழந்தையைப் போலவே கவனித்துக் கொண்டாள்.

தான் வேலையாய் இருக்கும் நேரங்களில் டி.வி.யை ஆன் பண்ணி அதன்முன் அமர வைத்து விடுவாள். கண் முன்னே நபர்கள் தன்னிடம் உரையாடுவது போன்ற தாக்கத்தை ஏற்படுத்துமே!

நர்சரிக்கு செல்லும்போது... கூடவே நந்தனாவையும் அழைத்துச் சென்று விடுவாள். பாதுகாப்புக்காக என்பதோடு, அவளுக்குப் பிடித்த சூரியகாந்தி மலர்கள் அங்கல்லவா நிறைந்திருக்கிறது. நேரம் வாய்க்கும் போதெல்லாம் கடற்கரைக்கும் அழைத்துச் சென்றாள். அதனாலேயே இப்போதெல்லாம் டூ வீலரை தொடுவதில்லை. ஆட்டோவில்தான் பயணம்.

ஆரம்பத்தில் விஷ்ணுப்ரியா அவளைப் பார்த்து பயந்தாள். மெல்ல அவள் பயத்தைப் போக்கினாள் சுகந்தி. இப்போது விஷ்ணுப்ரியாவே அவள் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறாள்.

நந்தனாவிடம் பதிலேதும் வராவிட்டாலும் எதையாவது பேசிக் கொண்டேயிருப்பாள் சுகந்தி. அவள் காதில்... அவளுக்கு பரிச்சயமான நபர்களின் பெயர்களை அடிக்கடி மந்திரம் போல் உச்சரிப்பாள்.

அன்று...

அரக்கப் பரக்க சுழன்றுக் கொண்டிருந்தாள் சுகந்தி. விஷ்ணுப்ரியாவை ஆட்டோவில் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, ஷூ அணிந்து கொண்டிருந்த கணவனுக்காக மேஜையில் டிபனை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது...

''சுகி... சீக்கிரம் வா!'' என்று குரல் கொடுத்தான் கவுதம்.

''இதோ வந்துட்டேன்'' ஓடினாள்.

அங்கே நந்தனா.... முந்தானை நழுவி கீழே விழுந்திருக்க.... லஜ்ஜையின்றி கவுதமின் முன் அமர்ந்திருந்தாள்.

''இவளை சரிப்பண்ணு'' என்றான்.

புடவைத் தலைப்பை எடுத்து பின் பண்ணிய சுகந்தி... வழக்கமான படபடப்பு ஏதுமின்றி மனசு தெளிவாய் இருந்ததை எண்ணி வியந்தாள்.

'நானா... நானா இப்படி மாறினேன்? என்னுள்ளிருந்த துவேஷமெல்லாம் எங்கே போயிற்று?'

கவுதம் சாப்பிட்டு விட்டு போனப் பிறகு... பீரோவைத் திறந்து அந்த ஆல்பத்தை எடுத்தாள்.

# 6

வளைகாப்பு வைபவம் நடந்தபோது எடுக்கப்பட்ட அதே ஆல்பம்.

வயிறு பம்மென்று புடைத்திருக்க... சகல அலங்காரத்துடன் சுகந்தி. அவளை விட்டு இங்குமங்கும் நகராமல் பூனைக்குட்டியாய் எல்லா புகைப்படத்திலும் நந்தனா இருந்தாள்.

வெளிர் நிறம். அலையலையாய் கூந்தல். பளிச்சென்ற கண்கள் வசீகரித்தது. கூர்மையான நாசியின் பக்கவாட்டில் வலதுபுறம் கருமச்சம். சிரிக்கும்போது கூடுதல் அழகைத் தந்த தெற்றுப் பல். எப்போதும் இணைபிரியாதிருக்கும் ஸ்டிக்கர் பொட்டின்மேல் சந்தனக்கீற்று. பார்க்க அழகான மலையாள யுவதியைப் போல் இருப்பாள். அவள் சும்மா இருந்தாலும் கண்கள் மட்டும் சிரித்துக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு புகைப்படத்திலும் சிரித்துக் கொண்டு, கெஞ்சும் பாவனையோடு, குறும்புப் பார்வையுடன் பல பாவங்களுடன் இருந்தாள் நந்தனா.

'அத்தனையும் எங்கேப் போயிற்று நந்தனா? இன்று அனாதையாகி, புத்தி சுவாதீனமாகி, வாழ்க்கையை தொலைத்துவிட்டு, எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி நிற்பதற்கு யார் காரணம்?

என் நெஞ்சுக்குள் மண்புழுவாய் நிமிண்டிக் கொண்டிருக்கும் குறுகுறுப்பு எப்போது அடங்கும்?'

அப்படி என்னதான் நடந்தது நந்தனாவுக்கு?

பைக்கில் கம்பீரமாய் ஆரோகணித்திருந்தான் ஜீவன். கணிதத்தில் முதுகலை இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் வசீகரமான கல்லூரி மாணவன்.

''டேய்.. வேணான்டா... ஏதாவது பிரச்சினையாய்டப் போகுது...'' என்றான் பின்னால் அமர்ந்திருந்த பிரகாஷ்.

''ஒண்ணும் ஆகாது... நீ வேடிக்கை மட்டும் பார்!'' பைக்கை அந்த சிறிய மாடி வீட்டின் முன் நிறுத்தினான்.

''என்னமோ செய்... ஸ்ரீகாந்தோட அப்பா தொட்டதுக்கெல்லாம் அரிவாள் தூக்கறவர்'' என்றவன் சற்று தள்ளியே நின்றுக் கொண்டான்.

வார்னிஷில் பளபளத்த, வேலைப்பாடு

டன் கூடிய ரோஸ்வுட்
கதவு திறந்திருக்க...
உள்ளிருந்து குருமா
வாசனை கமகமத்தது.

''பாண்டியர்...
டேய் பாண்டியா!''

''டேய்
வேணான்டா ஜீவா!''

''நீ சும்மாயிரு''
மெல்லிய குரலில் அதட்
டியவன், ''பாண்டியா...
சீக்கிரம் வாடா... நேர
மாச்சு!''

''எவன்டா
அவன் என் பெயரை
ஏலம் போட்டுக்கிட்டி
ருக்கவன்?'' கர்ண கடூ
ரமான குரலைத்
தொடர்ந்து கடா மீசை
யும் தொப்பை வயிறு
மாக சாப்பிட்டுக்கிட்டி
ருந்த கையோடு எழுந்து
வந்தார் ஐம்பத்தைந்து
வயது மதிக்கத்தக்க
நபர்.



## இளமை தரும் பப்பாளி!

பால் வடியும் பழவகையைச் சேர்ந்த பப்பாளியை காலை, மாலை, இரவு எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம். இதில் வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்து உள்ளதால் மாலைக்கண் நோயை குணப்படுத்தும். வாய், மூக்கு, தொண்டை, உணவு மண்டலத்தில் திசுக்கள் பாதிப்பை குணப்படுத்தும். பல், எலும்பு வளர்ச்சிக்கு உதவும் என்பதுடன் தோல் வறட்சியையும் போக்கும்.

பப்பாளியை தினசரி சாப்பிட்டால் கண்கள் அழகாக இருக்கும் என்பதுடன் என்றும் இளமையோடும் இருக்கலாம்.

பிரகாஷ், ஜீவவின் பின்னால் ஒளிந்தான்.

''சார்.... இங்கே பாண்டியன்ங்கறது...!''

''நான்தான்...'' குழப்பமும் கோபமுமாய் பார்த்தார். அவர் பின்னேயே வந்து நின்ற இனியவன் இவர்களிருவரையும் பார்த்து 'டேய்... என்னடா இங்கே வந்து வம்பு பண்றே?' என்று சைகையில் கேட்டான்.

''இல்லே சார்... நான் கேட்டது என் கூட காலேஜில படிக்கற பையனை!''

'அப்ப என்னை அழைக்கலை' நிம்மதியானார் பாண்டியன்.

''நம்ம வீட்லே காலேஜில படிக்கற பையன்னா இவன்தான். பேரு இனியவன். இவனையாத் தேடி வந்தே?''

''இல்லே சார்... இவரையில்லே! ஆனா இவரை எங்கோ பார்த்த மாதிரியிருக்கு. வணக்கம் சார்... நீங்க எந்த காலேஜ்?''

பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ''பிரஸிடென்சி'' என்றான் இனியவன்.

''நான் விவேகானந்தாவுல படிக்கிறேன். இவன் பிரகாஷ். என் க்ளாஸ்மேட்.''

''ஹலோ...!''

''ஹலோ...!''

''அப்ப பாண்டியன்னு?''

''என்ன அட்ரஸ்?''

''இதே அட்ரஸ் தான் சார். நம்பர் பத்து, குறுக்கு சந்து...''

''அதானேப் பார்த்தேன்... இது தெரு... அடுத்து உள்ளதுதான் குறுக்கு சந்து... இனியா, தம்பிக்கு அந்த வீட்டை காண்பிச்சிட்டு வாடா....!''

பாண்டியன் உள்ளே சென்றுவிட, இனியவன் அடிக்குரலில், ''என்னடா இப்படிப் பண்ணிட்டே? இன்னைக்கு உன் கிட்டே எங்கப்பா மாட்டிக்கிட்டாரா? நானும் உன் க்ளாஸ்மேட்தான்னு தெரிஞ்சது... தோலை உரிச்சிடுவார் தெரிஞ்சதா? உன் வீட்டுக்கு இதே மாதிரி ஒரு நாள் நானும் வர்றேன் இரு...''

''எங்கப்பாதான் காலேஜுக்கு வந்து உங்களை எல்லாம் பார்த்திருக்காரே...''

''ஒரு நாள் மாட்டதான் போறே...''

''சரி... பேசிக்கிட்டே நிக்காம கூட வந்து பாண்டியன் வீடு எங்கேயிருக்குன்னு காட்டுங்க சார்...'' ஜீவனால் சிரிப்பை அடக்கமாட்டாமல் பைக்கை உதைத்து கிளப்பினான்.

வழக்கமாய் சந்திக்கும் இடத்தில் காத்திருந்தான் ஜீவன்!

மாலை வெயில் கடல் மேல் மஞ்சள் ஆடையைப் போர்த்தி தகதகக்க வைத்திருந்தது. குப்பத்து சிறுவர்கள் சுனாமிப் பற்றிய பயமின்றி கடலில் சுறாமீன் போல் டைவ் அடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

சற்று தூரத்தில்... துப்பட்டா காற்றில் பறக்க... பறந்த கூந்தலை சரிப்பண்ணியபடி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள் நந்தனா.

''ஏன் குஜிலி இவ்வளவு நேரம்?''

''ப்ளீஸ் ஜீவன்... என்னை குஜிலின்னு கூப்பிடாதே... பிடிக்கலே... அசிங்கமாயிருக்கு!''

''ஏன் குஜிலி பிடிக்கலே?''

''நான் போய்டுவேன்!''

''சரி... சரி... ரொம்ப பிகு பண்ணாதே... இனி லேட்டா வந்தா இப்படிதான் கூப்பிடுவேன்!''

''காதலிக்காக காத்திருப்பதில் இருக்கிற இன்பம் கலவியில் கூட இல்லைன்னு சொல்வாங்க... நீ என்னடான்னா... அரைமணி நேரம் பொறுத்துக்க மாட்டேங்கிறே''

''அரை மணி என்ன ஒருநாள் முழுக்கக் கூட காத்திருப்பேன்... ஆனா, நீ கோவிச்சுப்பே...''

''ஏன்... நான் எதுக்கு கோவிச்சுக்கணும்?'' மண்ணில் இருந்த கிளிஞ்சல்களைப் பொறுக்கி தூர எறிந்தாள்.

''என் மாமியார் காலேஜ்லேர்ந்து... என்னப் பார்க்கிறே... நீ படிக்கிற குயின்மேரீஸ் என் மாமியார் காலேஜ்தானே... அங்கே இருந்து ஏகப்பட்ட குஜிலிங்க கட் அடிச்சிட்டு இங்கே கால் நனைச்சிட்டுப் போக வருதுங்க. பல பட்சிங்க, பயல் படு ஸ்மார்ட்டா இருக்கானே, அப்ளிகேஷன் போடலாமான்னு லுக் விடுதுங்க... மனசு பெண்டுலம் மாதிரி ஆடுது நந்து...'' என்றான் பரிதாபமாக.

''ராஸ்கல்... எவ்ளோ திமிர் இருந்தா என்கிட்டேயே இப்படி பேசுவே?''

''நான் எதையும் மறைக்காம வெளிப்படையா பேசறதுக்கு நீயில்லே கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுக்கணும்?'' முறைத்தாள்.

''நாளைக்கு நமக்கு கல்யாணமாகிட்ட பிறகு நீ கொஞ்சம் விட்டுக் கொடுக்கணும்!''

''விட்டுக் கொடுக்கணுமா? எதை?''

''என்னைதான்! எனக்கு யாரையும் ஏமாத்த மனசு வராது நந்து. யார் கேட்டாலும் அன்பை அள்ளி அள்ளித் தரணும்னு நினைப்பவன். நிறைய பொண்ணுங்க பாவம்.... ஒன்சைடா லவ் பண்ணி நீளமா நகம் வளர்க்கிறாளுங்க... உன் கூட அஞ்சு வருஷம் குடும்பம் நடத்துவேன். அப்புறம் டைவர்ஸ் பண்ணிடலாம். மீதிப் பேருக்கெல்லாம் ஒரு வருஷம் தான் சான்ஸ்.... என்ன சொல்றே?''

''உளறாதே ஜீவன்... உன் குறும்புத்தனத்தை எல்லாம் இதிலே காட்டாதே! விளையாட்டுக்குக் கூட நாம பிரியலாம்னு சொல்லாதே.'' குரலில் பிசிறல்.

''ஏய் லூஸு... சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்!''

''என்னது லூஸா? விட்டா மென்ட்டல் ஹாஸ்பிடல்லேயே சேர்த்து விட்ருவே போலிருக்கே? உன்னை...!'' இரண்டு கைகளிலும் மணலை அள்ளி அவன் சட்டைக்குள் போட்டாள்.

''ஏய்.... ஏய்... என்ன பண்றே நீ? சட்டை பேண்ட் எல்லாம் மணல். அம்மா திட்டப் போறாங்க.''

''சரியான அம்மா கோந்து!''

''கிண்டலா? ஏன்.... அம்மா மேல பாசமா இருக்கறது தப்பா?''

''ச்சீ.... எனக்கு உன்கிட்ட ரொம்ப பிடிச்சதே அம்மாமேல கொட்டற பிரியம்தான்! என் அண்ணன் மகேஷும் உன்னை மாதிரி இருந்திருந்தா எங்களோடயே இருந்திருப்பான்''

''அவர் எங்கே இருக்கார்னு இன்னும் தெரியலியா?''

''ம்ஹூம்... எங்களோட எந்த காண்டாக்ட்டும் இல்லே. ஜார்கண்ட்ல குடும்பத்தோட செட்டில்




அன்னாசிப்பழம் பல், எலும்பு, தோல் வியாதிகளை குணப்படுத்தும். தொண்டைப்புண் மற்றும் புற்றுநோய்க்கும் மருந்து ஆகும். வளரும் குழந்தைகளுக்கு அன்னாசிப்பழத்தை தொடர்ந்து கொடுத்து வந்தால் பல வியாதிகளில் இருந்து விடுதலை கிடைக்கும்.

ஆயிட்டதா கேள்விப்பட்டோம். என் கூட பிறந்ததே அவன் மட்டும்தான். இப்ப அவனு மில்லே. உன்னைப் பார்க்கிறப்ப ரொம்ப பொறாமையா இருக்கு ஜீவன்''

''எதுக்கு?''

''ரெண்டு மூணு தலைமுறையா ஒரே வீட்ல கூட்டுக் குடும்பமா வசிக்கிறீங்களே! அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா, தாத்தா, பாட்டின்னு மொத்தக் குடும்பமும் ஒண்ணா இருக்கறது பெரிய விஷயம்தானே?''

''ரொம்பப் பெரிய வீடு... பங்குன்னு பிரிச்சா விக்க வேண்டி வருமே... அதனால தாத்தாவும், பாட்டியும் கூட்டுக் குடும்பம்ங்கறதுல உறுதியா இன்னைக்கு வரை கட்டுக்குலையாம பார்த்துக்கறாங்க. அதனாலதான் வெளியிலேர்ந்து எந்த அலையன்ஸையும் ஏத்துக்க மாட்டாங்க. ஒண்ணுக்குள்ளே ஒண்ணுன்னு சொந்த பந்தத்துலேயே கல்யாணம் பண்ணி வச்சிடுவாங்க''

''அப்ப நான்?'' என்றாள் கரிய விழிகள் மிரட்சியுடன் படபடக்க.

''நான் என்ன பண்ண முடியும்? எது நடக்கணுமோ, அது நன்றாகவே நடக்கும்.''

''என்னை கைவிட்டுடுவியா ஜீவன்?''

''சீச்சீ... ஏன் அதுக்குள்ளே எமோஷனல் ஆக்றே? எல்லாம் நல்லபடியே நடக்கும் கவலைப்படாதே!''

''......?!''

''மூட் அவுட் ஆயிட்டியா? எல்லாத்தையும் ஸ்போர்டிவ்வா எடுத்துக்கணும். ஒண்ணு தெரியுமா? எலக்ஷன் டைம்ல எங்க வீட்டுக்கு ஏகப்பட்ட விசிட்டர்ஸ் வருவாங்க''

''ஏன்?''

''எங்க வீட்லே மட்டும் நாப்பத்தஞ்சு ஓட்டு இருக்கே! அமைச்சர்களெல்லாம் சர்வ சாதாரணமா வீட்டுக்கு வருவாங்க. கவர்ன்மெண்ட்ல காரியம் ஆகணும்னா எல்லாரும் எங்ககிட்டே தான் வருவாங்க. தாத்தா, அப்பா, சித்தப்பாவுக்கெல்லாம் செக்ரட்டேரியட்ல அவ்ளோ செல்வாக்கு''

''வெரி இன்ட்ரஸ்ட்டிங்!''

''ஜீவன்... இங்கே வா!'' அப்பா சந்தானம் அழைத்தார்.

''என்னப்பா?'' பவ்யமாய் வந்து நின்றான்.

''படிப்பெல்லாம் எந்தளவுல இருக்கு?''

''நல்லா படிக்கிறேன்ப்பா!''

''டிகிரி வாங்கின கையோட வேலை ரெடியாயிருக்கு. எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணிட்டேன்... புரியுதா?''

''சரிங்கப்பா!''

''ஆமா... அஸ்வினி பாடத்துல ஏதோ டவுட் கேட்டாளாம். சொல்லித்தர மாட்டேன்னியாம்...''

''இல்லேப்பா... அப்படி சொல்லலே...!''

''அதானே பார்த்தேன். போ... போய் முதல்ல அவளோட டவுட்ட கிளியர் பண்ணு!''

''சரிப்பா!''

அஸ்வினி... அவனின் அத்தை மகள். முறைப் பெண். கல்லூரியில் மூன்றாமாண்டு கணிதம் படிப்பவள். படிப்பு முடிந்ததும் ஜீவனின் கையால் தாலி கட்டிக் கொள்ள தயாராய் இருப்பவள்.

அந்தக் குடும்பத்தை பொருத்தவரை பெரியவர்கள் வைத்தது தான் சட்டம். சிறியவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை.

7

''மாடியிலே குடித்தனக்காரங்க வந்துட்டாங்க போல...'' மனைவி பரிமாறிய சூடான இட்லியை வேர்க்கடலை சட்னியில் தொட்டு வாயில் போட்ட ருக்பாலன் கேட்டார்.

''ஆமாங்க விடியற்காலையில வந்துட்டாங்க!''

''நல்லா விசாரிச்சியா... நல்லவங்க தானே?'' என்ற ருக்பாலன் தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர். ஆடிட்டிங் நேரம் என்பதால் இரண்டு நாட்களாக இரவு வெகுநேரம் கழித்தே வந்தார் என்பதால்... எதுவும் தெரியாமலிருந்தார்.

''விசாரிக்காம விட்ருவேனா? கல்யாணமாகி நாலஞ்சு மாசம்தான் ஆகுது. அந்தப் பொண்ணு சுகந்திக்கு நம்ம நந்தனாவை விட மூணு நாலு வயசுதான் அதிகமிருக்கும். அந்தப் பிள்ளையும் நல்லப் பிள்ளைதான். வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணி இருக்காங்க.''

''லவ் மேரேஜா? தெரிஞ்சும் எப்படி வீட்டை வாடகைக்கு விட்டே?'' லேசான கோபம் தெறித்தது பேச்சில்.

''அதனால என்னங்க? நாமளும் காதலிச்சி, வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கதான்... ஞாபகமில்லையா?''

''இருக்கறதாலதான் சொல்றேன். இன்னைக்கு வரை எந்த சொந்த பந்தமும் நம்மளை சேர்த்துக்கலே. யாருமில்லாம தனித்தீவா வாழ்ந்துக்கிட்டிருக்கோம். மகேஷும் நாம செய்த அதே தப்பை செய்துட்டு... பெத்தவங்களே வேண்

டாம்னு தலை முழுகிட்டுப் போகலியா? அப்ப தான்... என்னைப் பெத்தவங்களும் நான் செய்த காரியத்தால எவ்வளவு வேதனைகளையும், அவ மானங்களையும் சுமந்திருப்பாங்கன்னு அனுப வப்பூர்வமா உணர்ந்துக்கிட்டேன்.''

''காதல்னா சிலரை பகைச்சுக்க வேண்டி தான் ஆகும். இப்ப நீங்க ஃபீல் பண்றதைப் பார்த்தா என்னை கல்யாணம் பண்ணினதுக்காக வருத்தப்படறீங்களோன்னு தோணுது. நானும் தானே என் பக்க சொந்த பந்தங்களை பிரிஞ்சி வந் திருக்கேன். அழகா ரெண்டு குழந்தைகளை பெத் திருக்கேன் நம்ம அன்போட பரிசா.''

''சரி... பழச வேணாம். யதார்த்த வாழ்க் கையை யோசிச்சேன். உறவுக்காரங்களும் வரப் போக இருந்தாதான் நல்லது. நம்ம நிலைமை ஒரு பிள்ளைக்கு ஏற்பட்டாச்சு. நந்தனாவுக்கும் ஏற்பட் டுடக்கூடாது. மத்தவங்களைப் பார்த்து நாமளும் அப்படிப் பண்ணிக்கிட்டா என்னன்னு தோணி டக் கூடாதில்லே... அதுக்காக சொன்னேன்.''

கையை கழுவிக் கொண்டவரிடமிருந்து பெரி தாய் ஏப்பம் வந்தது.

''அந்தப் பிள்ளைங்களை பார்க்கறப்ப... ஏதோ என் வயத்திலேயே பொறந்த மாதிரி தோணுதுங்க.''

''சரி... சரி... நந்தனா எப்ப வருவா? காலேஜ்ல டூர்னு போய் ரெண்டு நாள்தான் ஆச்சு... ரெண்டு மாசமான மாதிரி வீடு வெறிச் சோடி கிடக்கு.''

''நாளன்னிக்கு வந்துடுவா!''

''அந்தப் பிள்ளை பேரென்ன சொன்னே? எங்கே வேலையாம்?''

''பேரு கவுதம். கம்பெனி பேரு தெரி யலே... பன்னாட்டு நிறுவனம்னு சொல்லுச்சு. நல்ல படிப்பு, கை நிறைய சம்பளம்.''

''கல்யாணமாகி நாலஞ்சு மாசம் ஆகியிருக் குன்னு சொன்னியே... இத்தனை மாசமா எங்கே யிருந்தாங்களாம்?''

''நுங்கம்பாக்கத்துல... கூட்டுக் குடும்பமா அம்பது பேர் ஒரே வீட்லே இருக்காங்களாம். அந்த வீட்டு மாடி போர்ஷன்ல இருந்திருக்காங்க. தண்ணீர் பிரச்சினை தவிர... வீட்டு சொந்தக்கா ரங்க அடிமை மாதிரி நடத்தறாங்களாம். அவங்க வீட்ல உள்ளவங்களை மாதிரி இவங்களும் அவங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கணும்னு சொல்றாங்களாம். சின்னஞ்சிறுசுங்க... அடிக்கடி பீச்சு, சினிமா, ஓட்டல்னு போறது சகஜம்தானே? இதனால வீட்லே மத்த இளையவங்க மனசுக் கெடாதான்னு திட்றாங்களாம்? சிரிச்சாக்கூட முறைக்கிறாங்களாம்.''

''நல்ல வீடு... நல்ல குடும்பம்'' என்று பக பகவென்று சத்தம் போட்டு சிரித்தார் ருக்பாலன்.

வீட்டில் செய்த இனிப்புகளை கொண்டு வந்து தந்தாள் சுகந்தி.

பூரண சந்திரனாய் ஜொலித்த அவளின் முகம் பார்த்து புன்னகைத்த தனம், ''எதுக் கும்மா இதெல்லாம்?'' என்றாள்.

''இந்த வீட்டுக்கு வந்து முதன் முதல்ல சமைச்சது இதைதான். இனிப்போட ஆரம்பிக்க லாமேன்னுதான். உங்கப் பொண்ணை பார்க் கவே முடியலியே...''

''காலேஜ் டூர் போயிருக்காம்மா.. நாளைக்கு வந்துடுவா... தம்பி ஆபீசுக்கு போயி ருக்காரா?''

''இல்லேம்மா... ஒரு ட்ரைனிங் ப்ரோக்ரா முக்காக சேலம் போயிருக்கார்... வர நாலு நாள் ஆகும்.''

''இந்த வீட்டுக்கு வந்து ஒரு நாள்கூட முழுசா ஆகலே... அதுக்குள்ளே தனியா விட் டுட்டு போயிருக்காரா?''

''முன்னேறணுமில்லையா? இந்த வீட்ல தனியா இருக்க எனக்கென்னம்மா பயம்? அதான் அம்மா மாதிரி நீங்க இருக்கீங்களே?''

இருவரும் நெருங்கிப் பழக அவர்களுக்கு ஒரு மணி நேரமே போதுமாயிருந்தது. உண்மை யான உள்ளன்புடன், உறவுடன் பழகினர்.

மறுநாள் வந்திறங்கினாள் நந்தனா.

''மாடியிலே ஆள் வந்துட்டாங்க போலயி ருக்கே?'' அம்மா கொடுத்த காபியை ஊஞ்சலில் அமர்ந்து ஆடியபடி குடித்தாள்.

''அதுக்குள்ளே தெரிஞ்சுப்போச்சா? என்ன டிபன் சமைக்கட்டும்? ரவாதோசை?''

''கொஞ்சம் டைம் எடுத்துக்கிட்டு, கொஞ் சமே சிரமப்பட்டு சூப்பரா பரோட்டா போடேன் தனம்! குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டு ஈவ்னிங்தான் எந்திரிக்கப் போகிறேன். ஓக்கேயா?''

''உதைப்படப் போறே... அம்மாவை பேர் சொல்லியா கூப்பிடறே?''

''நான் உங்கிட்ட அம்மா மாதிரியா பழக றேன்? ஃப்ரண்ட் மாதிரிதானே பழகறேன்? ஃப் ரண்டை பேர் சொல்லிக் கூப்பிடாம எப்படி கூப் பிடுவாங்களாம். போ... தனம்! நீ சரியான கட் டுப்பெட்டியா இருக்கே?''

''ஏய் வாலு... மொதல்ல போய் குளிச் சிட்டு வா!''

**மா**லை!

ஃப்ரெஷ்ஷாக இருந்தாள் நந்தனா! மாடிப்

படி ஏறிச் சென்றாள். கையில் தடிமனாய் ஒரு ஃபைலும், பேனாவும்.

திறந்திருந்த கதவை விரலால் தட்டினாள்.

''எக்ஸ்க்யூஸ்மீ!''

''யாரது?''

கனிவாய், கலையாய், சிறு டவலால் கையை துடைத்தபடி வந்தவளைப் பார்த்து திருப்திப்பட்டாள் நந்தனா.

''மேடம்... ஐயம் காஞ்சனா. மல்ட்டி லெவல் மார்க்கெட்டிங்லேர்ந்து வர்றேன். நீங்க பேஸ்ட்லேர்ந்து அரிசி வரை என்னென்ன கம்பெனி யூஸ் பண்றீங்கன்னு சொன்னீங்கன்னா...''

''ஸாரிம்மா... டைமில்லே... எனக்கு கிச்சன்ல வேலை இருக்கு.''

''பரவாயில்லே மேடம். நானும் கிச்சன்லேயே வந்திடறேன். நான் கேட்கிற கேள்விக்கு பதிலை சொல்லிக்கிட்டே சமையுங்க...''

''வாட்?'' சுகந்தி அவளை சந்தேகமாய் பார்த்தாள். பார்க்க படித்தவளாய், அழகானவளாய் தெரிகிறாள். ஆபத்தானவளோ? திருடுவதற்காக வந்திருப்பாளோ?

''ரொம்ப டயர்டா இருக்கு... தெருத் தெருவா... வீடு, வீடா அலையறேன்.. குடிக்கத் தண்ணிக் கேட்டாக்கூட தர மாட்டேங்கிறாங்க. உங்களை பார்த்தா நல்லவங்களாத் தெரியுது. கண்டிப்பா காபி தருவீங்க. என்ன பிராண்ட் மேடம்? ப்ரூவா, சன்ரைஸா, இல்லே ஃபில்டர் காபியா?'' என்றபடி உள்ளே நுழைய முற்பட்டாள்.

கலவரமானாள் சுகந்தி.

''என்ன அத்துமீறல் இது? படிச்சப் பொண்ணா நீ? கெட் அவுட்.''

''மேடம்... காபி வேண்டாம்... நான் கேக்கற கேள்விக்கு மட்டும்...''

''கோபத்தைக் கிளறாதே... போய்டு.... அம்மா... அம்மா இங்கே வாங்களேன்... அம்மா!'' குரல் கொடுத்தாள் பயத்துடன்.

அதற்கு மேல் அடக்கமாட்டாமல் சிரித்தாள் நந்தனா.

''வெரி குட்... வெரி குட்... இப்படித் தான் அலர்ட்டா இருக்கணும்.''

புரியாமல் பார்த்தாள் சுகந்தி.

கையை நீட்டினாள். ''நீங்க சுகந்திக்கா. நான் நந்தனா... க்ளாட் டு மீட் யூ!''

''ஓ... ஸாரி... ஸாரி... வெரி ஸாரி...!''

''போதும்... போதும்... எத்தனை ஸாரி? பத்திரமா பீரோவுல அடுக்கி வச்சிடுங்க... எனக்கு வேணாம். கூடவே நான் தர்ற ஸாரியையும் சேர்த்து! வெரி ஸாரிக்கா. முதமுதல்ல சந்திக்கறப்பவே பயமுறுத்திட்டேன்.''

''பட், வெரி இன்ட்ரஸ்டிங்.'' மனம் விட்டு சிரித்தாள் சுகந்தி.

''தென், ஆட்சேபணையில்லையே?''

''எதுக்கு?''

''உரிமையோட அக்கான்னு கூப்பிட்டதுக்கு?''

''அப்படி கூப்பிடலேன்னாதான் வருத்தப்படுவேன்.''

''எல்லாம் ஒரு முன் எச்சரிக்கைதான். மாமா நல்லா ஸ்மார்ட்டா இருப்பார்னு அம்மா சொன்னாங்க.''

''மாமா?''

''ஆமாங்க்கா... கவுதம் மாமாவைதான் சொல்றேன்.''

''யூ... நாட்டி!'' கன்னத்தை செல்லமாய் தட்டினாள்.

''என்னைப் பிடிச்சிருக்கா?''

சுகந்தி அவள் கன்னத்தில் முத்தமிட்டு ''ரொம்ப'' என்றாள்.

நெகிழ்ந்துப் போனாள் நந்தனா.

''நிஜமாகவே ரொம்ப சந்தோஷமாயி

## ரத்தசோகைக்கு திராட்சை!

**பழ வகைகளில் மிகவும் சிறந்த, வைட்டமின் சி மற்றும் தாது உப்புக்களும் புளிப்புச் சத்தும் கொண்ட திராட்சைப்பழம் ரத்த அழுத்தம், ரத்தசோகைக்கு நல்ல மருந்து ஆகும். குடல் புண், மூட்டுவலி, இடுப்பு வலி, காமாலை நோய் ஆகியவற்றுக்கும் திராட்சைப்பழம் மருந்தாகிறது. எனவே குடும்பத்தில் உள்ள அனைவரும் முடிந்த அளவு திராட்சை பழத்தை பயன்படுத்த வேண்டும்.**

ருக்கு. கூடப் பிறந்தவங்கன்னு யாருமில்லாம கஷ்டப்பட்டுக்கிட்டிருந்தேன். அழகா எனக்கொரு அக்கா கிடைச்சிட்டாங்க.''

''நானும் சொந்தபந்தங்களை பிரிஞ்சு வந்தவதான். அழகான தங்கச்சி கிடைச்சிருக்கறதை நினைச்சி சந்தோஷமா இருக்கு.''

''இப்படியே மாத்தி மாத்தி ஃபீல் பண்ணிக்கிட்டிருந்தா எனக்கு யாரு காபி போட்டுத் தருவாங்களாம்?''

''ஸாரி... அஞ்சே நிமிஷம்!''

போட்டுக் கொடுத்த காபியை குடித்தவள், ''மாமா எப்ப வர்றார்?'' என்றாள்.

''ரெண்டு நாள் ஆகும்!''

''என்னைப் பத்தி எதுவும் சொல்லிடாதீங்க. வந்ததும் நானே என்னை இன்ட்ரடியூஸ் பண்ணிக்கறேன்.''

''சரி... சரி!'' என்றாள் வாய்விட்டு சிரித்தபடி.

முகத்தை மழுங்க வழித்துவிட்டு ஆஃப்டர் ஷேவ்லோஷனை உள்ளங்கையில் கொட்டி கன்னத்தில் தட்டினான்.

அறை முழுக்க நறுமணம் பரவியது.

''குட்மார்னிங் மாமா!''

சடக்கென திரும்பியவன் புதியவளைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

''யாருங்க வேணும்?''

''நீங்கதான் மாமா!''

''வாட்? என்ன அட்ரஸ் மாறி வந்துட்டீங்களா?''

''உங்க பேரு கவுதம். சுகந்தி அக்காவோட ஹஸ்பண்ட்.''

''எல்லாம் சரி... நீங்க யாரு?'' என்றான் ஏற இறங்கப் பார்த்து.

'சுடிதார் அணிந்த தேவதைப் போலிருக்கும் இவள் நார்மலா, அப் நார்மலா?'

''சுகந்தி அக்காவோட தங்கச்சின்னா, உங்களுக்கு கொளுந்தியாள்!''

'ஒரு வேளை சுகந்தியின் தங்கைதானோ? இதுவரை சொன்னதேயில்லையே!'

''ஏய்... போதும்... என் புருஷனை ரொம்ப அசடு வழிய வைக்காதே! இவ பேரு நந்தனா. நம்ம ஹவுஸ் ஓனரோட பொண்ணு!''

''அப்படியா?'' அசடு வழிந்தான் கவுதம்.

அதைப் பார்த்து கலகலவென சிரித்தாள் நந்தனா. அச்சிரிப்பில் அருவியின் சப்தம்!

8

''சும்மா சொல்லக்கூடாது மாமா... நீங்க ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கீங்க''

''தாங்க்ஸ்'' என்றான் சங்கோஜத்துடன்.

''அங்கே பாருங்க சுகந்திக்கா முகத்தை... நான் உங்களை மாமான்னு சொன்னதும் பொறாமை பொங்குது.''

''சே.... அதெல்லாம் ஒண்ணுமில்லே...''

''வாய்தான் சொல்லுது... முகம் வாடுது. சரி... இனி மாமான்னு கூப்பிடலே... ஃப்ரண்ட்... ஃப்ரண்ட்னு கூப்பிடட்டுமா? இது நல்லாயிருக்குல்லே?''

''சரி!'' அவளின் குழந்தை தனத்தை ரசித்து சிரித்தான்.

''க்ளாட் டு மீட் யூ'' என்றபடி அதுவரை முதுகு பக்கமாய் மறைத்து வைத்திருந்த சிறிய பூங்கொத்தை அவனிடம் நீட்டினாள். அதில் முழுக்க சூரியகாந்தி பூக்கள்தான் இருந்தன.

''வாவ்... தாங்க்யூ நந்தனா. சூப்பராயிருக்கு.''

''ஏன் இருக்காது? நானே ரெடி பண்ணினதாக்கும்.''

''இங்கே அவ்வளவு ஈஸியா சூரியகாந்திப் பூ கிடைக்குமா?''

''கிடைக்குமாவா? மொட்டை மாடியிலே




வாழைப்பழத்தில் பூவன், நேந்திரம், ரஸ்தாளி, கற்பூர வாழை, செவ்வாழை, மலைப்பழம், நாட்டு வாழைப்பழம், பச்சை வாழைப்பழம் என பலவகை உண்டு. வளரும் குழந்தைகளுக்கும் அதுபோல் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாழைப்பழம் மிகவும் நல்லது. நமது உணவில் தினசரி ஒரு வாழைப்பழம் சேர்த்துக் கொள்வது நல்லது. ஆனால் சர்க்கரை வியாதி உள்ளவர்கள் அளவாகத்தான் வாழைப்பழம் சாப்பிட வேண்டும்.

போய்ப் பாருங்க. மருந்துக்கு கூட வேற பூச்செடி இருக்காது. எல்லாமே சூரியகாந்திப் பூ தான். ஓகே.... காலேஜுக்கு டைமாய்டுச்சி... ஸீ...யூ!'' தென்றலாய் இறங்கி ஓடினாள்.

பிரம்மித்துப் போய் விட்டான் கவுதம்.

'எப்படியோர் அழகு.... அதில் புதைந்திருக்கும் குழந்தைத்தனம் பேரழகு!'

''என்ன யோசிக்கறீங்க?''

''ரொம்ப சைல்டிஷ்ஷா, இருக்கா யில்லே?''

''ஆமாங்க... ரொம்ப நல்லப் பொண்ணு. நாம இங்கே வந்து நாலஞ்சு நாள்தான் ஆகுது. ஆனா அவளோட ரொம்ப காலம் பழகின மாதிரி ஒரு ஃபீலிங்.''

''எப்படியோ எனக்கொரு கொளுந்தியாள் கிடைச்சிட்டா.''

''ஆசையப்பாரு! ஏன் தங்கச்சி கிடைச்சிட்டான்னு சொல்றது?''

''எதுக்கு வம்பு? ஃப்ரண்ட் கிடைச்சிட்டா... போதுமா?''

''ரொம்ப வழியாதீங்க... டிபன் ரெடியாயிருக்கு. குளிச்சிட்டு வாங்க!''

கவுதம் அவளை இழுத்து இரு கைகளாலும் இடுப்பை சுற்றி வளைத்தான்.

''மனசு முழுக்க நீ இருக்கும்போது... எந்த தேவதையாலும் நெருங்க முடியாது.''

''தெரியும்!'' என்றாள் காதலாய் நோக்கி.

''உன்னோட தனித்துவமே எல்லாத்தையும் பாஸிட்டிவா பார்ப்பது. அந்த குணம்தான் என்னை கட்டி இழுத்தது. எந்த விஷயத்தையும் உன்னால தப்பா பார்க்க முடியாது. என் சுகி ஓர் அபூர்வப் பெண்!''

''எப்பவும் இதேப் பேச்சுதானா?'' செல்லமாய் சிணுங்கினாள்.

''உண்மையைதானே சொல்றேன் என் வெல்லக்கட்டி!'' கட்டி அணைத்து கன்னத்தை மெல்ல கடித்தான்.

கல்லூரிக்குப் போகும் நேரம் தவிர, தூங்கும் நேரம் தவிர நந்தனா எப்போதும் சுகந்தியே கதி என்றிருந்தாள். கவுதமிடம் எல்லா டாபிக் பற்றியும் மணிக்கணக்கில் பேசுவாள். சுகந்தி அவர்கள் நட்பை எள்ளளவும் சந்தேகப்படவில்லை. அவள் நந்தனாவை ரொம்ப நேசித்தாள். தனக்காக எதை வாங்கினாலும், அவளுக்கும் சேர்த்து ஹோர்பாண்ட், க்ளிப், தின்பண்டங்கள் என்று வாங்கி வருவாள். நாட்கள் இனிமையாக நகர்ந்தன. நந்தனாவின் பெற்றோரும் அந்த இளம் ஜோடியை சிலாகித்துப் பேசினர்.

சுகந்தியின் வற்புறுத்தலால் பல சமயங்களில் நந்தனா கவுதமுடன் கல்லூரிக்கு பைக்கில் செல்வாள்.

சுகந்தி கர்ப்பமானாள்!

அவ்வளவுதான்! நந்தனாவை கையால் பிடிக்க முடியவில்லை. ஏகத்துக்கும் துள்ளினாள். அம்மாவை விரட்டி வேலை வாங்கினாள்.

''அதை செய்... இதை செய்!'' என்று சுகந்திக்கு பிடித்ததை எல்லாம் சமைத்து தரச் சொல்லி எடுத்துச் சென்றாள்.

தன் பாக்கெட் மணியில் மிச்சம் பிடித்து சேர்த்து வைத்திருந்த பணத்தில் நிறைய பொம்மைகள் வாங்கி வந்து சுகந்தியை பிரம்மிக்க வைத்தாள்.

கண்கள் நிறைந்தது. இதையெல்லாம் விட நந்தனா செய்த காரியம் மிகப் பெரியது.

சுகந்தியின் ஏக்கம் அறிந்து.... அவளே அறியாமல் அவள் அம்மா வீட்டு போன் நம்பரை எடுத்து பேசியிருக்கிறாள்.

திடும்மென... அந்த வார இறுதியில் வந்திறங்கிய பெற்றோரைப் பார்த்து திகைத்துப் போனவள், அம்மா மூலமாக விவரமறிந்து ஆச்சர்யப்பட்டாள்.

பாறைப்போல் கடினமாக இருந்த அவர்கள் மனசை நயமாய் பேசி, சுகந்தியின் பாசத்தை எடுத்துரைத்து... உறவே வேண்டாம் என்று தலை முழுகி விட்டவர்களை, முழுகாமல் இருப்பதை சொல்லி சேர்த்து வைத்து விட்டாளே!

சுகந்தியிடம் அதுநாள் வரை இருந்த மன பாரம் நீங்கியது. கவுதமுக்கும் சந்தோஷமாய் இருந்தது. அவனுக்கும் உறவென்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. தனியே வளர்ந்த காட்டுச் செடி அவன். அதனால் பிரசவ சமயத்தில் அருகேயிருந்து பார்த்துக் கொள்ள யாருமேயில்லையே என்று மருகியவனுக்கு நிம்மதியாய் இருந்தது. மனைவி கருவுற்றிருந்த சந்தோஷம் வேறு. எப்போதும் இல்லாத அளவுக்கு மனநிறைவு.

அன்று!

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் சுகந்தி!

பேச்சுக்குரல் சப்தம் கேட்டு கண்விழித்தாள்.

''நந்தனா... நந்தனா... தாங்க்ஸ்ம்மா... உனக்காக.... நீ என்ன கேட்டாலும் செய்வேன் நந்தனா!'' உறக்கத்தில் பிதற்றிக் கொண்டிருந்தான் கவுதம்.

திகைப்புடன் கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுகந்தி.

ஏனோ அந்த பிதற்றலை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

''சரி... கிளம்பட்டுமா?'' பின்பக்கம் ஒட்டியிருந்த மணலை தட்டியபடி எழுந்தாள் நந்தனா.

ஜீவன் முகத்தை திருப்பிக் கொண்டான்.

''என்ன ஜீவன்... அமைதியாயிருக்கே?''

''.....?!''

''அட... என்ன அலட்டிக்கறே? சீக்கிரம் சொல்லு... கிளம்பணும்.''

''ரொம்ப மாறிட்டே நந்து!''

''நானா... இல்லையே... கண்ணு, மூக்கு, வாய்னு அதது இடத்துல அப்படியே தான் இருக்கு. பார்லர் பக்கம் தலை வச்சும் படுக்க மாட்டேன். அப்புறம் எப்படி?''

''விளையாடாதே.... பீ சீரியஸ்!''

''ஏய்.... என்னாச்சுப்பா உனக்கு?'' வியப்புடன் மறுபடி அமர்ந்தாள்.

''இப்பல்லாம் உன்னைப் பார்க்கறதே கஷ்டமாயிருக்கு. வாரத்துல ரெண்டு மூணு நாள்தான் வர்றே. வந்த உடனே கிளம்பிப் போய்டறே. ஏன் நந்து... என்னைப் பிடிக்கலையா உனக்கு?''

''பிடிக்காமலா லவ் பண்றேன்? தினமும் பார்த்துக்கிட்டாதான் காதலா? ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்க... மனசுல ஒவ்வொருத்தருக்கும் ஒரு இடமுண்டு. உனக்கான இடம் உனக்கு மட்டும் தான். அங்கே யாரும் வந்துட முடியாது. இதயம் கல்லோ, கட்டையோ அல்ல.... அழிச்சிட்டு எழுதறதுக்கு. அது ரத்தத்தாலும், சதையாலும் உருவாக்கப்பட்டிருக்கு. உன்னை அழுத்தமா பதிய வச்சிருக்கேன். அங்கேர்ந்து நீயே நினைச்சாக்கூட பிச்சிக்கிட்டு போக முடியாது... தெரியுமா? என்னை எல்லோரும் நந்தனான்னுதான் கூப்பிடுவாங்க. உன்னைத் தவிர நந்துன்னு வேற யார் கூப்பிட்டாலும் எனக்கு கோபம் வந்துடும்.''

''எல்லாம் சரி! அப்புறம் ஏன் அவசரமா ஓடறே?''

''அக்காவைப் பார்க்க!''

''யாரு... அந்த மாடி வீட்டு மைனாவதியா?''

''ஏய்... கிண்டல் பண்ணாதே! அக்கா வயித்திலே பாப்பா இருக்கு. அது நல்லா பொறக்கணும்னா அக்கா ஹாப்பியா இருக்கணும். அக்காவுக்கு நான்னா உயிரு. என் கூட பேசிட்டே இருக்கணும் அவங்களுக்கு. ஃப்ரண்ட் வர லேட்டாகும். போரடிக்குமே... அதான் ஓடறேன்''

''ஃப்ரண்டா? அது யாரும்மா புது கேரக்டர்?''

''கவுதம் மாமாவைதான் சொல்றேன்''

''யாரு... உன்னை காலேஜ்ல ட்ராப் பண்ணிட்டு போவார்னு சொல்லுவியே... அவரா?''

''ஆமாம்!''

''தலையெழுத்து....'' என்று தலையில் அடித்துக் கொண்டவன், ''லூஸா நீ! டெனன்டை போய் மாமான்னு சொல்லலாமா? அதுவும் காலேஜ்ல ட்ராப் பண்றார் அது இதுங்கறே... பார்த்துக்க... அவ்வளவுதான் சொல்வேன்.''

''ஏய்... என்னை சந்தேகப்படறியா?''

''சீ... நீயொரு குழந்தை! அதை மத்தவங்க மிஸ்யூஸ் பண்ணிக்கக் கூடாதில்லையா? தவிர, உங்க அக்கா அதை தப்பா எடுத்துக்கப் போறாங்க.''

''அவங்களைப் பத்தி உனக்கு தெரிஞ்சது அவ்வளவுதான். தெரியாமப் பேசக்கூடாது. அவங்களுக்கு எதையும் தப்பா எடுத்துக்கத் தெரியாது. ஃப்ரண்டும் அப்படிதான். எங்க வீடு.... ஓரளவு பெரிசு ஜீவன். ஆனா, நானு, அப்பா, அம்மான்னு ஆட்கள் கம்மி. அக்கா குடிவந்தப் பிறகு தான் எங்க வீடே நிறைஞ்ச மாதிரி இருக்கு. உனக்குப் பிடிக்கலே... சந்தேகப்படறேன்னா சொல்லு.... இனி ஃப்ரண்டோட பைக்ல வரலே.''

ஜீவன் அவளையே கரிசனத்துடன் பார்த்தான்.

''உன்னை சந்தேகப்படற அளவுக்கு நான் மோசமானவன் இல்லே. உருவத்துக்கும், உன் மனசுக்கும் துளிக்கூட சம்மந்தமே இல்லை. இந்த குழந்தைய வச்சுக்கிட்டு நான் எப்படி குடும்பம் நடத்தப் போறேனோ... தெரியலியே!'' இருகைகளாலும் செல்லமாய் அவள் கன்னத்தைப் பிடித்து கிள்ளினான்.

''ரொம்ப சோர்ந்துப் போய்ட்டே சுகந்தி... முதல்ல ஆப்பத்தை சாப்பிடு... அப்புறம் ஜூஸ் தர்றேன் குடிச்சிடு!'' சுகந்தியின் அம்மா சந்திரா மகளை உபசரித்தாள்.

இரண்டு நாளாய் மகளுடன் தான் தங்கியிருந்தாள். ஏழு மாதமாகி விட்டது சுகந்திக்கு. இன்று டாக்டரிடம் செக்கப்புக்கு அழைத்து செல்லும் நாள்.

''ஆப்பம் வேணாம்மா... குமட்டுது.''

''உனக்கு ஆப்பம், தேங்காய்ப் பால்னா உயிராச்சே... அதனாலதானே செய்தேன்...''

''இப்ப வேணாம்மா... காரமா ஏதாவது செய்யேன்.''

''நான் கிளம்பறேன் சுகி! அத்தை அவளை பத்திரமா செக்கப்புக்கு அழைச்சிட்டுப் போய்ட்டு வாங்க.''

''சரிங்க மாப்பிள்ளை. சாயந்திரம் நான்

கிளம்பறேன்.''

''இன்னும் ஒரு வாரம் இருந்துட்டுப் போகலாமே...''

''போட்டது போட்டபடி வந்தேன்.... போகணும். ரெண்டு வாரம் கழிச்சு வர்றேன்.''

''சரி.... வர்றேன் அத்தை, வர்றேன் சுகி!''

''ம்''

படியிறங்கிப் போய் விட்டான்.

பைக் உறுமும் சப்தம் கேட்டது. யதேச்சையாக பால்கனி பக்கம் எட்டிப் பார்த்தாள் சந்திரா.

மருமகனின் பின்னால் நந்தனா அமர்ந்திருக்க... வீறிட்டுப் புறப்பட்ட வண்டியைப் பார்த்து விக்கித்துப் போனாள்.

கொதிப்புடன் மகளிடம் வந்தாள்.

''என்னடியிது கருமம். உன் புருஷன் பின்னால கீழ் வீட்டுப் பொண்ணு உக்காந் துட்டுப் போறா.''

''காலேஜ்ல ட்ராப் பண்ணு வார்ம்மா!''

''எல்லாம் உனக்குத் தெரிஞ்சு தான் நடக்குதா? என்ன முட்டாள்த னம் இது?''

''ஏம்மா?''

''அடியே பைத்தியக்காரி. வய சுப் பொண்ணை ஆம்பளையோட நெருங்க விட லாமா? அதுவும் நீ இப்படி இருக்க றப்ப... உன் புரு ஷன் மனசு அலை பாயாதா? அவ வேற செவசெ வன்னு எடுப்பா இரியறா. நல்ல சம் ்பளக்காரன், லட்சணமா இருக்கான்னு வளைச்சுப் போட்டுடப் போறா. சிரிச்சி சிரிச்சி குழந்தைமாதிரி பேசறவளை மட்டும் நம்பிடவேக் கூடாது.'' அம்மா இன்னும் ஏதேதோ தூபம் போட....

சாம்பிராணி போல் சுகந்தியின் மனசு புகைய ஆரம்பித்தது.... ஏற்கனவே அங்கு நெருப்பு இருந்ததால்.




ஆரஞ்சுப்பழம், ஆப்பிளைவிட 20 முதல் 25 மடங்கு வைட்டமின் சி சத்து கொண்ட நெல்லிக்கனி தனிப்பெரும் மருத்துவ குணமும் கொண்டது. பல் நோய், எலும்பு பாதிப்பு, மலச்சிக்கல், நீர்ச்சுருக்கு, சர்க்கரை வியாதி, மூளைக் கோளாறு, இதயநோய், மூலநோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு நல்ல மருந்து ஆகும்.

நெல்லிக்கனியை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் உறுதி அடையும் என்பதுடன் தாது புஷ்டி, ஊட்டம் ஏற்படும்.

9

முன்புபோல் நந்தனாவிடம் உள்ளன்போடு பழக முடியவில்லை அவளால். அவள் சிரிப்பில் மர்மத்தை தேடினாள். கணவனிடம் அவள் வளவளவென்று தனியே பேசும்போது ஒட்டுக் கேட்கும் பழக்கம் ஒட்டிக் கொண்டது.

அன்று தூக்கத்தில் கூட நந்தனா, நந்தனா என்று உளறினானே! மனதில் ஆழப் புதைந்திருப்பதால் தானோ? கல்லூரியில் ட்ராப் பண்ணுவதோடு முடிந்து விடுகிறதா? இல்லை அதற்கடுத்த படியாய் சினிமா, ஹோட்டல் என்று ஊர் சுற்றுகிறார்களா?

எப்படி அறிவது? அவரையேக் கேட்டு விடலாமா? ஒருவேளை என் யூகம் தவறாயிருந்து, 'நீயா சுகி இப்படியெல்லாம் சந்தேகப்படுகிறாய்!' என்று கேட்டு விட்டால்? தாங்கிக் கொள்ள முடியாதே. 'எதையும் பாஸிட்டிவாக எண்ணும் உன் குணத்தில் தான் மயங்கினேன்' என்பாரே அடிக்கடி.

என் இமேஜ் தகர்ந்துப் போகுமே!

ஒருவேளை என் யூகம் நிஜமாகவேயிருந்து, ''ஆமாம்!'' என்று தைரியமாய் ஒப்புக் கொண்டால்? என் நிலை? கோவிலில் வைத்து தாலிகட்டினாரே ஒழிய ரிஜிஸ்டர்மேரேஜ் பண்ணவில்லையே! பாதுகாப்பில்லாத திருமணம். இதைக் காரணம் காட்டி என்னை ஒதுக்கி... அவளோடு...

''அக்கா!'' அவள் தோளில் முகம் புதைத்தாள் நந்தனா.

வலித்தது.

''ஸ்ஸ்...ப்பா... வலிக்குது... இப்படி மேலே வந்து வந்து விழாதே நந்தனா!''

''ஸாரிக்கா... வலிக்குதா?''

''அழுத்தாதே... பரவால்ல விடு!''

''எனக்கும் என் ஃப்ரண்டுக்கும் காபி வேணுமே.. ப்ளீஸ்''

'அதென்ன என் ஃப்ரண்ட்?'

''எனக்கு டயர்டாயிருக்கு... படுத்துக்கணும் போலிருக்கு!''

''பாப்பா எட்டி உதைக்கிறானா? ஃப்ரண்ட் இங்கே வாங்களேன்... நான் காபி போட்டுத்தரட்டுமா?''

''வேணாம் நானே போடறேன்'' என்று எழுந்து வந்தான், கவுதம்.

''இல்லை நான்தான்... நான்தான்'' என்று இருவருமே கிச்சனில் நுழைய... விகல்பமாக தோன்றியது.

'பேசாமல் நாமே போட்டுக் கொடுத்திருக்கலாமோ?'

அடுத்த பத்தாவது நாள் நடந்த சம்பவம் அவள் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தியது.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து முன்னதாகவே வந்தவனை ஆச்சர்யமாகப் பார்த்தாள் சுகந்தி.

''என்ன இன்னைக்கு இவ்ளோ சீக்கிரம்?''

''காரணமாகத்தான். முதல்ல எனக்கொரு காபிய போட்டுக் கொடுத்துட்டு... நீ டிரஸ் மாத்திக்க.''

''எங்கே போறோம்?''

''சஸ்பென்ஸ்!''

''சொன்னாதான்..!''

''ம்... பொறுத்துக்க மாட்டியே... ஜவுளிக் கடைக்கு..!''

குபீரென்று சந்தோஷப்பூ பூத்தது.

'அடுத்த வாரம் கல்யாண நாள் வரப்போகிறதே... அதற்காக டிரஸ் எடுக்கவா?'

டிரஸ் பண்ணி கிளம்பி விட்டாள்.



## ரத்த விருத்திக்கு பேரீச்சம்பழம்

**தி**னமும் இரவு படுக்கைக்கு செல்லும் முன்பு 2 பேரீச்சம்பழம் தின்றுவிட்டு காய்ச்சிய பசும்பால் குடித்துவந்தால் உடல் வலுவடையும். புதிய ரத்தம் உண்டாகும் என்பதுடன் மேனியும் பளபளக்கும். நரம்புகள் முறுக்கேறும். தொற்று நோய்கள் எட்டிப் பார்க்காது. கண்நோய், பல் நோய்களையும் குணப்படுத்தும்.

கார்... பிரபலமான ஜவுளிக்கடையின் முன் நின்றது.

''உனக்கு பிடிச்ச மாதிரி ஒரு சுடிதார் செலக்ட் பண்ணு!''

'ஏன்... முதல் திருமண நாளாயிற்றே... பட்டுப்புடவை எடுத்து தரக்கூடாதா?' சின்னதாய் ஏமாற்றம் படர... அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்... அழகான பிங்க் நிறத்தில் ஒரு சுடிதாரை தேர்ந்தெடுத்தாள்.

''உங்களுக்கு எடுத்துக்கலையா?''

''என்ன அவசரம்? இன்னொரு நாள் வந்து எடுத்துக்கறேன்.''

காரில் வீடு திரும்பினர்.

''உன் செலக்ஷன் சூப்பர் சுகி!''

''தாங்க்ஸ்!''

''இந்த கிஃப்ட்டை பார்த்ததும் ஷாக்காயிடுவா இல்லே?''

''என்ன கிஃப்ட்? யாருக்கு?''

''தெரியாத மாதிரி கேக்கறே! நம்ம நந்தனாவுக்குதான். நாளன்னிக்கு பர்த்டேயாச்சே? உனக்குத் தெரியாதா?''

''தெரியாதே!''

''எனக்கே தனம்மா சொல்லிதான் தெரியும். நானும் உனக்கு சொல்லலியா? நல்ல ஞாபகசக்தி போ! பொம்பளைங்க சமாச்சாரம் எல்லாம் எனக்குத் தெரியாது. அதான் உன்னைக் கூட்டிட்டு வந்து செலக்ட் பண்ணினேன். இந்த நேரத்துல அலையக் கூடாது... டிஸ்டர்ப் பண்ணிட்டேன். எனிவே நம்ம நந்தனாவுக்குங்கறதால நீயும் சந்தோஷப்படுவியே! என்ன சுகி நான் சொல்றது?''

'அப்படியானால் இது எனக்கில்லையா?' மனசு பொருமியது.

''சுகி?''

''அ... ஆமாங்க... ரொம்ப சந்தோஷமாயிருக்கு!''

அன்றிரவெல்லாம் கணவன் அறியாமல் தலையணை நனைத்தாள்.

'நெருங்கி வரும் திருமணநாள் நினைவில் லையாம். ஆனால், அவள் பிறந்த நாள் மட்டும் நினைவிருக்குமாம். அதுவும் வார்த்தைக்கு வார்த்தை நம்ம நந்தனாவாம். திருமணமாகாத ஒரு கன்னிப் பெண்ணுக்கு உடை வாங்கித்தர இவர் யார்? அம்மா சொல்வதுப்போல் இது சாதா ரண நட்பாய் இருக்க முடியாது.'

வெளியில் சிரித்து உள்ளுக்குள் அழுதாள்.

ஆனால், திருமணநாளிற்கு முதல்நாள். அலுவலகம் முடிந்து வரும்போது ஒரு பார்ச லோடு வந்தான் கவுதம். மனைவியை இதமாய் அணைத்து, பதமாய் கன்னத்தில் முத்தமிட்டு ''டேக் இட் டார்லிங்'' என்றான்.

''என்ன இது?'' என்றாள் ஆச்சர்யமாக.

''பிரிச்சுப் பார்!''

அவசரமாய் பிரித்தவளின் விழிகள் அகன் றன.

பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள பேஷன் டிஸைனிங் பட்டுப் புடவை. கூடவே புதிதாய் தைக்கப்பட்ட ஜாக்கெட்.

''என்ன செல்லம் அப்படிப் பார்க்கிறே? இதுக்காகவே ஆஃப்டே லீவு போட்டுட்டு கடை கடையாய் ஏறி இறங்கி ஏதோ என் அறிவுக்கு எட் டியபடி இந்த சாரிய செலக்ட் பண்ணினேன். நாளைக்கு என் தேவதைய கைப்பிடிச்ச நாளாச்சே... அதுக்காக என் சின்னப் பரிசு! பிடிச் சிருக்கா?''

நெகிழ்ந்துப் போனாள். அழ வேண்டும் போல் சந்தோஷம் ஏற்பட்டது.

வயிறு இடிக்க... கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''தாங்க்ஸ் டியர்!''

''பிடிச்சிருக்கா? அதைச் சொல்லு!''

''அருமையான செலக்ஷன். ஆமா ப்ளவுஸ் எப்படி அளவு இல்லாம தைக்க முடிஞ் சது?''

''டொட்டடொய்ங்!'' பாக்கெட்டிலிருந்து சுகந்தியின் பழைய ஜாக்கெட்டை உருவிக் காண் பித்தான்.

''இதை வச்சுத்தான்!''

''ச்சீ...!'' முகம் சிவந்துப் போனாள்.

சந்திரா மகளை பார்க்க வரும் போதெல் லாம் நந்தனாவைப் பற்றி கூறி எச்சரிப்பது வாடிக் கையானது. சுகந்திக்கு நம்பவும் முடியாமல், நம் பாமல் இருக்கவும் முடியாமல் குழம்பினாள். தவிரவும் தனம்மாவின் அன்பு வேறு, தன் சந்தே கம் அவளை காயப்படுத்தி விடுமோ என்று அஞ் சினாள்.

அம்மா கொடுத்தனுப்பிய பால் கேசரியை கொண்டு வந்து கொடுத்தாள் நந்தனா.

''அக்கா...''

''ம்...!''

''நீங்க ரொம்ப மாறிட்டீங்க!''

''ஏன் அப்படி சொல்றே?''

''முன்னே மாதிரி என்கிட்டே சரியாகவே பேசறதில்லே.''

''அப்படியெல்லாமில்லே... உனக்குதான் என் புருஷன்கிட்டே பேசவே நேரம் போத லையே!''

''நிஜம்தான்க்கா... ஃப்ரண்ட் வெரி இன்ட் ரஸ்ட்டிங் கேரக்டர். எல்லா டாபிக் பத்தியும் போரடிக்காமப் பேசுவார்.''

எரிச்சல் மண்டியது.

''ஃப்ரண்ட் எப்ப வருவார்?''

''லேட்டாகும்... ஏதோ முக்கியமான வேலையிருக்குன்னு சொன்னார்.''

''நல்லதாப் போச்சு. நான் உங்ககிட்டே ரொம்ப நாளா சொல்லணும்னு நினைச்சிட்டி ருந்த ஒரு விஷயத்தை இன்னைக்கு பேசப்போகி றேன்''

''என்ன விஷயம்?''

''நீங்க யார்க்கிட்டேயும் சொல்லக் கூடாது'' பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

''சொல்ல மாட்டேன்... என்னன்னு சொல்லு'' என்றாள் ஆர்வம் தாங்காமல்.

''இதுவரைக்கும் ஃப்ரண்டுக்குகூட சொன் னதில்லை. உங்களை என்கூடப் பிறந்த அக்காவா நினைச்சி சொல்றேன்.''

''பொறுமைய சோதிக்காதே நந்தனா!''

''நான்... நான் ஒருத்தரை லவ் பண்றேன்''

''என்னது... லவ் பண்றியா?''

''ஐயோ சத்தமாப் பேசாதீங்க.''

''யாரை?''

''அவர் பேரு ஜீவன். படிச்சுட்டு இருக் கார்.''

'அப்பாடா' என்று நிம்மதியானாள் சுகந்தி. 'என் தாலிக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நன்றி கடவுளே!'

''உங்க வீட்லே ஒத்துக்குவாங்களா?''

''மாட்டாங்க... அதை நினைச்சாதான் பய மாயிருக்கு. ஆனா, ஜீவன் ரொம்ப நல்லவர்.''

''வீட்டை எதிர்த்தாவது கல்யாணம் பண் ணிக்க... அதான் நல்லது!''

''ம்!''

''போட்டோ இருக்கா?''

''நாளைக்கு கொண்டு வர்றேன். உங்க கிட்டே சொன்னப் பிறகுதான் மனசு லேசா

இருக்கு!''

மறுநாள் அவள் காட்டிய போட்டோவைப் பார்த்து வியந்தாள்.

'இவனா? இவன் வீட்டில்தானே குடியிருந்தோம்? சரியான தொடை நடுங்கியாச்சே? இவனுக்காக முறைப்பெண் அஸ்வினி காத்திருக்கிறாளே! வீட்டை எதிர்த்து ஒரு அடிக்கூட எடுத்து வைக்க முடியாதே இவனால்? சொல்லலாமா? இது ஈடேறாத காதல் என்று முட்டுக்கட்டைப் போடலாமா? வேண்டாம். தெரிந்தவன் போலவே காட்டிக்க வேண்டாம். என்மேல் உள்ள அன்பின் காரணமாக காதலை தூக்கி எறியத் தயங்க மாட்டாள். அதன்பின்... அவனை மறக்கவென்று என் புருஷனிடம் நெருங்கிப் பழகினால்?'

''என்னக்கா... அமைதியாயிருக்கே? பிடிக்கலையா?''

''இவருக்கென்ன? ஜம்முன்னு இருக்கார். உனக்கேத்த ஜோடி!''

அன்றிலிருந்து அவளின் காதலுக்கு தூபம் போட்டாள். இப்படிப் பேசு, அங்கேப் போய் வா என்று டிப்ஸ் கொடுத்தாள். அவளும் அவன் என்ன பேசினான் என்பது உட்பட அப்படியே வந்து ஒப்பிப்பாள்.

நாட்கள் ஓடின. நந்தனா - ஜீவனின் காதல் முன்னிலும் ஆழமாக வேர் விட்டு வளர்ந்தது.

சுகந்திக்கு ஒன்பதாவது மாதம் வந்தது. இங்கேயே வளைகாப்பு நடத்தி செங்கல்பட்டுக்கு அழைத்துச் செல்ல முடிவானது.

தனமும், நந்தனாவும் ஓடியாடி வேலை செய்தனர்.

வளைகாப்பு விமரிசையாய் நடக்க... கணவனைப் பிரிய மனமின்றி அம்மா வீட்டுக்குச் சென்றாள் சுகந்தி.

வாரத்திற்கு இரண்டு மூன்று முறையாவது மனைவியைப் பார்க்க ஓடிவிடுவான் கவுதம்.

அன்று வழக்கத்திற்கு மாறாக காரில் செல்லாமல் பைக்கில் சென்று இறங்கினான் கவுதம். கூடவே நந்தனாவும்.

## 10

அவர்கள் வந்து சென்ற பின் காச் மூச்சென்று கத்தினாள் அம்மா.

''இது நல்லாவா இருக்கு? ஒரு வயசு வந்தப் பொண்ணோட கார் இருக்க... பைக்ல சென்னையிலேர்ந்து செங்கல்பட்டுக்கு யாராவது வருவாங்களா?''

''கார் ரிப்பேராம்.''

''இருக்கட்டும்.... ட்ரெய்ன்ல வர்றது. இதோ பார்... தப்பு அந்தப் பொண்ணுக்கிட்டே மட்டுமில்லே... உன் புருஷன்கிட்டேயும் இருக்கு.''

''இல்லேம்மா... அவர் அப்படிப்பட்டவர் இல்லே.''

''மீனை வேணாம்னு எந்தப் பூனையும் சொல்லாதுடி. அதுவும் அந்த நந்தனா பளபளன்னு சினிமாக்காரி மாதிரி இருக்கா.''

''இல்லேம்மா... அவ ஒரு பையனை லவ் பண்றா. எனக்குத் தெரியும்.''

''காதல் பண்றதே ஒரு பொழுதுபோக்கா வச்சிருப்பாப்போல.''

''கொஞ்ச நேரம் என்னை தனியா இருக்க விடும்மா.''

தனிமையில் யோசிக்கும்போது... அம்மாவின் பேச்சே மேலோங்கியிருந்தது.

அவ்வப்போது நந்தனா கவுதமுடன் இவளைப் பார்க்க வருவதும், வீட்டை நிறைக்கும் சிரிப்புடன் வளவளவென்று பேசுவதும், ''நந்தனா மாதிரி ஒரு பெண் குழந்தையா பெத்துக் கொடு சுகி'' என்று கணவன் கொஞ்சுவதும் வயிற்றில் புளியைக் கரைத்தது.

'ஏன்... என்னைப் போல் பெண் குழந்தை வேண்டாமா? அவள் மாதிரிதான் வேண்டும் என்றால் என்ன அர்த்தம்? அம்மா சொல்வது சரிதானோ? இவர் மனதிலும் ஏதும் இருக்கிறதோ? கடவுளே... அவரும், அவளும் அங்கே தனியே... என் தொந்தரவின்றி...'

பிரசவத்தை விடவும் இந்த பயமே ஆட்கொண்டது.

சுகந்திக்கு சுகபிரசவம் ஆகி பெண் குழந்தைப் பிறந்தது. அதன் பிறகு இருப்புக் கொள்ளவில்லை. மூன்றே மாதத்தில் குழந்தையுடன் கணவனின் வீட்டிற்கு வந்து விட்டாள். வீட்டு வேலைக்கென்று ஒரு வயதான பெண்மணி நியமிக்கப்பட்டாள். குழந்தை பிறந்த நேரம் கவுதமுக்கு விரைவில் பணி உயர்வு கிடைக்கும் என்ற தகவல் வந்தது.

கவுதம் மனைவியிடம் காட்டிய அன்பு அதிகரித்திருந்ததே தவிர குறையவில்லை. அதுவே சுகந்தியின் வாயை கட்டிப் போட்டது. நந்தனாவிடம் வெளிப்பார்வைக்கு சிரித்துப் பேசினாள்.

ஒரு நாள் நந்தனாவின் காதல் விவகாரம் வீட்டிற்கு தெரிந்துப் போனது. ஜீவனுடன் நந்தனாவை கடற்கரையில் ருக்பாலனின் நண்பர்

பார்த்து விட்டு வத்தி வைக்க.... வீடு தீப்பற்றிக் கொண்டது. மகளை பெல்ட்டால் விளாசித்தள்ளி விட்டார். ஜீவனை எச்சரிக்க... அவன் வீட்டிற்கும் சென்று தாறுமாறாய் பேச... சுனாமியாய் பொங்கி விட்டது அவன் வீடு. 'நீ செத்தாலும் நாங்கள் கவலைப்பட போவதில்லை. ஆனால், அஸ்வினியைத் தவிர வேறு எந்த பெண்ணும் இந்த ஜென்மத்தில் மனைவியாகப் போவதில்லை. மீறி அவளை மணந்துக் கொண்டால்... இந்த குடும்பத்தில் நிறையப் பேர் தற்கொலை செய்துக் கொள்வோம்' என்று மிரட்டினர் பெரியவர்கள்.

இந்த சம்பவம் நடக்கும் போது அஸ்வினி வீட்டில் இல்லை. நாகதோஷம் இருப்பதாகக் கூறி அவளின் அம்மா நவக்கிரக வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றிருந்தாள். வர ஒரு வாரம் ஆகும்.

ஜீவனால் நந்தனாவை மறக்கவும் முடியவில்லை. பெரியவர்களை மீறவும் முடியவில்லை. 'கொஞ்சநாள் நந்தனாவை சந்திக்க வேண்டாம். அப்புறமாய் பெரியவர்களை கன்வின்ஸ் பண்ணி விடலாம். முதலில் படிப்பு முடிந்து... ஒரு வேலையை தேடிக் கொள்ளலாம்! இப்போதைக்கு பெரியவர்களின் பார்வை என் பின்னே தான் இருக்கும். உஷாராய் இருந்துக் கொள்வோம்' என்று முடிவு செய்தான்.



"பாவிப் பெண்ணே.... காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டுதான் நாங்க சொந்தபந்தங்களை இழந்து தனித்தீவா ஆகிவிட்டோமே! அதைப் பார்த்துமா திருந்தலே? கூடப் பிறந்த உங்கண்ணன் பண்ணிய அதே தப்பை நீயும் செய்யணுமா? அப்படியென்ன திமிர் உனக்கு? அந்தப் பையன்தான் முக்கியம்னு நினைச்சா, இப்பவே வெளியேப் போய்டு. எங்களுக்கு குழந்தைங்களே பிறக்கலேன்னு நினைச்சிக்கறோம். ஆனா, ஒரு குழந்தைப் பிறந்தா எல்லாம் சரியாப் போய்டும், எங்களை சரிக்கட்டிடலாம்னு மட்டும் நினைக்காதே! சண்டாளி, ஊமை மாதிரி இருந்துக்கிட்டு என்ன காரியம் பண்ணியிருக்கே?"

"இவகிட்டே என்னடி பேச்சு? அசிங்கப்படுத்திட்டாளே! பொண்ணை பொண்ணா வளர்க்கத் தெரியாம, மீசைய மட்டும் வளர்த்துக்கிட்டு இங்கே வந்து ஏன்யா கத்தறேன்னு... அந்தப் பையனோட அப்பன் கேட்டான். எப்பேர்ப்பட்ட கேவலம்? என்ன குறை வச்சேன் இவளுக்கு? பார்க்கிறாப் பாரு... செத்துத் தொலையேன் நாயே! இதோபார்... எங்களை ஏமாத்திட்டு அவனோட ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கலாம்னு மட்டும் நினைக்காதே! அவனையும், உன்னையும் சேர்த்து சாகடிச்சிட்டு ஜெயிலுக்குப்



போவேனே தவிர.... நீ நினைச்சது நடக்காது.'' ருக்பாலன் மிரட்டினார்.

நொந்துப்போனாள் நந்தனா.

அப்போதுதான் அவள் காதல் விவகாரம் தெரியவர... ஆச்சர்யமானான் கவுதம்.

'நந்தனாவா? அந்தக் குழந்தையா காதலிக்கிறது? பிரச்சினை இவ்வளவு தீவிரமாகிவிட்டதே! பாவம் நந்தனா!' பரிதாபப்பட்டான்.

அவள் காதல் இரு வீட்டார் மோதலில் முடிந்ததை எண்ணி சுகந்திக்கு கவலை ஏற்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பிறகு, தன்னை தேற்றிக் கொண்டு, குழந்தையைப் பார்த்தால் மனசு லேசாகிவிடும் என்று மாடிக்கு வந்த நந்தனாவை ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

இருவருமே காதல் விவகாரத்தைப் பற்றி பேசவில்லை.

குழந்தையிடம் சிரித்து விளையாடியவளைப் பார்த்து பயந்தாள்.

'கொஞ்சம் கூட வருத்தமே இருக்காதா இவளுக்கு? அம்மா சொன்னதுப் போல் வண்டைத் தேடி போகும் மலரா இவள்?'

கல்லூரி வாசலில் நின்றிருந்த கவுதமை வியப்புடன் பார்த்தாள் நந்தனா.

''நீங்களா? இங்கே எங்கே?''

''உன்னைப் பார்க்கத் தான்.... உன்கிட்டே கொஞ்சம் பேசணும்.... வா!''

அருகிலிருந்த ஒரு ரெஸ்டாரெண்டுக்கு அழைத்துச் சென்றான்.

''என்ன சாப்பிடறே நந்தனா?''

''ஒண்ணும் வேணாம் ஃப்ரண்ட்... பசிக்கலே.''

''உனக்கு பசிக்காதுன்னு தெரியும். பரவாயில்லே... நானே ஆர்டர் பண்றேன் எனக்காக கொஞ்சம் சாப்பிடு.''

''சரி... வெறும் காபி மட்டும் போதும்.''

''சரி... உன்னை வற்புறுத்த விரும்பலே'' என்றவன் காபியை மட்டும் தருவித்தான்.

''நான் உன் ஃப்ரண்ட் தானே நந்தனா?''

''ஏன் ஃப்ரண்ட் இப்படியொரு கேள்வி?''

''பின்னே... எவ்வளவு பெரிய விஷயத்தை என்கிட்டேர்ந்து மறைச்சிட்டே?''

''....?!'' பதில் கூறாமல், வியர்த்திருந்த காபி கோப்பையில் கோலமிட்டாள்.

''சரி.... விடு. ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருந்தா... அப்பவே வேண்டாம்னு சொல்லியிருப்பேன். பிகாஸ்... ஜீவன்!''

''.....?!'' கேள்வி தொக்கிய விழிகளோடு ஏறிட்டாள்.

''யெஸ்.... ஜீவனை எனக்கு நல்லா தெரியும்...''

''தெரியுமா... எப்படி?''

''இதுக்கு முன்னாடி.... நான் அவங்க வீட்லேதான் குடி இருந்தேன்.''

''நிஜமாவா?'' என்றாள் வியப்புடன்.

'அப்படியானால் சுகந்தி அக்காவுக்கும் தெரிந்திருக்குமே. ஏன் சொல்லலே?'

''ஆமாம் நந்தனா. அவனை கெட்டவன்னு சொல்ல மாட்டேன். நல்லவன்தான். ஆனா, கோழை. அவன் வீட்டு சூழ்நிலை காதலுக்கு ஏற்றதல்ல. எதிர்த்து செயல்பட தைரியம் ஜீவனிடம் இல்லை. காதல் வெற்றி பெற காதல் மட்டும் இருந்தாப் போதாது. எந்த சந்தர்ப்பத்திலும் கைவிடாத தைரியமும் வேணும். எனிவே, ஜீவனை சந்தித்து பேசி பார்க்கிறேன். அவனோட திங்கிங் எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்கலாம். வாழ்க்கையிலே நாம எதிர்பார்க்காத திருப்பங்கள் வரும். அதை அப்படியே ஃபேஸ் பண்ண பழகிக்கணும். காதல் தாண்டி மனுஷனின் வாழ்க்கையில் எவ்வளவோ சுவாரஸ்யங்கள் இருக்கு. காதல் விஷயத்தில் ஒரு தொய்வு. கொஞ்சம் டைம் கொடுத்து அதை ஒதுக்கி வை.... தற்காலிகமாக! இப்போதைக்கு உன் கவனமெல்லாம் படிப்புல மட்டும் இருக்கட்டும். நல்லாப் படி. மேலும் மேலும் படி. கம்ப்யூட்டர் படி. உனக்கு நல்ல வேலை ஏற்பாடு பண்ணித் தருவது என் பொறுப்பு. என்ன சொல்றே நந்தனா?''

''நீங்க வாழ்க்கையோட யதார்த்தம் பேசறீங்க ஃப்ரண்ட். காதல் ஒரு மாய உலகம். அதிலிருந்து வெளியே வர்றது அவ்வளவு சுலபமில்லே. வலிக்க.... வலிக்க என் இதயத்தை பிய்க்கிற மாதிரி இருக்கு. ஜீவனை நான் ரொம்ப நேசிக்கிறேன். பட், உங்க வார்த்தைக்கு எந்தளவுக்கு மரியாதை கொடுக்க முடியுமோ, அந்தளவுக்கு கொடுக்க முயற்சி பண்றேன்'' என்றாள் துளிர்த்த கண்ணீரை சட்டென துடைத்து.

''தாங்க்ஸ்ம்மா!'' என்றான் பாசமுடன்.

குழந்தை வீறிட்டு அழுவதுக் கூட சுகந்தியை பெரிதாய் பாதிக்கவில்லை. தீப்பட்ட புழுவாய் மனசு துடித்தது.

நினைக்க.... நினைக்க கொதித்தது.

காரணம் இல்லாமலில்லை! ஒரு மணி நேரத்திற்கு முன்பாக அவள் தம்பி வெங்கட் வந்து சொல்லிவிட்டு போன தகவல் தான்!

யதேச்சையாக நண்பனுடன் பைக்கில் கடற்கரை சாலைப் பக்கம் போயிருக்கிறான். நந்

தனா, அவன் மாமாவின் பைக்கில் ஏறுவதை யும், ரெஸ்டாரெண்டிற்குள் நுழைவதையும் பார்த்து விட.... உடனே அக்காவைத் தேடி வந்து கொட்டி விட்டான்.

அந்த பாரம் தாங்க முடியாமல் தான் குமு றினாள்.

கவுதம் வந்தான். இயல்பாய் இருக்க முயன் றாள். அவனாக ஏதாவது சொல்கிறானா என்று அமைதி காத்தாள்.

ம்ஹூம்! எப்போதும் போல நடந்துக் கொண்டான். அலுவலகத்தில் நடந்த விஷயங் களை வாய் ஓயாமல் பேசினானேயொழிய..... நந்தனாவை சந்தித்தது பற்றி மூச்சு விடவில்லை.

'இங்கே நேரம் போவது தெரியாமல் பேசு வதுப் போதாமல் தனிமையிலும் சந்திக்கிறார்கள் என்றால்? விஷயம் இல்லாமலா? இவர் மனதில் எந்த கல்மிஷமும் இல்லை என்றால்.... சந்தித் ததை சொல்லியிருப்பாரே! மூடி மறைக்கிறார் என்றால்? கேட்டு விடலாமா? வேண்டாம். நாளை வரை பொறுத்துப் பார்ப்போம். இவள் எங்கே... இன்றைக்கு இங்கே வரக் காணோம்? நெஞ்சு குறுகுறுக்கிறதா?'

மறுநாள் அலுவலகம் செல்லும்வரை அதைப் பற்றி வாயே திறக்கவில்லை கவுதம்.

'காதல் பிரச்சினைக்கு பிறகு கவுதமுடன் நந்தனா கல்லூரிக்கு பைக்கில் செல்வதில்லை. வீட்டில் கண்டித்திருப்பார்களோ?'

'இன்று மாலை வீட்டிற்கு வர தாமதமாகும் என்று சொல்லி விட்டு சென்றான்.'

'அவளுடன் ஊர் சுற்றுவானோ?' சுகந்தி யின் மனசு அவர்களையே சுற்றி வந்தது.

ஆனால், மாலை வழக்கம் போல வீட்டிற்கு வந்து விட்டாள் நந்தனா.

ஜீவனை பார்க்கவே முடியவில்லை. கல்லூ ரிக்கு வருகிறானா, இல்லையா? எந்த தகவலும் அவளுக்கு வரவில்லை.

வாடிப் போயிருந்த நந்தனா மாடிக்கு வந் தாள். வெகு நேரம் சூரியகாந்தி செடிகளருகே அமர்ந்திருந்தாள். இருள் கவியத் தொடங்கிய போது.... சுகந்தியின் போர்ஷனுக்குள் நுழைந் தாள்.

'பார்ப்போம் இவளாவது சொல்கிறாளா என்று?' சுகந்தி அவளையே நோட்டமிட்டாள்.

''ப்ரியாவை குடுக்கா....''

''வேணாம்.... அவளுக்கு தூக்கம் வருது.... தூங்கட்டும்!''

''ஃப்ரண்ட் இன்னும் வரலியாக்கா?''

ஆத்திரம் கொப்பளித்தது சுகந்திக்கு.

''இல்லே...''

''சரிக்கா... நான் கிளம்பறேன்''

''ஒரு நிமிஷம் நந்தனா!''

''என்னக்கா?''

கையெடுத்து கும்பிட்டாள். உதடுகள் துடித் தது. கண்கள் பொங்கின.

''எ.... என்னக்கா இது?''

''ப்ளீஸ்.... என் புருஷனை விட்டுடு. என் கிட்டே கொடுத்துடு!''

''அ...க்....கா''

அந்த வார்த்தைகள் நந்தனாவை எங்கோ தூக்கி அடித்தன.

## 11

'என்னையா, என்னையா சுகந்தி அக்கா சந்தேகப்பட்டு விட்டாள்? ஜீவனை காதலித் தது அவள் அறிந்ததுதானே? பிறகு ஏன் ஃப்ரண்டுடன் என்னை இணைத்து சந்தேகப்படுகிறாள்? அப்ப டியானால் எவ்வளவு மோசமாக என்னை எடைப் போட்டு விட்டாள்? அப்படிப்பட்டவளா நான்? அவள் கணவருடன் பழகியது பிடிக்காத தால் தான்.... ஜீவனைப் பற்றி தெரிந்தும் எச்ச ரிக்கை பண்ணவில்லையா? எப்படியாவது ஒழி யட்டும்.... என் புருஷனை விட்டு விலகினால் சரி.... என்ற எண்ணம்.

அவருடன் பேசியதுப் பழகியது எல்லாவற் றையும் இதுநாள் வரை சந்தேகக் கண்ணோடு தானே பார்த்திருக்கிறாள்? காது கூசிப்போகும் அளவிற்கு எவ்வளவு தரக்குறைவாக பேசிவிட் டாள்? ஆம்பளை சுகத்திற்கு அலைகிறேனாமே! அதனால்தான் கல்யாணமானவன் என்பதை கூட பொருட்படுத்தவில்லையாமே!

சுகந்திக்கா.... நீயா.... நீயா இப்படி பேசி விட்டாய்? காதல் தோல்வியைக் கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், உன் வார்த்தைகள் என்னால் தாங்க முடியவில்லை. சாட்டையால் அடிப்பதுப்போல் வலிக்கிறது. இத யத்தில் நெருஞ்சி முள் குத்திய அவஸ்தையில் துடிக்கிறேன். எப்படி, இனிமேல் ஃப்ரண்ட் முகத் தில், உன் முகத்தில் எல்லாம் முழிப்பேன்? உன் சந்தேகம் என் பெற்றோர் காதிற்கு போக எவ் வளவு நேரமாகும்? இனி என்ன இருக்கிறது எனக்கு? எதற்கு வாழ வேண்டும்?'

தனிமையில், குழப்பமும் தன்னிரக்கமும் கவ்விக் கொள்ள.... எடுக்கக் கூடாத முடிவை எடுத்தாள் நந்தனா.

இன்னும் சாப்பிட வரவில்லையே.... என்று அழைப்பதற்காக அவள் அறைக்கு வந்த

தனம், கதவு உட்புறம் தாள் போட்டிருக்க தட்டினாள். வெகுநேரம் தட்டியும் கதவு திறக்கப்படாமலிருக்க, சந்தேகம் வலுத்து கணவனை அழைக்க.... அவர் கதவை உடைத்து உள்ளே செல்ல....

விலுக்.... விலுக்.... என அந்தரத்தில் உடல் வெட்டிக் கொள்ள... தொங்கிக் கொண்டிருந்தாள் நந்தனா.

''அடிப்பாவி மகளே என்ன காரியம் பண்ணிட்டே?'' என்று தனம் அலறிய அலறலில் தெருவே கூடிவிட்டது.

அறைகுறை உயிரோடு இறக்கப்பட்ட நந்தனா மருத்துவமனைக்கு தூக்கி செல்லப்பட்டாள்.

விஷயம் அறிந்து நடுங்கி விட்டாள் சுகந்தி.




**ம**ற்ற பழ வகைகளில் இருந்து சற்று வித்தியாசமாக காணப்படும் சப்போட்டா பழத்தை ரத்த புற்றுநோயை குணப்படுத்த இயற்கை மருந்தியல் நிபுணர்கள் பயன்படுத்துகிறார்கள். ரத்தசோகை, அதிக பேதி ஆகியவற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்ட சப்போட்டா, உடலின் கறுமை நிறத்தை மாற்றி மேனி அழகைத் தரும் சக்தியும் கொண்டதா

'என்னாலா? நந்தனா இந்த முடிவுக்கு வந்தது என்னாலா? அவசரப்பட்டு சந்தேகித்து அவமானப்படுத்திவிட்டதாலா? கடவுளே.... எப்படியாவது அவளைக் காப்பாற்றி விடு! நான் அவளைத் திட்டிய பத்து நிமிடத்திற்குள் இப்படியொரு முடிவை எடுத்து விட்டாளே!'

''கடவுளே.... என் மகளை காப்பாற்றி கொடுத்து விடு! அவள் அந்தப் பையனை இவ்வளவு தீவிரமாக நேசிப்பாள் என்று தெரியாமல்.... கடுமையாய் நடந்துக் கொண்டு விட்டோமே!'' தனம் குமுறி, குமுறி அழுதாள்.

கவுதம் வந்தபின் விஷயமறிந்து ஹாஸ்பிடலிலேயே இருந்தான்.

''பார்த்தியாப்பா.... பாழாப்போன காதல் எந்தளவுக்கு கொண்டு வந்து விட்டுடுச்சி? பிள்ளைய உயிரோட பறி கொடுத்தோம்? இப்ப இவ உயிரை விடத் துணிஞ்சிட்டா.'' ருக்பாலன் விம்மினார்.

''மனுஷங்க நாம சரியில்லாதப்ப காதலை குறை சொல்றது தப்பு சார்! உங்கப்பா அம்மா செய்த அதே தப்பை தானே நீங்களும் செய்யறீங்க? உங்க பிள்ளையோட காதலை மனப்பூர்வமா ஏத்துக்கிட்டிருந்தா.... இன்னைக்கு மருமகள், பேரக்குழந்தைகள்னு சுற்றம் பெரிசாகியிருக்குமே! காதல்ல நீங்க ஜெயிக்கணும்னு நினைக்கிறப்ப.... உங்க பிள்ளையும் அப்படி நினைக்கறதிலே என்ன தப்பு? நந்தனா மட்டுமென்ன வேற்று கிரகவாசியா? அவளுக்கு காதல் வரக் கூடாதா? வேண்டாம். நடந்து முடிஞ்ச விஷயத்தை பத்தி பேசி என்ன ஆகப் போகுது?''

''புரியுதுப்பா... எதையும் இழக்கப் போற நேரத்துலதான் மனுஷனுக்கு தன் தவறுகள் புரியுது. சத்தியமா சொல்றேன். நந்தனா பொழைச்சி வரட்டும். எத்தனை பேர் தடுத்தாலும் சரி.... அந்த ஜீவனை என் பொண்ணு கழுத்தில் தாலி கட்ட வைக்கிறேன்.''

கவுதம் அவரின் தோளை ஆறுதலாய் தட்டி கொடுத்தான்.

ஆனால் நடந்ததோ?

நந்தனா பிழைத்துக் கொண்டாள்.... நடைப்பிணமாக!

ஆம்!

கயிறு இறுக்கியதில் மூச்சுக்குழல் அடைத்து ஆக்ஸிஜன் பற்றாக்குறையானதில் மூளையில் ஒரு பாகம் செயல் இழந்து விட்டது. அதனால் புத்தி சுவாதீனமாகி விட்டாள்.

தீவிர சிகிச்சை, அன்பான, அக்கறையான கவனிப்பு இருந்தால்... குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று வருடத்தில் குணமாக ஐம்பது சதவீதம் வாய்ப்பு உண்டு என்று டாக்டர்கள் கூறி விட்டனர்.

பெற்றவர்கள் துடித்த துடிப்பு சொல்லில் அடங்காதது. பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்தவள், கலகலவென சிரித்து வீட்டை நிறைத்தவள், இன்று பேச்சு மறந்து, உணவு மறந்து, உணர்வு மரத்து, தன்னையே மறந்துப் போனாள்.

கவுதமினால் அவளை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. ''ஃப்ரண்ட்... ஃப்ரண்ட்'' என்று வளைய வந்தவள் எல்லாம் ஓய்ந்து வெறித்த பார்வையுடன் ஜடமாகி விட்டாள்.

''தாங்க முடியவில்லை சுகந்தி. நந்தனாவுக்கா இப்படியொரு நிலை? எவ்வளவு தைரியமான பெண்? நாலு நாள் முன்னாடி அவளை காலேஜ்ல போய் பார்த்துப் பேசினேன். ஜீவனைப் பத்தி, அவன் குடும்பத்தைப் பத்தி எல்லாம் எடுத்து சொன்னேன். இப்போதைய உன்னோட கவனமெல்லாம் படிப்புல மட்டும்தான் இருக்கணும்னு அட்வைஸ் பண்ணினேன். என் மேல எவ்வளவு மரியாதை இருந்தா... அப்படியே ஏத்துக்கிட்டிருப்பா? அவளோட தைரியத்தை குலைக்கிற மாதிரி அவங்க வீட்லே ஏதோ பேசியிருக்கணும். இல்லேன்னா அவ இப்படியொரு முடிவை எடுக்க மாட்டா. காதலிக்கறது கொலை குத்தமா? மனுஷத் தன்மையே இல்லாம நடந்துக்கிறாங்களே! செய்யறதை எல்லாம் செய்துட்டு இப்ப வருத்தப்பட்டு என்ன ஆகப் போகிறது? குணமானாலும் அவளோட எதிர்காலம் எப்படி இருக்கும்? பெண்ணாச்சே! அற்புதமான பெண். கள்ளம் கபடமில்லாத பெண். அவளை பார்க்கிறப்பவெல்லாம் அடிவயித்தை கலக்குது சுகந்தி.'' குரல் கம்ம கூறினான் கவுதம்.

சுகந்தியை குற்ற உணர்ச்சி வாட்டி வதைத்தது. பாத்ரூமில் வாய்விட்டு அழுதாலும் மனபாரம் குறையவில்லை.

'அவளோட நிலைமைக்கு நான்தான் காரணம் என்று தெரிந்தால் என்னைப் பற்றி இவர் என்ன நினைப்பார்?'

அந்தப் பயமே... ஒரு தண்டனையாகிப் போனது.

சுகந்தியை மேலும் சோதிக்க விரும்பாமல்.. கவுதமுக்கு மாற்றலுடன் கூடிய பதவி உயர்வு வந்தது. மும்பைக்கு சென்றாக வேண்டும். மனமேயின்றி புறப்பட்டான் கவுதம்.

மகளின் நிலைமைக்கு தான்தான் காரணம் என்ற எண்ணம் மேலோங்கி ஹார்ட் அட்டாக் வந்து படுத்த படுக்கையானார் ருக்பாலன். அவரைக் கவனிப்பதா, மகளை கவனிப்பதா? கவலையில் உருக்குலைந்துப் போனாள் தனம். இருவரின் சிகிச்சைக்காக ஏகப்பட்ட கடன் வாங்கினாள்.

ஒருநாள் ருக்பாலன் இந்த உலகிலிருந்து விடை பெற்றார். கடனை அடைக்க வீட்டை விற்று மகளுடன் சைதாப்பேட்டைக்கு குடிபெயர்ந்தாள். இந்த விவரம் எதுவும் ஜீவனுக்கு தெரியாது.

**ப**ழையதை நினைத்து வருந்திய சுகந்தி, நந்தனாவை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள். தவறாமல் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றாள்.

சிகிச்சையின் பலனாக... அசைவிற்கோ, சத்தத்திற்கோ, கண்கள் அசைந்தன. சில சமயங்களில் மெல்ல தலை திருப்பிப் பார்ப்பாள். அதுவே பெரிய நம்பிக்கையைத் தந்தது சுகந்திக்கு. கணவனிடம் சொல்லி சந்தோஷப்பட்டாள்.

பைக்கை நிறுத்திவிட்டு, அர்ச்சனைக் கூடையுடன் ஒரு மாலையும் வாங்கிக் கொண்டு, சவுடேஸ்வரி அம்மன் கோவிலுக்குள் நுழைந்தான் ஜீவன்.

உடலில் இளைப்பு. முகத்தில் கவலை தந்த முதிர்ச்சி.

செவ்வாய்க்கிழமை என்பதால் ஓரளவு கூட்டம் இருந்தது. வரிசையில் காத்திருந்து, அர்ச்சகரிடம் அர்ச்சனைக் கூடையை மாலையுடன் நீட்டினான்.

''பேர்... நட்சத்திரம் சொல்லுங்கோ!''

''நந்தனா... உத்திராடம் நட்சத்தி




**வைட்டமின் சி நிறைந்த மாதுளைப்பழம் ஜீரண சக்தியை அளிக்கிறது. குடல் பகுதி, ஜீரண உறுப்புகள், சிறுநீரகம் ஆகியவை சிறப்பாக செயல்பட உதவுகிறது. பெண்கள் தொடர்ந்து இந்த பழத்தை சாப்பிட்டால் தலைமுடி கறு கறு என வளரும்.**

ரம், கவுசிக கோத்திரம்.''

அர்ச்சகர் வாங்கிக் கொண்டு உள்ளே செல்ல... கண்மூடி வேண்டிக் கொண்டான்.

'என் நந்தனா எங்கிருந்தாலும், நன்றாக இருக்கணும். என் உயிர் போவதற்குள் நந்தனாவை உயிருடன் பார்க்க அருள்புரி தாயே!'

அர்ச்சனைக் கூடையை வாங்கிக் கொண்டு குளத்துப் படிக்கட்டில் அமர்ந்துக் கொண்டான் ஜீவன்.

குளத்து மீனுக்கு பொரி போட்டுக் கொண்டிருந்த சின்ன குடும்பம் இவனைத் தாண்டி செல்ல... அந்த நபர் இவனைப் பார்த்து விட்டார்.

''டேய் ஜீவன்!''

நிமிர்ந்த ஜீவன் புன்னகைத்தான்.

''பிரகாஷ்.... பார்த்து ரொம்ப நாளாச்சுல்ல?''

''ஆமான்டா.. இதுதான் என் வொய்ஃப் நித்யா. இது என் பையன் சஞ்சய். நாலு வயசாகுது. நித்யா மண்டபத்துல உட்கார்ந்திரு... வந்துடறேன்'' என்றபடி ஜீவனின் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டான்.

''இப்ப எங்கேடா இருக்கே?''

''ராயப்பேட்டையிலே ஒரு ரூம் எடுத்து தங்கியிருக்கேன்.''

''கேக்கறேன்னு தப்பா நினைக்காதே... இப்படியே எவ்வளவு காலம் தள்ளப்போகிறே? உனக்குன்னு ஒரு வாழ்க்கை வேணாமா?''

''இப்பவும் வாழ்ந்துட்டுதானே இருக்கிறேன்?''

''ப்ச்.... தத்துவம் பேசாதே. கல்யாணம் பண்ணிக்கலாமில்லே? நந்தனாவையே எத்தனை காலம் நினைச்சிட்டிருப்பே?''

''சாகற வரைக்கும்''

''ஏன்டா இப்படி இருக்கிறே? காலேஜ் டேஸ்ல எவ்ளோ ஜாலியா இருந்தே?''

''காலேஜ் லைஃப் வேற! சொந்த வாழ்க்கை வேற. ஜாலியான பையன்னா.... காதலையும் ஜஸ்ட் லைக் தட்னு எடுத்துக்கணுமா? என் நந்தனா எனக்குள்ளே இருக்கிறா. காலம் தாழ்த்தி வந்த தைரியத்தால.... என் நந்தனாவையே தொலைச்சிட்டேன். என்னென்னவோ நடந்து போச்சு.''

''நானும் கேள்விப்பட்டேன். அப்பாவும் அம்மாவும் இறந்துட்ட பிறகு... புத்தி சுவாதீனமாகி விட்ட நந்தனா மட்டும் உயிரோட இருப்பாள்னு நினைக்கறியா?''

''ப்ளீஸ் பிரகாஷ். புனிதமான இடத்துல இருந்துக்கிட்டு அபசகுனமா பேசாதே! நந்தனா உயிரோட இருக்கிறாள்னு என் மனசு சொல்லுது. ஏன்னா இது அவ மட்டுமே வாழற மனசு. தப்பா சொல்லாது. நந்தனா எங்கேயோ பத்திரமா இருக்கிறா, இருப்பா, இருக்கணும். அவளுக்காகதான் வாரம் தவறாம அர்ச்சனைப் பண்றேன்.''

''என்னமோ செய்! பார்க்க வருத்தமாயிருக்கு. சரி, எதுக்காக ரூம்ல தங்கியிருக்கே? கடல் மாதிரி வீடு இருக்கிறப்ப...''

''ஒட்டு மொத்தமா நந்தனாவை தலைமுழுகிட்டு, இன்னொரு அத்தைப் பொண்ணு கவிதாவை கல்யாணம் பண்ணிக்கறதா இருந்தா வீட்லே இடம்னாங்க. முடியற காரியமா? அதனால நானே வெளியேறிட்டேன். நல்ல வேலைய தேடிக்கிட்டேன்.''

''அஸ்வினிக்கு கல்யாணம் ஆகிடுச்சா?''

''ஆகிடுச்சு. என் சித்தப்பா பையனுக்குதான் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாங்க. யூ... நோ... என் கண்களை திறந்தவ அவதான்! 'மனசால ஒருத்திய நினைச்சிட்டாளே அவ காதலி மட்டுமில்லே... மனைவியும் தான்! உங்களுக்கு ரெண்டாந்தாரமா வாழ்க்கைப்பட நான் தயாராயில்லே. கூட்டுக் குடும்பம், அம்மா, அப்பா, தாத்தாவையெல்லாம் விட முக்கியம் நந்தனாவுக்கு வாழ்க்கைத் தருவதுதான். நம்பினவளை கைவிடாம கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்ல ஆம்பளைன்னு நிரூபியுங்க. அப்பதான் உங்களை மனுஷனா மதிப்பேன்'னா. இப்பக்கூட அவதான் அடிக்கடி போன்ல நந்தனா கிடைச்சிட்டாளான்னு விசாரிப்பா.''

''சினிமா மாதிரி இருக்கு ஜீவன் உன் வாழ்க்கை கதை. இந்த அம்மன் சீக்கிரம் உன் கண்ணுக்கு நந்தனாவைக் காட்டட்டும். நான் வர்றேன்ப்பா. இது என் விசிட்டிங் கார்ட். காண்டாக்ட் பண்ணு!''

விடைபெற்று சென்றான் பிரகாஷ்.

அதுவரை அவர்கள் பேசியதை எல்லாம் சற்று தள்ளி மேல் படிக்கட்டில் அமர்ந்திருந்த சுகந்தி கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் நந்தனா.

## 12

''ஜீவன்...''

பழகிய குரல் கேட்டு திரும்பியவன் புன்னகைத்தான்.

''நீங்களா... எப்படியிருக்கீங்க? சார் எப்படியிருக்கார்?'' எழுந்து நின்றான்.

''நல்லாயிருக்கோம்... நீங்க எங்கே இங்கே... கோவிலுக்கு போகிற பழக்கமெல்லாம் எப்போதிருந்து?''

''சும்மா வந்தேன்!''

''இல்லையே... நிம்மதியைத் தேடி வந்திருக்கீங்க'' என்றாள் மென்மையாய் சிரித்து.

''எ... என்ன சொல்றீங்க?''

''நீங்கத் தேடி வந்த நிம்மதி இதுதானே?'' சற்றே விலகி நின்றாள்.

பொம்மைப்போல் அமர்ந்திருந்தாள் நந்தனா.

உடம்பெல்லாம் சிலிர்ப்போடி... சூடேறியது.

''ந...ந்..த..னா!''

அருகே ஓடிப்போய் அமர்ந்தான்.

''நந்தனா... நந்தனா... எத்தனை வருஷமாச்சு உன்னைப் பார்த்து? எப்படியிருக்கே நந்தனா? இத்தனை வருஷமா எங்கேயிருந்தே? உன்னை எங்கேயெல்லாம் தேடினேன்!''

''....?!''

''என் மேலே கோவமா? பேசு நந்தனா... ப்ளீஸ் உன்னைப் பிரிஞ்சியிருந்த வேதனையே போதுமடி... பேசாம இருக்காதே!''

''....?!''

''எனக்கு நீ மட்டும் போதும் நந்தனா! அதனாலதான் யாருமே வேணாம்னு சொந்த பந்தங்களையெல்லாம் தூக்கி எறிஞ்சு வந்துட்டேன். இனி நம்மை யாராலும் பிரிக்க முடியாது நந்தனா. இந்தக் கையை எப்பவும் கைவிட மாட்டேன்!'' அவள் கையை பற்றிக் கொண்டான்.

ஆனால், நந்தனாவிடம் எந்த அசைவும் இல்லை.

''பேசு நந்தனா!''

''அவ பேசமாட்டா ஜீவன்!''

''ஏன்... என்மேல் உள்ள கோபத்தினாலா?''

''கடவுளுக்குதான் நந்தனா மேல் கோபம். அவ பேசி ஏழு வருஷம் ஆகுது!''

''என்ன சொல்றீங்க? அப்படின்னா நந்தனா இன்னும் அப்படியேதான் இருக்கிறாளா?''

''ஆமாம்!''

''மைகாட்! இவ்வளவு நாளா இவ எங்கேயிருந்தா? இவளை எப்படி உங்களுக்குத் தெரியும்?''

சுருக்கமாக எல்லாவற்றையும் சொன்னாள்... தன்னால்தான் தற்கொலைக்கு முயன்றாள் என்பதை மட்டும் மறைத்து.

கண்ணீர் திரையிட ஜீவன் நந்தனாவின் கைகளைப் பற்றி நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

''நானிருக்கும் போதே நீ அனாதையாகி விட்டாயா நந்து? மேடம்...ப்ளீஸ் நந்துவை என்னிடம் ஒப்படைச்சிடுங்க. நான் அவளைப் பார்த்துக்கறேன். அவளை குணப்படுத்தறேன்.''

''உங்க நேசம் எனக்குப் புரியுது ஜீவன். ஆனா, இவளை எங்க பொறுப்பிலேதான் ஒப்படைச்சிருக்காங்க. நந்தனாவை குணப்படுத்தற பொறுப்பும், கடமையும் எனக்குமிருக்கு.''

''நான் என் நந்துவை இவ்வளவு காலம் பிரிஞ்சிருந்தது போதாதா?''

''பிராக்டிகலா பேசுங்க ஜீவன். முதல்ல நந்தனா குணமாகட்டும். அட்ரஸ் தர்றேன். வீட்டுக்கு வாங்க!''

மறுநாளே வீட்டைத் தேடி வந்துவிட்டான் ஜீவன். அலுவலகம் புறப்பட ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த கவுதம் அவனைப் பார்த்ததும் முதலில் அடையாளம் புரியாமல் விழித்தான்.

பிறகு புரிய... பீறிட்டு கிளம்பியது ஆவேசம்.

கொத்தாக அவன் சட்டையைப் பற்றினான்.

''ஜீவன்தானே நீ? எங்கேடா வந்தே? ஒரு பொண்ணோட வாழ்க்கையை பாழாக்கிட்டு நீ மட்டும் டிப்டாப்பா நடமாடிக்கிட்டிருக்கியா?''

''சார்... சார்... நான் சொல்றதை கொஞ்சம்....''

''பேசாதே... இங்கே எதுக்கு வந்தே?''

''அய்யோ... என்னங்க இது? விடுங்க... மொதல்ல அவரை விடுங்க!'' பதறி ஓடி வந்த சுகந்தி கணவனிடமிருந்து அவனை விடுவித்தாள்.

''இவன் யார் தெரியுதா? நம்ம நந்தனாவோட வாழ்க்கையை பாழாக்கியவன்...''

''தெரியும்ங்க... இவரை நான்தான் வரச் சொன்னேன்.''

''என்னது?''

''ஆமாங்க... நேத்து கோவிலுக்குப் போயிருந்தப்ப இவரைப் பார்த்தேன். நேத்தே சொல்லணும்னு நினைச்சேன். நீங்க டயர்டா இருந்ததால சொல்லலே...''

''என்ன சொல்லலே?''

''கோபப்படாதீங்க... கொஞ்சம் உள்ளே வாங்க.'' கவுதமை அறைக்குள் அழைத்துச் சென்று நடந்தவைகளை சொன்னாள்.

''....!''

''என்னங்க அமைதியாயிருக்கீங்க? நந்தனா மேலுள்ள உண்மையான காதல்னாலே தானே அவர் வீட்டை விட்டு, உறவுகளை விட்டு தனியே இருக்கார். அவளை இந்த சூழ்நிலையிலேயும் கைவிட நினைக்கலையே. அவள் கண்

டிப்பா குணமாகிடுவா. அப்படியே ஆனாலும் அவளோட எதிர்காலம் ஒரு கேள்விக்குறிதானே? அதற்கு வாய்ப்பே இல்லாம வாழ்க்கைத் தரதயா ராயிருக்கார் ஜீவன். தவிர, அவளும் இவர்மேல ரொம்ப நேசம் வச்சிருக்கா. அவங்க ரெண்டு பேரையும் பிரிக்க நாம யாரு? சொல்லப் போனா, நம்மளைவிட ஜீவனுக்குதான் உரிமை யிருக்கு. அவசரப்பட்டு கெடுத்துடாதீங்க.''

யோசித்த கவுதம் மெல்ல தலையசைத் தான்.

வெளியில் வந்தான்.

''ஸாரி ஜீவன்''

''பரவாயில்லே சார். என் நந்தனா மேலே இவ்ளோ அக்கறை வச்சிருக்கீங்களே... நான்தான் சார் உங்களுக்கு நன்றி சொல்லணும்''

''டைமாய்டுச்சு...நான் புறப்படறேன்''

''சார் ஒரு நிமிஷம்''

''என்ன?''

''நான் தினமும் இங்கே வந்து நந்தனாவை பார்க்க அனுமதிக்கணும்.''

கவுதம் சின்னதாய் புன்னகைத்து அவன் தோளில் தட்டிக் கொடுத்து விட்டுப் போனான்.

அன்றிலிருந்து காலையோ, மாலையோ, நேரம் கிடைக்கும் போதெல்லாம் வந்து விடு வான் ஜீவன்.

காதலோடு துள்ளியோ டிய மீன் விழிகள், ஜீவனற்று இருப்பதை பார்த்து குமுறி னான்.

அவள் கைகளை தன் கைகளுக்குள் பொத்தி, ''நீ குணமாகலேன்னாக்கூட உன்னை கைவிட மாட்டேன் ராஜாத்தி. கடைசி வரை ஒரு குழந்தையா நினைச்சி பாது காப்பேன்.''

சில சமயங்களில் தானே பால் புகட்டி விடு வான். மருந்து மாத்திரைகள் புகட்டுவான். ஏதாவது பேசிக் கொண்டே இருப் பான். சுகந்தியின் வேலைக ளில் பாதியை அவன் செய் தான்.

அன்றும் அப்படித் தான். புகட்டிய மருந்தை ரோபோட் மாதிரி உட்கொண் டாள்.

அவளையேப் பார்த்து கொண்டிருந்த ஜீவனுக்கு உள்ளுக்குள் கரைந்தது.

'பொம்மை போலாகி விட்டாயே நந்து. பொம்மையாவது சாவிக் கொடுத்தால் கொஞ்ச நேரமாவது இயங்கும். ஆனால் நீ...?'

அவள் இரு கைகளையும் எடுத்து தன் கன் னங்களில் வைத்து அழுத்திக் கொண்டான். சுகந்தி சமையலறையில் பிஸியாக இருந்தாள்.

கண்கள் கரகரவெனப் பொங்கியது ஜீவ னுக்கு.

''ஸாரிடா நந்து... எல்லாமே என்னால் தானே? ஏழு வருஷமாய் உலக இயக்கத்திலிருந்து ஒதுங்கி அமானுஷ்ய வாழ்க்கை நீ வாழ்ந்துக் கொண்டிருப்பதற்கு காரணம் நான்தானே? மன் னிச்சிடு நந்து... நந்தும்மா.. என் நந்து.. அடிடா.. என்னை அடி நந்து!'' அவள் கைகளால் அவனே அடித்துக் கொண்டான்.

நந்து... நந்து என்று அவன் அழைத்தது அவள் புலனை தொட்டதோ என்னவோ... ஒரு கணம் நந்தனாவின் உடல் சிலிர்த்தது.

எங்கேயோ அந்தக் குரலை, அந்தப் பெயரை கேட்ட உணர்வு. இதயத்தின் அடித்தளத் தில் உறைந்துப் போயிருந்த அந்த குரல் உருக்கி... உருகியது. எங்கோ லயித்திருந்த விழிகளை அசைத்து அவன் முகத்தில் பதிய வைத்தாள்.

அவளுள் தெளி வற்ற நினை வாய், மசமசப் பாய் ஏதோ ஓடி யது. தனக்கு மிக நெருக்கமா னவன் போல் ஒருவித மயக் கம். உதடுகள் துடித்தது. ஒரு கணம் தான். அவன் அழுது நிமிர்வதற்குள் நந்தனா பழைய நிலைமைக்கு போய்விட்டாள்.

நாட்கள் கடந்தன.

நர்சரி!

ரம்மியம் சூழ்ந்திருந்த தோட்டத்தில் நிழல் இருந்த இடத்தில் சேர்




இயற்கையில் விநோத தோற்றம் கொண்ட முந்திரிப் பழத்தில் உள்ள கரகரப்பு பலருக்கு பிடிக்காது என்பதால், இதை ஒதுக் குவது உண்டு. ஆனால் இந்த பழம் எலும்புக ளுக்கு உறுதியையும், பற்களுக்கு பலத்தையும் தரும்.

கோடை காலத்தில் முந்திரிப் பழத்தை வாங்கி கொட்டையை நீக்கி விட்டு பழத்தை நறுக்கி சாறு பிழிந்து அதில் பாதியளவு சர்க் கரை கலந்து வெயிலில் வைக்க வேண்டும். அதன் அடியில் சுண்ணாம்பு வண்டல் அப்ப டியே படியும். அதை எடுத்து விட்டு தெளிந்த சாறை வடிகட்டி குடித்தால் மிகவும் சுவையாக இருக்கும். கோடை தாகத்தை தணிக்கும்.

போட்டு நந்தனாவை அமர்த்தியிருந்தாள் சுகந்தி.

பெரிய ஆர்டர் ஒன்று வந்திருந்தது. அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

எப்ரோப்பியா, அபீனியம், அரேலியா, கலஞ்சியா என்று பல வண்ணங்களில் வெளிநாட்டுச் செடிகளின் பூக்கள் மனதை அள்ளின.

டிரெஸ்சினா, எக்ஸோரா, கறுப்பு, பச்சை நிறங்களில் உட்பட பல வண்ணங்களில் ரோஜாச் செடிகள்.

அரளி, நந்தியா வட்டை, பவளமல்லி, சங்கு புஷ்பம், ஜாதி மல்லி, குண்டுமல்லி, அடுக்குமல்லி என்று பலவகைப் பூச்செடிகள்.

அதற்கு நடுவில் கும்பலாய் சூரியகாந்தி பூக்கள் கும்மியடித்துக் கொண்டிருந்தன.

நந்தனாவைக் காற்றில் அசைந்து அழைத்தன.

'இதேப்போல் பூக்களை எங்கோ பார்த்திருக்கிறாய்'. மூளை செய்தியை அனுப்ப... தலை வலித்தது. தன்னிச்சையாய் எழுந்து அதனருகே சென்றாள்.

அங்கு பணிபுரிந்துக் கொண்டிருந்த டேவிட் அவளைப் பார்த்து விட்டு சுகந்தியிடம், ''மேடம்... அங்கேப் பாருங்க... அவங்க எழுந்து நடக்கிறாங்க!'' என்றான்.

திரும்பிப் பார்த்த சுகந்தி தடக்கென எழுந்து நின்றாள்.

'அட... நடப்பது நந்தனாவா?'

அவளருகே ஓடினாள்.

சூரியகாந்தி பூக்களை ஆர்வமாய் பார்த்த நந்தனா சுட்டு விரல் நீட்டி, ''இது... இது...'' என்றாள்.

மயிர்க்கால்கள் சிலிர்த்துக் கொண்டன சுகந்திக்கு.

''நந்தனா... நந்தனா... நீயா பேசினே? பேசு நந்தனா... ஞாபகம் வருதா? சொல்லும்மா...!'' பரவசத்தில் கண்ணீர் முட்டின.



## எல்லோருக்கும் ஏற்ற கொய்யாப்பழம்

**வைட்டமின் சி சத்து நிறைந்த கொய்யாப்பழம் மலம் இளக்கும் தன்மை கொண்டது. பற்களுக்கும் எலும்புகளுக்கும் சிறந்தது. நிமோனியா, காசநோய் போன்றவற்றை வரவிடாமல் தடுக்கும் கொய்யாப்பழத்தை சிறுவர் முதல் பெரியவர் வரை தினமும் சாப்பிடலாம். ஆனால் கனிந்த கொய்யாப்பழம் சாப்பிடுவது மிகவும் நல்லது.**

அதன் பிறகு நந்தனாவிடமிருந்து எந்த பேச்சுமில்லை.

அறுந்த கொடியாய் மயங்கி சரிந்தாள்.

''பயப்பட ஏதுமில்லை மேடம். நல்ல இம்ப்ரூவ்மெண்ட் தெரியுது. உங்களோட கவனிப்பு அவங்களை பழைய படி கொண்டு வந்துடும். அவங்களுக்கு தெரிஞ்ச விஷயங்களை பேசுங்க. தெரிஞ்ச நபர்களை கண்முன் கொண்டு வந்து நிறுத்துங்க. அவங்க முழுக்க குணமாகற நாள் வெகு தொலைவில் இல்லை'' என்றார் நந்தனாவை பரிசோதித்த டாக்டர்.

சுகந்திக்கு கேட்கவே சந்தோஷமாக இருந்தது.

'தான்பட்ட பாடுக்கு பலன் கிடைக்கப் போகிறது.'

ஆனாலும் அந்த சந்தோஷத்தை மீறி ஒரு வித பயம் முளைத்தது.

## 13

ஜன்னலோரம் குருவியொன்று எதையோ கொத்தித் தின்றது. மஞ்சள் வெயில் மின்சார விளக்கிற்கு அவசியமின்றி ஜன்னல், வாசல் வழியாக வீட்டிற்குள் புகுந்திருந்தது.

நந்தனாவின் பார்வை குருவி மீதே நிலைத்திருந்தது. அவள் தலைக்குள்ளும் எதுவோ ஒன்று கொத்தியது. கசமுசாவென்ற குழப்பம். பாரமாக தலைமுழுக்க அடைத்து வைத்தாற்போல் வலி.

பேச வேண்டும் போல் இருந்தது. எழுந்து சென்று குருவியை துரத்த வேண்டும் போல் தோன்றியது. ஆனால் இயக்கம் மொத்தத்தையும்

கட்டிப் போட்டது போல் இருந்தது. இப்போது தான் அம்மாவின் கருவறையில் ஜனித்ததுப் போல் எதுவும் செய்ய முடியாத நிலை.

சத்துப் பவுடரை பாலில் கலந்து பதமாய் ஆற்றி புகட்டினாள் சுகந்தி. உதட்டோரம் வழிந்த பாலை சிறு டவலால் துடைத்தாள். கன்னத்தில் விழுந்த சில முடிகளை அன்பாய் ஒதுக்கினாள்.

அந்த ஸ்பரிசத்தில் நந்தனாவின் கண்கள் அசைந்தன.

''என்னைத் தெரியுதா நந்தனா?''

''....?''

''நான் தான் சுகந்தி. சுகந்தி... புரியுதாம்மா? என் குட்டிப் பாப்பாவை பார்க்க மாடி வீட்டுக்கு வருவியே... அதே சுகந்திக்கா..நீ சீக்கிரம் குணமாகணும் நந்தனா. உனக்கொரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தி தருவதுதான் நான் செய்யற பரிகாரம். துறுதுறுன்னு ஓடியாடி திரிஞ்சியேடி. பழையபடி உன்னைப் பார்க்க மனசு ஏங்குது. ஆனா, நான்... நான்...!'' விசும்பினாள்.

திறந்திருந்த கதவு தட்டப்பட... உடனே கண்ணீரை துடைத்துக் கொண்டு திரும்பினாள்.

ஜீவன் நின்றிருந்தான்.

''வாங்க ஜீவன்!''

''ஏன் அழறீங்க?''

''ஒ... ஒண்ணுமில்லே!''

''பார்த்துக்கிட்டுதாங்க இருந்தேன். என் நந்து மேலே நீங்க எவ்வளவு பாசம் வச்சிருக்கீங்க? கொடுத்து வச்சவ நந்து. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பராமரிக்க ரத்த சொந்த பந்தங்களே முன்வரமாட்டாங்க. ஜஸ்ட், ஒரு ஃபேமிலி ஃப்ரண்டா பழகினவங்க நீங்க. சொந்த தங்கையைப் போல் கவனிச்சுக்கறீங்க. தாயோட அன்பை, அக்கறையை காட்டறீங்க. ஆச்சர்யமாயிருக்குங்க. நானும் நந்துவும் உயிருள்ளவரை உங்களையும், கவுதம் சாரையும் மறக்க மாட்டோம்.''

''எனக்கும் நந்தனா மேலே உரிமையிருக்கு ஜீவன். அவளுக்கொரு எதிர்காலத்தை உருவாக்கித் தரவேண்டிய கடமை எல்லாரையும் விட எனக்குதான் அதிகமிருக்கு.''

''சந்தோஷம். இப்ப நந்துக்கிட்ட ப்ராக்ரஸ் தெரியுதா?''

''ஆமா ஜீவன். பேச்சுக் கொடுத்துட்டே இருந்தா... எப்பவாவது திரும்பிப் பார்க்கிறா. நம்மையே பார்த்துக்கிட்டே இருக்கிறா. அந்த கண்கள்ல ஏதோ ஒரு தவிப்பு தெரியுது.''

''இது போதுங்க. ரொம்ப சீக்கிரம் என் நந்து பழைய நிலைமைக்கு வந்துடுவாள்ங்கற நம்பிக்கை வந்துடுச்சுங்க.''

''ஆபீசுக்கு போகலையா?''

''இல்லீங்க... நந்துவை வெளியே அழைச்சிட்டுப் போகலாம்னு இருக்கேன். அதனால லீவு போட்டுட்டேன்.''

''வெளியேன்னா?''

''நாங்க சந்திச்சுக்கிட்ட இடங்களுக்கு!''

''நல்ல விஷயம்தான். ஆனா, இன்னைக்கு வேண்டாம் ஜீவன். ரெண்டு நாளா... நைட்டானா லைட்டா ஃபீவர் வருது. அதிகமாய்டக் கூடாதில்லையா? டாக்டர்ட்ட கேட்டு மாத்திரைப் போட்டிருக்கேன். சரியாகட்டும் அப்புறம் கூட்டிட்டுப் போங்க. பார்த்துக்குங்க காபி எடுத்துக்கிட்டு வர்றேன்.''

கிச்சனுக்குள் சென்றாள்.

''தலை வலிக்குதாடா நந்து!'' நெற்றியை தொட்டுப் பார்த்தான்.

''எறும்பு கடிச்சாக்கூட உன்னால சொல்ல முடியாதில்லையா? ஏன்னா, என் கோழைத்தனம் உன்னை கடிச்சு குதறிடுச்சே...!''

சுகந்தி வரும் அரவம் கேட்டதும் சுதாரித்துக் கொண்டான்.

''ஜீவன்... பக்கத்துல டிபார்ட்மென்டல் ஸ்டோர் வரைக்கும் போய்ட்டு வந்திடறேன். பார்த்துக்குங்க.''

''ம்!''

காபியை வாங்கிக் கொண்டான். சுகந்தி பர்ஸை எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

அந்த தனிமைக்காகதானே காத்திருந்தான் ஜீவன்!

காபியை அவசரமாய் பருகினான்.

கதவை சாத்தினான்.

நந்தனாவின் எதிரே வந்தமர்ந்தான். அவள் முகத்தை கைகளால் ஏந்திக் கொண்டான்.

அந்த தொடுதல்... நந்தனாவின் உள் நரம்புகளை சீண்டிவிட்டது.

''நந்து... என் கண்ணே! இன்னைக்கு என்ன நாள் தெரியுமா? என் பிறந்த நாள். ஒவ்வொரு வருஷமும் எனக்காக கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்து நெற்றியில் குங்குமம் இடுவாயே! அந்த அன்புக்கு எது ஈடாகும்? உன்னைக் காணாத ஏழு வருஷமும் என் பிறந்தநாளை மறந்தே போனேன் நந்து. உன்னைப் பார்த்தப் பிறகுதான் மறுபடி பிறந்தேன்.

எத்தனை முறை ஆசையாய் உன்னிடம் கேட்டிருப்பேன்? அதுவும் பிறந்த நாளன்று மட்டும். ஏனென்றால் நீயொரு நெருப்பு என்று எனக்குத் தெரியும். கடைசி பிறந்தநாளன்று வெட்கத்துடன் ஒரு கணத்தில் தந்தாயே ஆசைப்பரிசு. முத்தம்! அதற்குள் நீலக்கடலே சிவந்துப் போயிருக்

கும் உன் முகத்தை பார்த்து. அவ்வளவு வெட்கப் பட்டாய். நினைவிருக்கிறதா நந்து?

இன்று என் செல்லத்திடமிருந்து அந்த காதல் பரிசு வேண்டும். உன்னால் தர முடியாது. ஆனால், நான் எடுத்துக் கொள்ளதான் போகிறேன் உன் அனுமதியின்றி. இன்று நடந்ததை... நீ குணமான பின் சொல்வேன். 'ச்சீ... ராஸ்கல்... நீ இவ்வளவு மோசமா?' என்று மார்பில் குத்தி நெஞ்சில் உன் முகத்தை புதைத்துக் கொள். நான் மண்ணில் புதைந்து போகும்வரை என்னுள் பொத்தி பாதுகாப்பேன் உன் இதயத்தை. நந்து... என் ராஜாத்தி.''

நந்தனாவின் மண்டைக்குள் பட்டாம்பூச்சி யொன்று இங்குமங்கும் ஓடி வெளியேற முடியாமல் இடித்தது.

ஜீவன் அவளின் உதட்டருகே தன் கன்னத்தை வைத்து அழுத்தினான்.

அந்த ஸ்பரிசம்...

அவள் மூளைக்குள் ஒரே ஒரு கணம்... ஜீவனின் பதிந்திருந்த முகத்தை காட்டி மறைத்தது. கண்கள் இங்குமங்கும் அலை பாய்ந்து பழைய படி நிலைத்தது.

கவனிக்காத ஜீவன், ''தாங்க்ஸ்டா நந்து'' என்றான்.

என்றோ பதுக்கி, சேமித்து வைத்த வெப்பத்தையெல்லாம் ஒருநாள் வெளிப்படுத்தி விடுமல்லவா எரிமலை?

அன்று!

விடியற்காலை! கோடையின் ஆட்சி காலம் என்பதால்... அந்த நேரத்தில் கூட தென்றலை அனுமதிக்கவில்லை. ஃபேன் ஓடிக் கொண்டிருந்தாலும் வெக்கையாக இருந்தது. கழுத்தெல்லாம் வியர்வை.

குறைந்தளவு வீரியமிக்க தூக்க மாத்திரை உடலில் கலந்திருந்தும்... கண்களைத் திறந்தாள் நந்தனா.

சுழன்ற மின்விசிறியில் ஜொலித்த பல்பின் வெளிச்சத்தையே உற்றுப் பார்த்தாள்.

தலைக்குள் அலையடிப்பது போல் இரைச்சல். பாரமானது வலி. வேகமாய் ஓடின முகங்கள்.

அம்மா, அப்பா, கடற்கரை, ஜீவன், கவுதம், சுகந்தி... சுகந்தி... மறுபடி சுகந்தி... அழுகை!

விருட்டென படுக்கையை விட்டு எழுந்தமர்ந்தாள்.

சற்றுநேரம் புரியவில்லை ஏதும்!

ஆனால், நீண்ட உறக்கத்திலிருந்து விடுபட்டதுப் போல் ஒரு ஆசுவாசம்.

புதிதாய் தெரிந்த அந்த அறையை குழப்பத்துடன் பார்த்தாள்.

எழுந்து அந்த சின்ன அறையை விட்டு வெளியே வந்தாள்.

விசாலமான ஹால்!

சோபாக்கள். மேஜை! அதன் மேல் லாமினேட்டட் போட்டோ!

அதையே உற்றுப் பார்த்தவளுக்கு அழுகை வந்தது.

கவுதமுடன் சிரித்துக் கொண்டிருந்த சுகந்தியைப் பார்க்க பார்க்க ஆத்திரமும், அழுகையும் வந்தது. வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் பழைய நினைவுகள் ஊற்றெடுக்க... அப்படியே மயங்கிச் சரிந்தாள் நந்தனா.

விடிந்தபின்தான்... மயங்கி விழுந்து கிடந்தவளைப் பார்த்து பதறினான் கவுதம்.

''சுகந்தி... சுகந்தி... இங்கே வா சீக்கிரம்!''

பிரஷ் பண்ணிக் கொண்டிருந்தவள் அவசர அவசரமாய் வாய் கொப்பளித்து விட்டு ஓடி வந்தாள்.

''இங்கே பார்... மயங்கி கிடக்கிறா... இங்கே எப்படி வந்தா?''

''எனக்கும் புரியலீங்க... பயமாயிருக்குங்க.''

''பயப்படற விஷயமில்லே இது. சந்தோஷப்படணும். மற்றவர் உதவியில்லாம தானே எழுந்து வந்திருக்காள்னா... பழைய நினைவுகள் திரும்புதுன்னுதானே அர்த்தம்? அன்னைக்கு சூரியகாந்திப் பூவை பார்த்துட்டுதானே எழுந்து நடந்தா? இன்னைக்கு?'' கவுதம் சுற்றுமுற்றும் பார்த்தான்.

அவன் கண்கள் பிரகாசமாயின.

''புரிஞ்சுடுச்சு சுகந்தி. இங்கே பார்... இதைப் பார்த்துட்டுதான் அவளுக்கு ஞாபகம் வந்திருக்கணும்.'' அவன் காட்டியப் பொருள் அவர்களின் போட்டோ!

உடல் முழுக்க பயம் ஊடுருவி நடுங்க வைத்தது சுகந்திக்கு.

'என்னைப் பார்த்துதான் மயங்கி விழுந்தாளா? அப்படியானால்... அப்படியானால்?'

''என்ன ஷாக்காயிட்டே?''

''அ... அது... இவளை டாக்டரிடம்...''

''அவசியமில்லேன்னு நினைக்கிறேன். நல்லா ரெஸ்ட் தேவை. மதியம் வரைக்கும்

வெய்ட் பண்ணு. அதுக்குப் பிறகும் விழிக்க லேன்னா போன் பண்ணு. ஹாஸ்பிடலுக்கு போகலாம்.''

''சரிங்க!''

அன்றைக்கு நர்சரிக்கு போக வேண்டாம் என்று முடிவு செய்தாள். விஷ்ணுப்ரியா ஸ்கூலில் அவளை டீச்சர் வரச் சொன்னார்கள் என்றாள். ஃபேஷன் பரேடு நடக்கவிருப்பதால் ப்ரியாவும் கலந்துக் கொள்ள அதுபற்றி பேச அழைத்திருந் தார். ஸ்கூலுக்கு போய்விட்டு அப்படியே நர்சரி போகலாம் என்று நினைத்திருந்தாள்.

கூட நந்தனாவை அழைத்துச் செல்ல முடி யாது. நல்ல உறக்கத்தில் இருக்கிறாள். அவள் எழு வதற்குள் வீட்டை சுத்தப்படுத்தி விடலாம் என்று வேலையில் இறங்கினாள்.

மணி பத்தரை! நீண்ட உறக்கத்திலிருந்து விடுபட்டாள் நந்தனா.

மண்டையை பிளந்தது தலைவலி. சிரமப் பட்டு கண்விழித்தவளுக்கு முதலில் பட்டது... தோளில் டவலைப் போட்டுக் கொண்டு பாத்ரூ மில் குளிக்கச் சென்ற சுகந்திதான்.

'இ... வ... ளா?'

சுகந்தி தன்னை சந்தேகித்தது நினைவிற்கு வந்தது. படுக்கையில் எழுந்தமர்ந்தாள்.

சுகந்தி இவளை கவனிக்கவில்லை. குளிக்க போய் விட் டாள்.

எழுந்த நந்தனா வுக்கு முதலில் சூழ்நி லைப் புரியவில்லை.

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டே வந்தாள்.

வருடம், தேதி யிட்ட காலண்டர்... ஏழு வருடம் தாண்டிப் போயிருந்தது. வீடு முழுக்க ஆங்காங்கே தென்பட்ட கவுதமின் குடும்ப புகைப்படம் அவன் வீடு என்றது.

அப்படியானால் எங்கள் வீட்டில் இல் லையா? அம்மா, அப்பா எங்கே?

டேபிள்மீதிருந்த நந்தனாவின் மெடிக்கல் ரிப்போர்ட் அடங்கிய ஃபைல்.... அவளின் கடந்த காலத்தை சொல்ல... உறைந்துப் போனாள்.

'நானா? ஏழு வருடமாக புத்திசுவாதீன மாக இருந்தேனா?'

'எல்லாம் சரி! நான் ஏன் இவளுடன் இருக் கிறேன்? என்னை கேடு கெட்டத்தனமாய் சந்தே கித்தவள் அல்லவா?' கோபத்தில் உடல் தள்ளாட... மயக்கம் வரும் போலிருந்தது.

கட்டிலில் வந்து படுத்து விட்டாள் களைப் புடன்!

## 14

குளித்து முடித்து பூஜைய றைக்கு வந்த சுகந்தி... சில நிமிடங்கள் கண்மூடி கைகு வித்து பிரார்த்தித்தாள்.

காலிங்பெல் இனிமை யான இசைபாட... கதவைத் திறந்தாள். கவுதம் பெயருக்கு கூரியர் வந்திருந்தது. கையெழுத்துப் போட்டு வாங்கியவள், கதவை மூட மறந்து விட்டாள்.

நந்தனாவை பார்க்க வந்தவள்... இன்னும் உறங்கிக் கொண்டிருப்பதை பார்த்து கவலைப் பட்டாள்.

அருகில் அமர்ந் தாள்.

கன்னத்தில் மெல்லத் தட்டினாள்.

''நந்தனா... நந் தனா...''

''...''

''நந்தனா... எந் திரிம்மா...''

மெல்ல கண்க ளைத் திறந்தாள்.

எதிரே... சுகந்தி யின் முகம். பார்க்கப் பிடிக்காமல் கண் களை மூடிக் கொண் டாள்.

''நந்தனா... என் னம்மா செய்யுது? டயர்டா இருக்கா?''

அவளோ கண்க ளைத் திறக்க வில்லை.

''நீ கொஞ்சம், கொஞ்சமா குணமா கிட்டு வர்றே. எனக்கு




**நீ**ர்ச் சத்து நிறைந்த, தாது உப்புக் கள், வைட்டமின்கள் மற்றும் இன்சுலின் கொண்ட நாவற்பழம் சர்க்கரைநோய் உள்ளவர்களுக்கு அருமருந்து ஆகும். சர்க் கரை நோய் உள்ளவர்கள் காலையில் 10 பழமும், மாலையில் 10 பழமும் தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டால் நோய் கட்டுப்ப டும்.

நாவற் பழத்தின் கொட்டை, மரத்தின் பட்டை ஆகியவையும் சர்க்கரை நோயை குணப்படுத்த பயன்படுத்தப் படுகின்றன.




பச்சைத் தோல் போர்த்திய செக்கச் சிவந்த சதைப்பகுதி கொண்ட தர்ப்பூசணி உடலையும் மூளையையும் குளிர்ச்சியாக்கி அமைதிப்படுத்தும். சிறுநீரை நன்கு வெளியேற்றுவதால் சிறுநீர் கற்கள் வராமல் தடுக்கிறது. அடி வயிறு சம்பந்தமான கோளாறுகளையும் வயிற்றுவலியையும் தர்ப்பூசணி குணப்படுத்தும்.

கோடையில் தாகம் தணிப்பதில் முதலிடம் வகிக்கும் தர்ப்பூசணியில் உள்ள சத்துக்கள் உடலுக்கு வனப்பையும், வலிமையும் அளிக்கவல்லது.

தெரியுது. நீ பழையபடி குணமாகணும், நடமாடணும், துள்ளித் திரியணும். ஒரு அருமையான வாழ்க்கை வாழணும்.''

'என்ன சொல்கிறாள் இவள்?'

திடீரென்று சுகந்தியின் குரல் விசும்பியது.

''என்னை மன்னிப்பாயா நந்தனா? நான் உனக்கு இழைத்த தீங்கு மன்னிக்க முடியாதுதான். அற்பமான என் கற்பனையால் நீ பாதிச்சது கொஞ்ச நஞ்சமல்ல. என் தப்பை உணர்ந்துட்டேன் நந்தனா. ரொம்ப சீக்கிரம் பழைய நிலைமைக்கு வந்துடுவே. டாக்டரும் சொல்லிட்டார். எனக்கு அதுல ஏகப்பட்ட சந்தோஷம் தான். இதுக்காக தானே ஏழெட்டு மாசமா கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துக்கிட்டேன்? ஆனா, எல்லாத்தையும் மீறி ஒரு பயம். உன் முகத்திலே விழிக்க எனக்கு தகுதியில்லையே. சிறுக... சிறுக கூனிக் குறுகி செத்துப் போய்டுவேன்டி. நான் நிம்மதியா தூங்கி ஏழு வருஷமாய்டுச்சு தெரியுமா? அநியாயமா உன்னையும் என் புருஷனையும் சேர்த்து சந்தேகப்பட்டுட்டேன். உடனே உன் உயிரை மாய்ச்சுக்கப் போய்ட்டியே! இதுக்கெல்லாம் நான்தான் காரணம்னு இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. காதல் தோல்விதான் காரணம்னு எல்லாரும் நினைச்சிட்டிருக்காங்க. நீ கண்டிப்பா என் புருஷன்கிட்டே சொல்லுவே. என்னை என் புருஷன் ரொம்ப உயர்வா நினைச்சிட்டு இருக்கார். அப்புறம்... என்னை மனுஷியாக்கூட நினைக்க மாட்டாரே! எதை வேணாலும் தாங்கிக் கொள்வேன். ஆனா, என் புருஷனின் புழுவைப் பார்க்கிற மாதிரியான பார்வையை தாங்க முடியாது. அதுக்குப் பிறகு நான் உயிரோடவே இருக்க மாட்டேன்.''

அவள் பேசிக் கொண்டிருந்த அனைத்தையும் சலனமின்றி கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் நெஞ்சமோ பொங்கிக் கொண்டிருந்தது.

'செய்யாத தவறுக்கு நான் தண்டனை அனுபவிக்கலே? நீ தப்பு செய்தவ... ஏன் அனுபவிக்கக் கூடாது?'

''எப்படியோ... கூடிய சீக்கிரம் என் ப்ரியா அம்மாவை இழக்கப் போகிறாள்!'' கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

கண்களை திறக்கும் ஆவலை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள் நந்தனா.

அத்தனையும் வாசலில் நின்றிருந்த ஒரு உருவம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆத்திரத்தில் கைகள் முறுக்கேறிக் கொண்டன. பிறகு, தன்னை ஸ்திரப்படுத்தி... வந்த வழியே சென்று விட்டது.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் வெறித்தப் பார்வையுடன் நடித்தாள் நந்தனா. தன்னைச் சுற்றி நடப்பவைகளை உன்னிப்பாக கவனித்தாள்.

கவுதமின் அக்கறை, சுகந்தியின் அதிகப்படியான பாசமும் கவனிப்பும்! ஒரு தாயைப் போல, அவள் மலம் கழுவி, குளிப்பாட்டி, உடை மாற்றி, உணவூட்டி, மருந்துப் புகட்டி... அத்தனையும் ஒரு சின்ன முகசுளிப்புக் கூட இல்லாமல் அன்பாய் செய்ததுதான்... நந்தனாவின் முகத்தில் அடிப்பதுப் போலிருந்தது.

'இவள் தன் செய்கைக்காக வெட்கி, வருந்தி பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறாள். இவளை தண்டிக்கலாமா? நியாயம்தானா? தண்டிப்பது செத்த பாம்பை அடிப்பதுப் போல் அல்லவா? அப்புறம் எனக்கும் இவளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கும்?'

தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள் நந்தனா.

ஹாலில்... ஷூ லேஸை முடிப்போட்டு கொண்டிருந்தான் கவுதம்.

''என்னங்க?''

''ம்...''

''ஜீவன் போன் பண்ணினாரா?''

''இல்லை''

''மூணு நாளா இங்கே வரலை. நந்தனாவை தினமும் வந்துப் பார்ப்பாரே...''

''போன் பண்ணி நீயேக் கேளு!''

''ஏங்க கோபமாகவே பதில் சொல்றீங்க?''

''இல்லையே... நான் நல்லாதானே பேசறேன்.''

''இல்லீங்க. ஏதோ ஒரு மாற்றம் தெரியுது. ரெண்டு நாளா ஒரு மாதிரியா இருக்கீங்க. என்னிடம் சரியாக்கூட பேசலே...''

''அதான் எட்டு வருஷமா பேசிக்கிட்டிருக்கோமே... ரெண்டு மூணு நாள் அமைதியா இருந்தா நச்சரிப்பியா? அவனவனுக்கு ஆயிரம் டென்ஷன்.''

''ஸாரிங்க!'' சுகந்தியின் முகம் வாடியது.

சற்று நேரம் அவர்களிடையே மவுனம் நிலவியது.

''சரி... நான் வர்றேன்!'' அவளை ஏறிட்டுப் பார்க்காமலேயே சொல்லிவிட்டு புறப்பட்டான்.

''ஒரு நிமிஷம்!''

அந்த குரலுக்கு இருவருமே திடுக்கிட்டு திரும்பினர்.

நந்தனா அவள் அறையின் வாசலில் நின்றிருந்தாள்.

''தாங்க் காட்!'' கையிலிருந்த ஃப்ரீப் கேஸை போட்டுவிட்டு அருகில் ஓடி வந்தான்.

சுகந்திக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'தெளிவாய் பேசி அழைத்தது... நந்தனா தானா?'

''நான் யார்?''

''என்னப் பேசறே நந்தனா?''

இருவருமே திடுக்கிட்டனர்.

''நான் யாரு? நீங்க யாரு? நான் எங்கே இருக்கிறேன்?''

முகம் மாறியது கவுதமுக்கு.

''கிளம்பு சுகந்தி... இவளை உடனடியாக ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போகணும்.''

மூவரும் டாக்டர் ருத்ரைய்யாவையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

டாக்டர் நந்தனாவை நன்கு பரிசோதித்து விட்டு ஆச்சர்யமாய் பார்த்தார்.

''மிஸ். நந்தனாவுக்கு இப்ப எந்த பிரச்சினையும் இல்லை. அவங்க குணமாகிட்டாங்க. பட், பழைய நினைவுகள் மட்டும் இல்லை. மீண்டும் வரலாம், வராமல் போகலாம். மற்றபடி ஷி இஸ் ஆல்ரைட்.''

''எங்களை கூட நினைவிருக்காதா?'' கேட்டாள் சுகந்தி.

''இருக்காது! உங்களை மட்டுமில்லே எந்த சம்பவமும் அவங்க நினைவில் இல்லை. அவங்க இப்ப புதுசா பிறந்திருக்காங்க. புது இடம், புது உறவு, புதிய நண்பர்கள்னு எல்லாமே அவங்களுக்கு அறிமுகப்படுத்தணும்.''

சுகந்திக்கு நெஞ்சுக்குள் இதுநாள்வரை நிரடிக் கொண்டிருந்த மனபாரம் நீங்கியது. நிம்மதியாய் பெருமூச்சு விட்டதை உள்ளுக்குள் சிரித்தபடி பார்த்தாள் நந்தனா.

''தாங்க்ஸ் டாக்டர். உங்களோட அற்புதமான ட்ரீட்மெண்ட்தான்... இவ்வளவு சீக்கிரம் நந்தனா குணமாகியிருக்காங்க!'' நெகிழ்ச்சியுடன் அவர் கைப்பற்றி குலுக்கினான் கவுதம்.

''நோ... நோ... மிஸ்டர் கவுதம். அஸ் எ டாக்டரா நான் என்ன செய்யணுமோ, அதைதான் என் லிமிட்டிலிருந்து செய்தேன். ஆனா, ஒரு தாயா மாறி, அக்கறையோட கவனிச்சு, அவங்களோட பழைய நினைவுகளை கிளறி... குணமாக காரணமா இருந்தவங்களே உங்க வொய்ஃப்தான். நீங்க தாங்க்ஸ் சொல்லணும்னா இவங்களுக்கு தான் சொல்லணும்.''

கவுதம் மனைவியை பார்த்து பெருமையுடன் சிரித்தான்.

அமைதியாகவே இருந்தாள் நந்தனா.

வீட்டிற்கு வந்தனர்.

''ப்பா... உன்னை இப்படிப் பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா நந்தனா?'' கவுதமின் கண்கள் நட்சத்திரங்களாய் மின்னியது.

''என் பெயர் நந்தனாவா?''

''உனக்கு எதுவுமே நினைவிற்கு வரலையா நந்தனா? உன் பெயரைகூட மறந்து விட்டாயே!''

''இல்லை... எனக்கு எதுவுமே நினைவில் இல்லை. ப்ளீஸ் சொல்லுங்கள். நீங்கள் யார்... நான் யார்?''

''முதலில் கொஞ்சம் ஹார்லிக்ஸ் சாப்பிடு நந்தனா... எல்லாம் சொல்கிறேன். சுகந்தி கொண்டு வா!''

''என் அம்மா, அப்பா எங்கே இருக்கிறாங்க?''

''சொல்றேன் நந்தனா... ஒரு நிமிஷம் பொறு!'' என்றவன் எழுந்தான்.

'இவளின் பெற்றோர் இப்போது உயிருடன் இல்லை என்பதை எப்படி தாங்கிக் கொள்வாள்?'

ஆல்பத்தை எடுத்து வந்தான்.

அதை அவள் ஏழு வருடத்திற்கு முன்பே பார்த்ததுதானே? ஆனால் சாதுரியமாய் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

''இது சுகந்தி. அவளோட வளைகாப்பின் போது எடுத்த படங்கள் இதெல்லாம்! எல்லா போட்டோவிலும் நீ இருக்கிறாய் பார்! இது நம்ம தெருவில் இருந்தவங்க... எதிர் வீட்டுக்காரம்மா, இதோ நான்! சுகந்தியோட அப்பா, அம்மா! இதோ இதுதான் உன்னோட அப்பா, அம்மா!''

இதயம் பாசத்தில் துடித்தது. ஓடிப்போய் அம்மா மடியில் படுத்துக் கொண்டு அழ வேண்டும் போல் இருந்தது.

''ஓ... இவங்களா?'' என்றாள் சாதாரணமாக.

''இவங்களைகூட ஞாபகம் இல்லையா நந்தனா?'' கவலையுடன் வினவினான்.

''இல்லையே! இப்ப இவங்க எங்கே இருக்காங்க?''

''மனசை திடப்படுத்திக் கொள். இப்ப இவங்க ரெண்டு பேருமே உயிரோட இல்லை.''

''எ... என்ன சொல்றீங்க?'' கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

'எப்படி... எப்படி... என்னை அனாதையாக விட்டு எப்படி போனார்கள்? கடவுளே... அம்மா... அப்பா...' ஓலமிட்டு அழவேண்டும் போல் இருந்தது. மிக மிக பிரயத்தனப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நடந்தது அத்தனையும் சொல்றேன்'' என்று எல்லாவற்றையும் சொன்னான். ஜீவன் இன்னமும் அவளை நேசித்துக் கொண்டிருப்பது உட்பட.

அவளுக்கு ஆறுதல் தந்த செய்தி ஜீவன் தான்!

ஆனால், ஆனால்... அவனையுமல்லவா நான் தெரியாததுப்போல் நடிக்க வேண்டும்? பெற்றவர்களையும் இழந்து, காதலையும் இழந்து... என்னதான் இருக்கிறது என் வாழ்க்கையில்?

சுகந்தி ஹார்லிக்ஸோடு வந்தாள்.

வழக்கம்போல் புகட்டிவிட முயல... நந்தனா தானே வாங்கிப் பருகினாள்.

எல்லோரும் தன்னை தனியே விட்டால் போதும் என்றிருந்தது, மனதிலுள்ள இறுக்கம், சோகம், இழப்பு எல்லாத்துக்காகவும் கதறி அழ வேண்டும்போல் இருந்தது.

'எப்பேர்ப்பட்ட இழப்புகள் எனக்கு'.

ஹார்லிக்ஸ் வேண்டா வெறுப்பாய், கசப்பாய் இறங்கியது.

''ஜீவனுக்கு விஷயத்தை சொல்லிட்டேன் நந்தனா. வந்துக்கிட்டே இருக்கார். போன்லேயே சந்தோஷம் தாங்காம அழுதுட்டார்.'' என்றாள் சுகந்தி.

'ஜீவனா? என் ஜீவனா? எத்தனை வருடங்கள் கழித்து பார்க்கப் போகிறேன்?'

உள்ளம் பரபரவென்றிருந்தது.

காலிங்பெல் அழைத்தது.

நந்தனாவின் காதல் நெஞ்சம் வேகமாய் அடித்துக் கொண்டது.

## 15

ஜீவன் ஆவலாய் உள்ளே வந்தான்.

''நந்தனா... இவர் யார்னு தெரியுதா?''

''இ... இல்லே! யார் இவர்?''

'ஜீவன்... ஜீவன்... நீங்களா? நான் பார்ப்பது நிஜம்தானா? மறுஜென்மத்தில் பார்ப்பதுப் போலிருக்கிறது'.

''நந்து... என்னைத் தெரியலியாம்மா? நான் தான் ஜீவன் நந்து... உன்னோட ஜீவன்!''

''ஸாரிங்க... என்னை கஷ்டப்படுத்தாதீங்க... உங்களை எனக்குத் தெரியலே!''

''நல்லா ஞாபகப்படுத்திப் பாரு நந்து! இத்தனை வருஷமா உனக்காகவே காத்திருக்கேன் நந்து... என்னை அனாதையாக்கிடாதே... ப்ளீஸ்! ஸார்... இவளை வேற ஒரு நல்ல டாக்டர்கிட்டே காட்டலாமா?''

அவள் நினைவுப் பெட்டகத்திலிருந்து தானும் முற்றிலும் அழிந்து விட்டிருப்பதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

''ப்ளீஸ்... கண்ட்ரோல் யுவர் செல்ப் ஜீவன்! நாங்க டாக்டர்கிட்டே இதுப்பத்தி பேசியாச்சு. மூளை நரம்புகள் மிக நுண்ணியமானவை. அதிகப்படியான ட்ரீட்மென்ட்டை நரம்புகள் மட்டுமல்ல... நந்தனாவின் உடல்நிலைகூட ஏற்றுக் கொள்வது கடினம். ஒரு சின்ன ஆபரேஷன் செய்தால் 90சதவீதம் அவளுக்கு நினைவு திரும்ப வாய்ப்பிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமா மறுபடி பழைய நிலைக்குப் போக 100சதவீதம் வாய்ப்பிருக்குன்னு சொல்லிட்டார்.''

''மை காட்!''

''ஸோ... இந்தளவிற்காவது நந்தனா நமக்கு மீண்டும் கிடைத்தாளேன்னு சந்தோஷப்பட்டுக்க வேண்டியதுதான்.''

''ஏற்கனவே பேசின மாதிரி... இப்பவும் பழைய விஷயங்களை பேசி நினைவுப்படுத்தலாமா?''

''என்னை தயவு செய்து யாரும் டிஸ்டர்ப் பண்ணாதீங்க. எனக்கு டயர்டா இருக்கு!'' என்றாள் நந்தனா.

''இல்லே நந்தனா... உன்னை நாங்க டிஸ்டர்ப் பண்ண மாட்டோம். ரெஸ்ட் எடும்மா. சுகந்தி நந்தனாவை அழைச்சிட்டுப் போ!''

அழைத்துச் சென்றாள்.

''ஸார்... என்ன ஸார் இது? என்னைத் தெரியாதுன்னு சொல்றாளே! எதிர்பார்க்கவே இல்லே ஸார்!'' தானொரு ஆண் என்பதையும் மறந்து கைகளால் முகத்தை மூடி அழுதான்.

''என்ன ஜீவன் இது குழந்தையாட்டம்? நாம அவளோட நிலைமையையும் நினைச்சுப் பார்க்கணுமில்லையா? அவ என்ன வேணும்னே மறந்துட்டாளா என்ன? இப்ப என்ன ஆகிப் போச்சு? அவ என்னைக்கும் உன் நந்தனாதான்!''

''நிஜமாகவா சொல்றீங்க... நந்தனா என்னை ஏத்துக்குவாளா?'' ஆர்வமாய் கேட்டான்.

''கண்டிப்பா! கொஞ்ச நாள் போகட்டும். அவளுக்கு வாழ்க்கைய அமைச்சுத் தர்ற பொறுப்பு எங்களுக்கிருக்கே? சமயம் வரும் போது பேசறேன்.''

அறைக்கதவை தாழிட்டுக் கொண்டு சத்தம் வராமல் அழுதாள் நந்தனா.

பெற்றவர்களுக்காக, ஜீவனுக்காக அழுதாள்.

'என்னை மன்னிச்சிடுங்க ஜீவன்! தெய்வமே நேரில் வந்து நின்னும் உதாசீனப்படுத்திட்டேன். நான் உங்களை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா? ஆனால், நான் போட்ட வேஷத்திற்கு நம் காதலையும் பலி கொடுக்க வேண்டியிருக்கு ஜீவன். சுகந்தி எனக்கு செய்த துரோகத்தை விட, எனக்கு செய்த சிசுருஷை மிகப் பெரியது. இயற்கை உபாதைகளை துடைத்து, என்னைக் குளிப்பாட்டி, தாயாகவே மாறிப்போனவளை நான் தண்டித்தால் எந்த ஜென்மத்திலும் என் பாவம் தீராது. பழையபடி குணமாகி விட்டேன், உன் தவறுகளை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றாலும் சுகந்தி கூனிக்குறுகிப் போய் விடுவாள். என் முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் வராது. என்றாவது ஒருநாள் உண்மையை சொல்லி விடுவேனோ என்கிற பயம் அவளைக்



கொல்லும். அல்லது, நானே மனசு மாறி சொல்லி விட்டால்? எனக்கு நன்றாகப் புரிகிறது ஜீவன். பணத்துக்காக காதலை குப்பையில் வீசுகிற ஆண்கள் மத்தியில், நான் மோசமான நோயாளியாய் இருந்தும் என்னை நேசித்தீர்களே... அந்த அன்பு இதயத்தை தெரிந்தே கசக்கிப் பிழிகிறேன். வேறு வழித் தெரியவில்லை ஜீவன். மன்னிச்சிடுங்க... என்னை மன்னிச்சிடுங்க!'

ஜீவன் தினமும் அவளைப் பார்க்க வந்தான். அவளோ, அவனைப் பார்த்தாலே வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

ஜீவன் கூனிக்குறுகிப் போனான்.

அன்று பால்கனியில் நின்றபடி தெருவை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தனா.

பக்கத்தில் வந்து நின்றான் ஜீவன்.

பார்த்தவள் நகர்ந்துப் போக முயன்றாள்.

''எங்கே போகிறே... நில்!'' கைப்பிடித்து தடுத்தான்.

அவனின் சூடான கை உடல் முழுக்க ரத்





தத்தை ஜிவ்வென சூடேற்றியது. அவன் வலிய தோளில் சாய்ந்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. தன்னிலை மீறி விடுவோமோ என்கிற பயம் வந்தது.

''கையை விடுங்க!''

''நான் பேசணும்!''

''மொதல்ல கைய விடுங்க!''

''ஜீவன்ங்கறது பேர் இல்லே... அது என் உயிர்னு அடிக்கடி சொல்லுவியே நந்து... எல்லாமே மறந்துப் போச்சா?''

''எனக்குதான் ஞாபகமில்லேன்னு சொல்றேனே. திரும்பத் திரும்ப ஏன் என் உயிரை வாங்கறீங்க? கையை விடுங்க!''

''சரி... ஞாபகமில்லே... ஒக்கே! மறுபடி புதுசா நேசிப்போமே! நாம கல்யாணம் பண்ணிக்கலாம் நந்து!'' கெஞ்சினான்.

''படிச்சவர்தானே? சொன்னாப் புரியாது? நீங்க நினைக்கிற எதுவும் நடக்காது.'' கோபமாய் கூறிவிட்டு கையை உதறிவிட்டுச் சென்றாள்.

ஜீவன் ஸ்தம்பித்துப் போனான்.

''உனக்குன்னு ஒரு வாழ்க்கை அவசியம் நந்தனா... ஏன் பிடிவாதம் பிடிக்கிறே? ஜீவனை ஏன் வேண்டாங்கிறே?'' ஆச்சர்யமாய் கேட்டான் கவுதம்.

''ஏன்னு காரணம் சொல்லத் தெரியலே. பட், இந்த கல்யாணப் பேச்சே எனக்கு பிடிக்கலே... விட்ருங்க ஃப்ரண்ட்!''

கவுதம் மட்டுமல்ல, சுகந்தியும் அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''என்ன... என்ன சொன்னே?''

''இந்த கல்யாணப் பேச்சே பிடிக்கலே...''

''அதில்லே... விட்ருங்க ஃப்ரண்ட்னு சொன்னியே!''

'கடவுளே... மாட்டிக் கொள்வேனா?'

''ஓ... நீங்கதானே சொன்னீங்க... நான் அப்பல்லாம் உங்களை இப்படிதான் கூப்பிடுவேன்னு... அதனால கூப்பிட்டுப் பார்த்தேன்!''

''ஓ!'' என்றான் சுருதி குறைந்து.

''உன்னை வற்புறுத்தலே. பட், ஜீவனுக்காக... அவனை தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு உங்க வீட்லே எவ்வளவுப் போராடினே? உங்கப்பாக் கூட கடைசி நேரத்துல மனசு மாறினார் நந்தனா. ஜீவனும் உனக்காகவே சொந்த பந்தங்களை உதறிட்டு வந்து தனியா வாழ்ந்துக்கிட்டிருக்கார். உனக்கொரு எதிர்காலத்தை உருவாக்கித் தருவது எங்கள் கடமை. அவரை மறுக்க என்ன காரணம்?''

''சில விஷயங்களுக்கு காரணமே இருக்காது. அவரை கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணலே. அதுமட்டுமில்லே கல்யாணத்திலேயே எனக்கு விருப்பமில்லே. என்னோட பேர் நந்தனான்னு நீங்க சொல்லிதான் தெரியும். மறுக்கலே. அதனாலேயே பழைய கதைகளை பேசிட்டிருக்க வேண்டாமே! எதிர்காலம்ங்கறது... பெண்களுக்கு கல்யாணம்ங்கற எல்லைக்கோடு வரைதானா? அது ஏன் சொந்தக்கால்ல நிக்கறதா இருக்கக்கூடாது.''

''புரியலே...!''

''கல்யாணம் வேண்டாம். எனக்கொரு வேலை வாங்கித்தர முடியுமா?''

''அமைதியான குடும்ப வாழ்க்கையை விட்டுட்டு...''

''ப்ளீஸ்...'' என்றாள் தயவாகவும், உறுதியாகவும்.

விருப்பமேயின்றி, ''சரி!'' என்றான் கவுதம்.

''இந்த ஊரில் வேண்டாம்... வெளியூரில்!''

''ஏன்?''

''ஜீவனின் கண்ணெதிரே நான் இருந்தால் அவர் எதிர்காலம் பாழாகும். அவருக்குன்னு ஒரு குடும்ப வாழ்க்கை அமையணும்னு விரும்பறேன்.''

''உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலே நந்தனா!''

அதை ஆமோதிப்பவள் போல புன்னகைத்தாள்.

சுகந்தி நர்சரிக்கு சென்றிருக்க, ப்ரியா பள்ளிக்கு சென்றிருக்க, கவுதம் அலுவலகம் சென்றிருந்தான். நந்தனா வீட்டில் தனியாக இருந்தாள்.

மின்சாரம் தடைப்பட்டது.

கோடை ஆரம்பித்து விட்டதால் ஃபேன் இல்லாமல் வெக்கையாக இருந்தது.

நந்தனா வாசல் கதவையும், ஜன்னல்களையும் திறந்து விட்டாள்.

கப்போர்டைத் திறந்து ஆல்பத்தை எடுத்தாள்.

பிரித்தவள்... அதில் இருந்த அம்மா அப்

**மூலாம்பழத்தை குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்கள் தினசரி சிறிதளவு சாப்பிட்டு வந்தால் தேவையான பால் சுரக்கும். மலச்சிக்கலுக்கும் இது மருந்தாகும். ஆனால் சீதள உடல் உள்ளவர்கள் இந்த பழத்தை சாப்பிடக் கூடாது.**

பாவைப் பார்த்து அப்படியே நெஞ்சோடு அணைத்து அழ ஆரம்பித்தாள்.

"அம்மா... அம்மா... எப்படிம்மா நீயும், அப்பாவும் என்னை விட்டுப் போனீங்க? எப்படி மனசு வந்தது? மனசு ரொம்ப பாரமா இருக்கும்மா... யார்கிட்டேயாவது சொல்லி அழணும் போல இருக்கும்மா. ஆனா யார்கிட்டே சொல்ல முடியும்? நான் நடிச்சுக்கிட்டிருக்கிற விஷயம் யாருக்கும் தெரியாதும்மா. தெரியவும் கூடாது. அதனால தாம்மா உங்கிட்ட சொல்றேன். நான் தற்கொலைக்கு முயன்றது உங்களால இல்லேம்மா. ஒரு உண்மையான நட்பை கொச்சைப் படுத்தி என்னை சந்தேகப்பட்ட சுகந்தியாலதான்!

சுகந்தியை கூடப்பிறந்த அக்காவா நினைச்சேன். இப்பவும் அப்படிதான் நினைக்கிறேன். சில உண்மைகள் என்னோடு புதைஞ்சுப் போனா தான் சுகந்திக்கு நல்லது. சுகந்தியும், கவுதமும் அந்நியோன்யமா இருக்காங்க. என்னால அவங்களுக்குள்ளே விரிசல் வந்துடக் கூடாது. அதனாலதாம்மா பழசெல்லாம் மறந்துப் போன மாதிரி நடிச்சிட்டிருக்கேன். அதனால சுகந்திக்கா நிம்மதியா இருக்காங்க. என்னால எல்லாத்தையும் தாங்கிக்க முடிஞ்சது... ஒண்ணைத் தவிர. ஜீவனை என் உயிருக்குள்ளே பொத்தி வச்சிருக்கேன்ம்மா. அவரை எப்படி மறக்க முடியும்? ஆனா, அவர் மனசை புண்படுத்திக்கிட்டிருக்கேன்ம்மா. அவரை தெரியாத மாதிரி நடிக்கிறேன். அவரை கல்யாணம் பண்ணிக்க எனக்கு ஆசையிருக்காதா? அவருக்காக தவமிருந்தவளாயிற்றே நான்? ஆனால், கல்யாணம் ஆனபிறகும் அதே நடிப்பைதானே தொடரணும்? காதலை கொச்சைப்படுத்தற மாதிரி ஆகிடாதா? அவர் கிட்டே தினமும் நடிக்க என்னால முடியாது. ஏன்னா... காதலிச்ச நாட்களெல்லாம் கல்வெட்டாய் பதிஞ்சுப் போச்சும்மா. கண்ணியமான காதலை நினைச்சு... நினைச்சு... என் வாழ்க்கையை கடத்திடுவேன். அவ்ரை நான் ஏமாத்தறேன். வெறுப்பைக் காட்டி துடிக்க வைக்கிறேன். எனக்காக காத்திருந்தவரை கைவிட்டு போகப் போகிறேன். கடவுள் அவருக்கு இன்னொரு நல்லப் பெண்ணை அறிமுகப்படுத்தட்டும். அவருக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும். இது தாம்மா என் பிரார்த்தனை. அடுத்த வாரம் இந்த ஊரை விட்டேப் போகப் போகிறேன். ஜீவனைப் பிரிய மனசே இல்லாம பிரிஞ்சு போகப் போகிறேன். அவரை பிரிஞ்சி வாழற தைரியத்தை நீதாம்மா எனக்குத் தரணும்." வாய் விட்டு கதறினாள்.

இதை அனைத்தையும் ஒரு ஜோடிக் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. மெல்ல விலகிப் போயின.

**எ**ல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள் நந்தனா.

சுருளிப்பட்டியில் இருந்த ரவீந்திரனின் பள்ளியை நிர்வகிக்கும் பணிக்கு தான் ஏற்பாடு செய்திருந்தான் கவுதம்.

அவள் உடல் நிலைக்கு கடினமான பணி அவஸ்தையை தரும் என்பதால்... எந்நேரமும் குழந்தைகள் மத்தியில் இருப்பதுப் போன்ற ஒரு வேலைக்கு சிபாரிசு செய்தான்.

தவிர, மலையும் அருவியும் சூழ்ந்த மனதிற்கினிய பசுமையான இடம். மூலிகைகள் நிரம்பிய ஊர். அந்த காற்றுப் பட்டாலாவது நந்தனாவுக்கு பழைய நினைவுகள் திரும்பி விடாதா என்கிற நப்பாசை!

சுருளி தேனி மாவட்டத்தில் இருப்பதால், இங்கிருந்து மதுரைக்கு ரெயிலில் சென்று, அங்கு ரவீந்திரனுடன் காரில் செல்கிறாள்.

அவளை வழியனுப்பும் தைரியம் கவுதமுக்கோ, சுகந்திக்கோ இல்லை. அதனால் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்ல ஜீவன் ஆட்டோவோடு காத்திருந்தான்.

சிலநாட்களாக அவனால் எந்த தொந்தரவும் இல்லை என்பதால் அவளும் மறுக்கவில்லை.

"வர்றேன்..."

"போய்ட்டு வா நந்தனா... என்னையெல்லாம் மறந்துடாதே!" என்றாள் சுகந்தி குரல் தழுதழுக்க.

"சரி"

"லீவுல இங்கே வந்துடு!"

"ம்!"

"வர்றேன் சார்!"

"சாரா? என்ன நந்தனா என்னை அந்நியனாக்கறே?" வருத்தத்துடன் கேட்டான் கவுதம்.

**இலந்தை**

**பழத்தில் வைட்டமின் ஏ, சுண்ணாம்புச் சத்து இருப்பதால் உடல் வலுவடையும். எலும்பு, பற்களுக்கு உறுதியைத் தரும். இலந்தை பழம் சாப்பிட்டால் குமட்டல், வாந்திக்கும் முடிவு கட்டும். உடல் உஷ்ணத்தை சமநிலையில் வைத்துக் கொள்ளும் சக்தியும் இந்த பழத்துக்கு உண்டு.**

''.....?!''

''பழையபடி ஃப்ரண்டுன்னு கூப்பிடு!''

''அந்த பழைய நந்தனாதான் செத்துட்டாளே!''

''....?!''

''அனாதை ஆஸ்ரமத்திலிருந்த என்னை பாதுகாத்து, குணப்படுத்தி, வேலையும் வ்ாங்கிக் கொடுத்திருக்கீங்க... உங்க ரெண்டு பேரையும் மறக்கவே மாட்டேன்!'' கை கூப்பினாள்.

''ச்சீ... கைய முதல்ல கீழேப் போடு! நீ எங்க வீட்டுப் பொண்ணும்மா... இதெல்லாம் எங்க கடமையில்லையா? சமயம் கிடைக்கிறப்ப குடும்பத்தோடு உன்னைப் பார்க்க ஓடி வந்துடுவோம். கவலைப்படாதே. ரவீந்திரன் உன் சகோதரன் மாதிரி. அவன் மனைவியும் ரொம்ப நல்லவங்க. எந்த குறையும் இல்லாம பார்த்துப்பாங்க. தங்கறதுக்கு வீடெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டான். வேலை பிடிக்கலேன்னா... உடனே கிளம்பி வந்துடு! அடிக்கடி போன் பண்ணு!''

''ம்!''

மனபாரத்தோடு ஜீவனோடு பயணித்தாள்.

ஜீவன் மவுனமாக வந்தான். நந்தனாவுக்கே ஆச்சர்யமாக இருந்தது.

ஸ்டேஷன் வந்ததும்... அவள் பெட்டிகளை எடுத்துக் கொண்டு கம்பார்ட்மெண்ட் நோக்கி நடந்தான். அவன் முதுகையே பார்த்தபடி நடந்து வந்த நந்தனாவுக்கு ஓடிப் போய் பின் பக்கமாய் கட்டிப்பிடித்து அழ வேண்டும் போல் இருந்தது.

ரிசர்வ் செய்யப்பட்டிருந்த சீட் பார்த்து அமர வைத்தான்.

ரெயில் புறப்பட இன்னும் பதினைந்து நிமிடம் அவகாசம் இருந்தது.

''இதோ வந்துட்டேன்'' என்று இங்குமங்கும் ஓடி பை நிறைய பொருட்களுடன் வந்தான்.

பிஸ்கட், பழங்கள், மினரல் வாட்டர், வார, மாத இதழ்கள் என்று நிரம்பி இருந்தது.

''எ...எதுக்கு இதெல்லாம்?'' அவன் கண்களைப் பார்த்து பேசவே பயமாக இருந்தது.

''எல்லாமே பயன்படுத்தறப் பொருட்கள் தானே?''

''உ... உங்க மனசை புண்படுத்தியிருந்தா... மன்னிச்சிடுங்க!''

சிரித்தான் ஜீவன்.

ஸ்டேஷன் பரபரப்பாய் இருந்தது. ஜன்னலருகே நின்றிருந்த அவனை இடித்துக் கொண்டு ஓடினார்கள்.

''நீ இன்னமும் குழந்தைதான் நந்து. நீ என்ன செய்தாலும், திட்டினாலும் நான் வருத்தப்படவே மாட்டேன். ஏன்னா...'' அவளை ஆழமாய் நோக்கினான்.

அதில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்திருந்தன.

'நந்து உன்னை இழக்க நான் தயாராயில்லை. உன்னை தர்மசங்கடப்படுத்தவும் விரும்பவில்லை. உன்னை நானறிவேன். நான் மட்டுமே அறிவேன். உன் நினைவுகளை சுமந்தபடி என்னாலும் வாழ முடியும். யாருக்காக, எதற்காக நீ விலகிப் போகிறாயோ... அதற்காக நானும் உனக்கு உறுதுணையாக இருப்பேன். ஏன்னா... நான் உன்னை நேசிக்கிறேன் நந்து!'

''ஏன்னா?''

அவன் பதில் கூறாமல் தோளை குலுக்கினான்.

சுகந்தி பேசிக் கொண்டிருந்ததையும், நந்தனா ஆல்பத்தைப் பார்த்து அழுதுக் கொண்டிருந்ததையும் ஜீவன் பார்த்து விட்டதுதான் அவன் அமைதிக்குக் காரணம்.

''நீங்க... நீங்க கல்யாணம் பண்ணிக்கணும்!''

''நான் ரெடி நந்து... வா பண்ணிக்கலாம்.''

''ப்ச்... விளையாடாதீங்க... சீரி



## காசநோயை தடுக்கும் தக்காளி!

**எல்லா காலங்களிலும் மிகக்குறைந்த விலையில் கிடைக்கும் தக்காளியில் வைட்டமின் சி, வைட்டமின் எச் மற்றும் நீர்ச்சத்து அதிக அளவில் உள்ளது. க்ாசநோய், நிமோனியா, டிப்திரியா போன்ற நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் தக்காளிக்கு உண்டு. பல் ஆட்டம், பல் ஈறு வீக்கம், பல்லில் ரத்தம் வருதல் போன்றவற்றையும் குணப்படுத்தும். 'ஸ்கர்வி' என்ற நோய் வராமலும் தக்காளி தடுக்கும்.**

யஸா சொல்றேன். எனக்கு எதுவுமே நினைவில் இல்லை. வீணா நாளை கடத்தாதீங்க. ஒரு நல்லப் பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்குங்க!''

''கேட்க நல்லாதான் இருக்கு. ஆனா ஒரு வேடிக்கைப் பாரேன் நந்து! எனக்குன்னு இந்த உலகத்திலே பிரம்மன் உன்னை மட்டும்தான் படைச்சிருக்கானாம். வேறப் பொண்ணுக்கு எங்கேப் போவேன் நீயே சொல்லு!''

வேடிக்கையாய் சொன்னாலும், அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தை கிறிப் பார்த்தது.

'சே!' சலித்துப் போனாள்.

ரெயில் புறப்பட ஆரம்பித்தது.

கடைசி கடைசியாய் அவனை பார்ப்பதுப் போல் பார்த்தாள். இதயத்தில் நிரப்பிக் கொண்டாள்.

''நந்து...''

''ம்...''

''சீரியஸாக ஒண்ணு சொல்லட்டுமா?''

''ம்...''

''ஐ லவ் யூ!''

''...?!''

''நான் உன்னை அங்கே வந்தெல்லாம் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன், பட்...''

''.....?!''

''நான் உனக்காக காத்திருப்பேன் நந்து!'' ரெயில் வேகமெடுக்க... கூடவே ஓடினான்.

''.....!?''

''அடுத்த மாசமோ, அடுத்த வருஷமோ... இல்லே அடுத்த ஜென்மமே ஆனாலும் உனக்காக காத்திருப்பேன் நந்து!''

''நான்தான்...''

''ப்ளீஸ்... என்னைப் பேச விடு!''

''போய்டுங்க... ட்ரெயின் வேகமா மூவ் ஆய்டுச்சு!'' பதறினாள்.

''உன் மனசுல நான் விதைச்சது என் உருவத்தையில்லே நந்து... காதலை... உண்மையான அன்பை...''

''.......?!''

''உன் மனசு என்னைக்காவது ஒருநாள் மாறும். ஐ... மீன் பழசெல்லாம் நினைவுக்கு வரும். இதெல்லாம் இல்லேன்னாலும் புதுசா காதல் வரும்! என் காதல் உன்னை என்கிட்டே கொண்டு வந்து சேர்க்கும் நந்து...'' வேகமாய் ஓடியதில் மூச்சு வாங்கியது.

பொங்கி வந்த அழுகையை மறைக்க முகத்தை திருப்பிக் கொண்டாள் நந்தனா.

''அதுவரைக்கும் காத்துக்கிட்டே இருப்பேன்!'' அவன் வார்த்தைகள் காற்றில் தேய்ந்து காதில் விழுந்தன.

எட்டிப் பார்த்தாள்.

ரெயில் அவனை விட்டு ரொம்ப தூரம் வந்திருந்தது.

கம்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் இவளையே பார்ப்பதை கூட பொருட்படுத்தாமல் கர்ச்சிப்பால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

இரண்டு பாக்கெட்டிலும் கைகளை விட்டுக் கொண்டு வளைந்து... நெளிந்துப் போய்க் கொண்டிருந்த ரெயிலை பார்த்துக் கொண்டு நின்ற ஜீவனின் கண்களிலும் துளிர்த்தது கண்ணீர்.

'எப்போ என்னிடம் வரப்போகிறே நந்து?' ஏக்கத்துடன் பார்த்தான்.

நேரம் பார்த்து, காலம் பார்த்து ரோஜாவின் கழுத்தைத் திருகி கையில் கொடுத்து காதல் சொல்லி விட்டு காதலைக் கிள்ளி எறிய நேரம் காலம் பார்க்காத ஆண்கள் மத்தியில்...

காத்திருக்கிற ஜீவனின் காதலில் ஜீவன் இருக்கும் போது... காதலுக்கு ஏது மரணம்?

**(முற்றும்)**



## பித்தம் தணிக்கும் பம்பளிமாஸ் பழம்

**எலுமிச்சை, ஆரஞ்சு வகையை சேர்ந்த பம்பளிமாஸ் பழம் அடிக்கடி சாப்பிட்டால் உடல் வலிமை அடையும். பித்தத்தை தணிக்கும். இந்த பழத்தில் உள்ள வைட்டமின் ஏ உடலுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்யும்.**